# ஸ்ரீப்ராணேஷ தாசரின்
# கன்னட ஹரிவாயு ஸ்துதி

**கன்னடத்தில்:**
**ஸ்ரீகிருஷ்ண ஜாலிஹாள ஆசார்யர்**

தமிழில்

‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
**89044 58276. sathyatv123@gmail.com**
**jagannathakesava.blogspot.com**

# ஸ்ரீப்ராணேஷ தாசரின்
# கன்னட ஹரிவாயு ஸ்துதி

**ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால்**
**மொதகல்லு ஸ்ரீசேஷதாஸரின் ஆராதனை நாளான**
**மே 9, 2022 அன்று வெளியிடப்பட்டது**

**ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து**

**தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்:**

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு
Ph: 89044 58276
haridasa.vijayam@gmail.com

# ஸ்ரீ ப்ராணேஸ விட்டல தாஸரின் (கன்னட) வாயு ஸ்துதி

## வாழ்த்துரை

ஸ்ரீ ப்ராணேஸ விட்டல தாஸர் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தரின் அருளுக்கு பாத்திரரானவர். தாஸர் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தருக்கு காணிக்கையாக அளித்த பூமியிலேதான் பின்னர் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தரின் ஸ்வப்ன பிருந்தாவனம் விஸேஷ ஸன்னிதானத் தால் அமைந்தது குறிப்பிடத்தக்கது. தாஸர் ப்ராணேஸ விட்டல என்ற முத்திரையில் கன்னடத்தில் பல்வேறு க்ருதி களை ரசனை செய்து உள்ளார். அவ்வகையில் தாஸர் 87 பத்யங்களில் அருளிய கிரந்தம் (கன்னட) வாயு ஸ்துதி என்பதாகும்.

ஸ்ரீமன் மத்வாச்சாரியாரின் சிஷ்யரான ஸ்ரீ த்ரிவிக்கிரம பண்டிதாச்சாரியர், ஆச்சாரியரின் அனுக்கிரகத்தினால் ஒருமுறை வாயு பகவானின் மூன்று அவதார ரூபங்கள் (ஹனும, பீம, மத்வ) முறையே ஸ்ரீ ஹரியின் மூன்று ரூபங்களை (ராம, கிருஷ்ண, வேத வ்யாஸ) பூஜிக்கும் காட்சியை தரிசனம் செய்யும் பேறு பெற்ற மாத்திரத்தில், ஸ்ரீ வாயு பகவானின் மூல ரூபம் மற்றும் மூன்று அவதாரங்களைப் பற்றி வர்ணித்து ஸ்தோத்திரம் செய்து 41 ஸ்லோகங்களைக் கொண்ட வாயு ஸ்துதி என்னும் ஸ்தோத்திரத்தை ஆச்சாரியாரிடம் சமர்ப்பணம் செய்ய, ஆச்சாரியரும் அதனை ஏற்று அனுகிரகம் புரிந்ததுடன், ஸ்ரீ நரஹரியின் நகங்களை விசேஷமாக ஸ்தோத்திரம் செய்யும் வகையில் இரண்டு சுலோகங்களில் 'நகஸ்துதி' என்னும் ஸ்தோத்திர கிரந்தத்தை ரசனை செய்து அதனை வாயு ஸ்துதியின் முன்பும் பின்பும் ஸம்புடீகரணமாக பாராயணம் செய்யும் வகையில் அளித்து அருளினார். இதுவே 'ஸ்ரீ ஹரிவாயு ஸ்துதி' என்று பிரசித்தியாக உள்ளது.

ஸமஸ்கிருதத்தில் கடினமான சொற்களுடன் ஆழ்ந்த கருத்துகளைக் கொண்டு அமைந்த இந்த ஸ்தோத்திரத்தை, பொதுவாக ஸ்த்ரீகள் பாராயணம் செய்வது நமது சம்பிரதாயத்தில் இல்லாது இருப்பதினால், பின்னாலே ஸ்ரீ ஸ்ரீபாதராஜர் ஸ்ரீ ஹரிவாயுஸ்துதியின் ஸாரத்தை ஸ்த்ரீகளுக்கும், ஸமஸ்கிருதம் அறியாத பாமரர்களுக்கும் பக்தி ரசத்தை ஊட்டும் வழியில் 'கன்னட வாயு ஸ்துதி' என்றே பிரசித்தியான 'ஸ்ரீ மத்வநாம' என்னும் கன்னட கிரந்தமாக அருளினார். அதை அடியொற்றி ஸ்ரீ ப்ராணேஸ விட்டல தாஸர் ஸ்ரீ ஹரிவாயுஸ்துதியின் ஒவ்வொரு ஸ்லோகத்தின் பொருளையும் உள்ளடக்கி கன்னடத்தில் தெளிவாக எளிதாக பாமினி ஷட்பதி அமைப்பில் அனைவரும் பாராயணம் செய்வதற்கு ஏற்றதாக (கன்னட) வாயு ஸ்துதியாக அருளியுள்ளார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த "ஸ்ரீ ப்ராணேஸ விட்டல தாஸரின் (கன்னட) வாயு ஸ்துதி" என்ற உயரிய கிரந்தத்தின் மூலத்தையும், அதன் விஸேஷ அர்த்தங்களையும் கன்னடத்தில் வழங்கிய ஶ்ரீ கிருஷ்ண ஜாலிஹாள ஆசார்ய அவர்களின் படைப்பைத் தமிழில் 'ஜகன்னாத கேஸவ' திரு.சத்ய நாராயணன் அவர்கள் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவர் சமீபகாலத்தில் வெளியிட்டுள்ள பல மொழிபெயர்ப்பு நூல்களின் வரிசையில், இதுவும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. அவருக்கு ஸ்ரீ ப்ராணேஸ விட்டல தாஸரின் அந்தர்யாமியான ஸ்ரீ ஹரி ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வர்யம் மற்றும் மனச்சாந்தி இவைகளை அருளி, இதுபோல் இன்னும் பல மொழிபெயர்ப்பு நூல்களை தமிழில் வெளியிட ப்ரார்த்தனை செய்கிறேன்.

மேடவாக்கம்,சென்னை 'பிரஸங்க பூஷணம்',
'பிரவசனபூஷணம்','மத்வரத்னா'
30-4-2022 **S. லக்ஷ்மிபதிராஜா**

# ஸ்ரீபிராணேஷ தாசர் இயற்றிய
# ஸ்ரீஹரிவாயு ஸ்துதி
## (மூலம் மட்டும் – பாராயணத்திற்காக)

ஒந்து$^3$ தி$^3$ன ப$^3$த$^3$ரி வனகெ ஆ
நந்த$^3$தீர்த்த$^2$ரு போப ஸமயதி$^3$ |
அந்து$^3$ த்ரிவிக்ரம பண்டி$^3$தாசார்யரு அவர கூடா$^3$ |
ப$^3$ந்து$^3$ நாராயண கு$^3$டி$^3$யலி
நிந்திரலு கு$^3$ரு ஒளகெ$^3$ பொக்கத$^3$
ஹொரந்தி$^3$ஸிரெ ஹொரகி$^3$ந்த$^3$
நோட்$^3$த$^3$ரு த்$^3$வார ஸந்தி$^3$யலி ||1

த்$^3$வாரதி$^3$ ஜாம்பு$^3$வனு க்ருஷ்ணன
ரூபதொ$^3$ளு ஸ்ரீராம இனகுல
தீ$^3$ப தே$^3$ஹவ கண்ட$^3$ தெர மத்$^4$வார்யரொளு ஹனுமா
தா பொளெத$^3$ வோல் நோடி$^3$ அவரிகெ$^3$
போபஹஹுதெ$^3$ந்தெ$^3$னுத நிஸ்சய
ஸ்தா$^2$பிஸூத மூலக்கெ அவதாரக$^3$ள ஸ்தோத்ரவனு ||2

மாடி$^3$ வாயுஸ்துதிய க்ரந்த$^2$வ
நோடி$^3$ரம் தோரிஸூத குருக$^3$ள
பே$^3$டி$^3$த$^3$ரு புனஸ்சரணெயிந்தி$^3$து$^3$ பட$^2$ன மாள்பரிகெ$^3$
நீடு$^3$வது$^3$ ஒந்தொ$^3$ந்து$^3$ ஷ்லோகக்கெ
ஆடிதா$^3$ ஆ காம்ய ப$^2$லவ
ரூடி$^4$யொளு ப்ரக்$^2$யாதவாக$^3$லி எந்து$^3$ ப்ரார்த்$^2$திஸலு ||3

வர த்ரிவிக்ரம பண்டி$^3$தாசா
ர்யரு ஸகல பண்டி$^3$த ஸ்ரேஷ்டரு
கர முகி$^3$து$^3$ ஸிஷ்யத்வ பா$^4$வதி$^3$ தோரலது$^3$ நோடி$^3$
ஹருஷத$^3$லி ப்ரஸன்னராகு$^3$த
வரவு பே$^3$டி$^3$த$^3$ தெரத$^3$ பீ$^4$ஷ்டவு
கரவ ப$^2$லக$^3$ள கொடு$^3$வ கேவல விஷ்ணுஸ்துதி ஹொரது ||4

ஸருவ ப3கி3யலி தம்ம ஸ்தோத்ரவு
த2ரவெ யுக்தவல்லவிது3 மங்க3ள
தர ஶ்ரீ நரஹரி நக2த3 மஹிமெய ஸ்துதிய ஷ்லோகக3ளு
எரடு3 ரசிஸுத ஸம்புடக்கா
பரியு த4ரியொளதீவ காந்திலி
நிருதத3லி பவித்ரவனு நம்மெல்லரனு மாடு3வனு ||5

ஸகல வேதாக்3ஷ்ரதி3 நியா
மக1ளெனிஸி த்ரைலோகத3வரிம்
த3கி2ள பூஜெகொ3ண்டு3 ஷரத்காலேந்து3ப்ரபெ4 போல்வ |
ஸுக2த3 ஷுப4 கிரி நகெ3ய பெ3ளகு3வ
ககுப4க3ளுள்ள பா4ரதிய பதி பத3
நக2தூ4ளிக3ளலி அதிஷய தோஷ த4ரிஸித3ளு ||6

தி3விகெ ப3ஹு கலகல த்4வனி
தவகதி3ம் திளித3னிஷ ஸேவெயு
கவலு இல்லதெ3 மாடி3 நாராயணன ஞானத3லி |
கவிது3 தம லோகக3ள காணத3
தி3விஜரெல்லர மௌளியல்லிஹ
ரவி ப்ரகாஷத3 வோலு தோருவ ரத்ன பங்க்திக3ளு ||7

பரம ப4க்த்யாத்ரேக த்3ருட3தொ3
ப்3ப3ரிகெ3 ஒப்3ப3ரு ஸங்க4டி1ஸி ஈ
த4ரிது3 ப3ந்தொ3த்துதிரெ ஸக4ட1த்கார ஷப்3த3த3லு |
வருஸு வஞ்சுக3ளு த்துமாங்க4ரிலி
ஹோருடு1வ ஸுரஜ தி3ஷவுதி3ம் பௌகு3வ
ஹருஷதீர்த்த2ர பாத3தூ4ளி மாடு3வது3 ஸுபவித்ரா ||8

ஜனன மனோ வ்யதெ2 வ்யாதி4க3ளு கா
ரணத3 அஞ்ஞானவு மரளெ பா3
ணஹவு சே2தி3ஸி ஸ்ரேஷ்டவாகி3ஹ ப4க்தி ஞானத3லீ
மினுகு3திஹ ஞான்ஹாருஷ ஸுக2 மய
மனுஜரொளு யோக்3யரிகெ த3யத3லி
தி3ன தி3ன வ்யக்தியனு மாடு3வ கு3ருவு பவமான ||9

ஸுள்ளு ஞானதி$^{3}$ கத$^{3}$டி$^{3}$ஸுவ மன
உள்ள த்$^{3}$வேஷதி$^{3}$ தூ$^{3}$ஷிஸுவரன
வல்ல தை$^{3}$த்யர அந்த$^{4}$தமஸிலி ப$^{3}$ஹள காலவனு(த$^{3}$லி)
அல்லி இரிஸுவ து$^{3}$க்க$^{2}$ கொடு$^{3}$தலி
கொல்லிஸுவ வாதாங்க்$^{4}$ரி ஸ்துதியனு
ப$^{3}$ல்லெனெ சென்னாகி$^{3}$ மாட$^{3}$லு ஷக்த நானல்ல ||10

க்ஷோணியொளு கலி க்ருதத$^{3}$ மித்$^{2}$யா
ஞானதோ$^{3}$ஷதி$^{3}$ து$^{3}$ஷ்டராகி$^{3}$ஹ
மானவரொளதி$^{4}$காரி ஜனரிகெ$^{3}$ தத்வமார்க்க$^{3}$வனு |
காணிஸுவ இச்சுள்ள தி$^{3}$விஜரு
ஏணலாஞ்ச$^{2}$ன இந்தி$^{3}$ர ஷிவ ரவி
ஸ்ரீனிவாஸ மஞ்ச க$^{3}$ருடா$^{3}$தி$^{3}$கள கையிந்தா$^{3}$ ||11

ப$^{3}$ந்து$^{3}$ மொரெ ஹொக்கந்த$^{2}$ புருஷர
சந்த$^{3}$தி$^{3}$ம் ரக்ஷிப பளித்தா$^{2}$
தி$^{3}$ந்த$^{3}$ ப்ரதிபாத்$^{3}$ய மத்$^{4}$வாவதாரவனு மாட்தா$^{3}$ |
முந்தெ$^{3}$ பி$^{3}$ரம்மனபத$^{3}$வியைது$^{3}$வ
எந்து$^{3}$ விபத்துக$^{3}$ளில்லத$^{3}$ புரன
இந்து$^{3}$ ஸ்துதிஸலு ஷக்தனல்லந்த்$^{3}$ஹேள பே$^{3}$கே$^{1}$னோ ||12

ஸ்வருசி ஸமுதா$^{3}$யவனு லோகதி$^{3}$
ஹரவித$^{3}$ புபனு பீ$^{4}$ம நாமதி$^{3}$
த$^{4}$ரியொளுதி$^{3}$ஸுத மிஞ்சினோல் ப்ரகாஷ உள்ளந்தா$^{2}$ |
ப$^{4}$ரதி$^{3}$ பா$^{3}$ஹு ப$^{3}$லதி$^{3}$ந்தெ$^{3}$த்துவ
வரக$^{3}$தெ$^{3}$ய சன்னாகி$^{3}$ உதி$^{3}$ஸுவ
த$^{1}$ரணி காந்தி$^{1}$ய தெரத$^{3}$ பா$^{3}$ஹுபுரியுக்த தோளுக$^{3}$ளு ||13

க்$^{2}$யாத வாகி$^{3}$ஹ பு$^{4}$ஜதி$^{3}$ த$^{4}$ரிஸித$^{3}$
ஆதனே யதி ஸ்ரேஷ்டரிந்த$^{3}$லி
நீத பூஜெயகொ$^{3}$ண்டு$^{3}$ ஹரி விஷயகத ஞானக்கெ |
நீத பூ$^{4}$ஷா மணி யெனிப ஈ
பூ$^{4}$தளகெ மாருதனெ நின்னய
ஸ்தோதர மாள்பந்த$^{2}$ ஸுமதிய கொடு$^{3}$வதீ$^{3}$னெனகெ$^{3}$ ||14

நரர ஸம்ஸாரத3லி ப3ந்தி3ஹ
பரிபரி உத்க்ருஷ்ட தாபக்கெ
நிருதத3லி ஷாந்தியனு கொடு3திஹ ஸத3ய ஸ்னேஹத3லி
கி1ரி நகி3ய பொராம்பு3து3தி3ஸித3
நிரது3ஷ்ட வித்3யெம்ப3 மாணிக
கிரண பங்க்திக3ளிந்த3 தி3ஷ சென்னாகி3 தும்பி3ர்தா3 ||15

பரம ப4க்தி ஞான மொத3லை
ஷ்வரிய காரண ஷிரி வத்ஸ சின்
ஹரி ஸமீபத3ல்லிருவத3கெ ப3ஹுயோக்3யவெந்தெ3னிபா
க3ருட3 மொத3லாத3ர்க்கெ3 ஸ்ரேஷ்டனெ
ஷிரி மதா3னந்தா3ர்ய நெம்போ4ல்
ஷரதி4 யெனகா3கு3திஹ்ய ப3ஹளானிஷ்ட சே2தி3ஸலி ||16

ப4ரதனே த4ரி ப4க்த ஜனரிகெ3
முரிது3 கட்டித3 ப4வத3 பாஷவ
கொரது3 ஸுக2க3ள கொட்டு பா4வி பி3ரம்மனெந்த3னிபா |
த்3யுரமணனெ நினகா3கி3 அஞ்சலி
கரத3 ப3ஞ்த4வு ஷிரஸினலி த்ருட4
தரதி3 அதி க4ட்யாகி3 ஸந்தத கட்டிதென்னிந்தா3 ||17

எரடு3 ஸந்தாபக3ளு ப4வத3லி
நிருத யைதுவ நமகெ3 நீனெ
ஹருஷத3லி ஷட்கு3ணத3 ஸம்பத3 மாத4வன நின்னா
சரண த்3வயத3லி ஞான பூர்வக
ஸரவதோதி4க ஸ்னேஹ லக்ஷண
ப4ரித த்ருட3 ப4க்தியனு மாடு3வ மனஸனீட3வது3 ||18

அரஸ ஹே ஆனந்த3 தீரத2
ஸருவரிகெ3 அப4ய ப்ரத3னெ நீ
திருவுதிஹ ஹுப்3பி3ன விலாஸவுயெணிஸி நோள்பெனெவெ
ப3ரிதெ3 தும்ப3ல ஷக்த வாகி3ஹ
ப3ரிதா3ஸெய பெ3க்கினந்த3தி3
கரம3ந்தி3பரிகெ3 எல்ல பே4த3த3 பரிய பி4ராந்திப4யா ||19

அனுப4விஸுதிஹ ப்4ரூ விலாஸவு
க4ன ஷஷி ரவி ஸஹிததா3 நப4
வனு ப3ஹள ராமர விபூ4திலி பொம்மதிஹ த4ரிய |
அனிமிஷர நாயகன லோகவ
வினயத3லி ஸ்ருஜிஸுதலி பாலிஸி
கொனெயவரெல்லரன ஸம்ஹர ஹைதி3ஸுதலிஹுது3 ||20

அமரரெ மொத3லாத3 ஸுஜனர
நமன பூஜெய கொ3ம்ப3 நின்னய
விமல த்ருதீயவதார ஸேவிஸுதிருவராவரிகெ3 |
ரமெய ரமணனனுசரர கையலி
த4மகத3லி ஹாரிஸுவ சாமர
கமலமுகி2யரு மனோஹராலங்காரக3ளுள்ள ||21

கொரளொளாஸக்ததலி த்ருடதலி
நிருமலதொளுப்புவ ப்ரகாஷதி
தருணிர்யவ்வன லீலெ லாவண்யதலி ஸௌந்தர்யதீ |
பரிபூர்ணராதவர ஸ்தனகள
பரத ஸுகதாலிங்கனெய மஹ
ஹருஷதிந்த வைகுண்டதொளு காந்தியலி வொப்புவரு ||22

தே3வதெக3ளெல்லரிகெ3 நீனெ
தே3வனாதா3னந்த3 தீர்த்த2னெ
பா4வ ஷுத்3த4தி3 நின்ன ப4ஜிஸெ முகுந்த3 மந்தி3ரதீ3
தீவி கொண்டி3ர்பா பரிமளத3 நன்
த்3யாவர்த்த மந்தா3ர குந்த3த3
ஆ வனதி3 ப3ருவந்த2 மந்தா3னிலனு ஸுக2 கொடு3வ ||23

அளஸ்வரகிந்ததி4க கா3யன
லலனெயர கையிந்த3 ஸேவெய
கொ3ளுவ முக்தாதி3ந்து3 அஹிமகு3 ஸ்மர அஹிபஸுரபா
க3ளு மொத3லு பூஜிஸுவ விஷ்ணுன
பொளலொளனிஷா நந்த3தி3ந்த3லி
ப3ளகெ மாடு3த இரலு எல்ல ஸுக2வ கொடு3திஹவு ||24

ஆதி3 வித்3வாம்ஸரு க3ளிகெ3 ஸ்ரீ
மோத3 தீர்த்த2 ப3ஹள தபிஸுவ
காத3 ஷிலெ ஸால் ப்ரகட மாடு3வ க1ட1க1ட1 த்4வனியா
போ3த4 ஸுஹ சன்னாகி3 க4ட்டிஸெ
லாத3 சபல விபா4க3 யைதி3தோ3
பாதி3 கிடி3க3ள பங்க்தி கிரணவு ஹரவித3த3ரல்லி ||25

ப3லு குதி3ஸுதிஹ்யனர்க ஸஹக
த்தலெய கவிதி3ஹ அந்த4 தமஸி
நலி பி3த்3து3 பா3தி4த ஷரீரத3 தவ வைரிக3ளிகெ3 |
முளித3 கு3ருத்வத3 நின்ன தூ3தரு
க3ளு எல்ல கடெ3யலி அவரிகெ3
அளுவ பரி து3க்க2வனு ப3டி3ஸுதலிஹரு அஹுத3ல்லி ||26

த4ரெயொளகெ3 மத்3கு3ருவெ ஸ்ரீ ஹரி
சரண சிர த்4யானத3லி மங்க3ள
த1ர ஸ்வரூபவ த4ரிஸி லவலவிகெய ஸுரர கைய்யா |
நிருத ஸேவ்யனெ நின்ன ப3ளி நெல
ஸிருவ நாத1னாதா3ஸிஸித3 ஆ
நர விசேஷாகார ஈ ப3கெ3 கஷ்ட ப3டு3திஹனு ||27

ஸுலப4யில்லதெ3 க்லேஷ து3க்க2தி3
ப3ளலி பி3ட்டிஹ தொ3ட்3ட3 நந்த3வு
கலது ஸம்ஸாராதி3 நிரந்தர அல்லெ இருதிஹனு |
ப3லு கஷ்ட தை3கஷ்ட வாகி3ஹ
நெலெய நரகத3 லோகத3ல்லெயெ
கெலவு காலத3 லாத3ரெயு ஸரி வாஸ மாட3னு ||28

கீவு நெத்தர மூத்ர விஷ்டத3
டா2வு க்ரிமி குலதி3ந்த3 கத3டி3த3
நோவினந்த2 தமஸினலி சன்னாகி3 முளுக3தலி |
தாவு க்ஷுத3த3லி க்ஷீணராதா3
ஜீவரிகெ3 க்ருஷராத3 ராக்ஷஸ
ராவளியு த3ந்த1த3லி நக2த3லி சூர்ண மாடு3வரு ||29

தெரெது3 க்ஷோபிஸு வக்ஷியலி நி
ந்னரிக3ளனு காடு3வரு அல்லிஹ
க்ஷுர முக2த3 பக்ஷிக3ளு நடி1ஸுத கா4யமாடு3வரு |
த்வரதி3 ஷக்த்யாத3ஸ்த்ர ஸமூஹவு
கரது3 பீடி3ஸுதிரலவர ப3ளி
நெரெது3 ஜக்3கு3தலிஹ வஜ்ரஸமான ஜக3ளிக3ளு ||30

மாத பித நிர்து3ஷ்ட கு3ருவெ
ப்4ராதரிஷ்டாப்த ஸுபா3ந்த4வ
வாத தே3வனெ ஸர்வரந்தர்யாமிகனெ முப்பா
தீத ஜனி ம்ருதி ரோக3க3ளிகெ3
தா4துகெ3டி3ஸுத ஜரகொடு3த ஹே
மாதரிஷ்வனெ ஆருகு3ண ஐஷ்வர்ய ஸம்பன்ன ||31

ஹரிய ப3ளி நின்னலி ஊர்ஜித
நிரனிமித்த நிர்வ்யாஜ்யதி3ந்த3லி
ஸ்திரதொ3ளிஹ ஸத்கு3ணத3 உதவளி தொ3ட்3ட3 ஷாஷ்வதத3
வர ப4குதியனு ஷீக்4ரதி3ந்த3லி
மருத தே3வனெ நீனு அந்த:
கருணத3லி ஒலிதெ3னெகெ3 கொடு3 அச்யுதன நிஜதா3ஸ ||32

கு3ண க3ணக3ளகி2ளத3லி நாரா
யணகெ3 அத்யுத்தமதி3 இஹ கா
ரணவு ஆ விஷ்ணு நலி ஸ்ரேஷ்டாத3ந்த2 ப4க்தியனு
வனஜ ஆலய த4ரிய ஆலிங்
க3னியொளலிஹ ஹரியல்லி ஆவா
தனு மாடு3திஹனு தருவாயத3லி ஹரி குரிது ||33

பரிவாராப்தகராகி3 இருவரு
ஸரிஸிஜாஸன ஷ்வஸன விஹக3ப
உரக3பதி ருத்ரேந்த்3ர மொத3லாத்3ஹரிய தா3ஸரொளு |
ஹிரிகிரிது தரதம்ய சன்னா
க3ரிது ஸ்மரிஸுத ப4க்தி மாடு3வ
நரகெ3 மத்3கு3ரு மருதனீஷ ரக்ஷிஸுதலிஹனு ||34

கு3ருவெ தத்வஞான இஹ அப
வரக3 யோக்3யத3 ஜீவ மானுஷ
வரரு மொத3லாத3ரிகெ3 தரதம்யானுஸாரத3லி |
ஹருஷத3லி ஸுக2ப3டி3ஸி ஸலுஹுவி
நிருத ஸம்ஸாரிக3ள ஸ்வர்க்க3தி3
நிரய பூ4மியொளிடு3வி மிஸ்ரஞான காரணதி3 ||35

அன்ய ஞானர அந்த4தாமி
ஸ்ரென்னுதிஹ தமஸினலி அதித்3ருட2
து3ண்ணிஸுவி து3க்க2வனு ஈ ரிதியலி ஹரி ஆக்ஞா
நின்னொளிஹதெ3ந்தெ3னுத ஷ்ருதி ஷத
க4ன்ன இதிஹாஸக3ளு பா4ரத
வன்னெ மொத3லு ப்ரஸித்3த4 க்3ரந்த2வு கேளுதிஹவெல்ல ||36

வாத நினகா3னமிஸுவெனு ஈ
பூ4தளதி3 ஹனுமெம்ப3 நாமதி3
க்2யாத அவதார ப3ஹு வடு த4ர்மவுள்ளந்தா2
நீதபூஜெய எல்லரிந்த3லி
தா தெகெ3து3 கொம்ப3ந்த2 தோள்ப3ல
தா3தி1ஷய யித்3த3ந்த2 தாளுவ ஷக்திஸஹிதாத3 ||37

அதி ப3லத3 அவதார நீனே
அதுல ஸ்னேஹத3லிந்த3 ப4க்திலி
ஸதத ஸேவிஸுவந்த2 தே3ஹவ த4ரிஸி இஹனெம்பா3
ப்ரதி தி3வஸ அப்ரீயவனு த3ஹி
ஸுத து3ரித அஞ்ஞான கெடி3ஸுத
க்ஷிதிமக3ள பதியல்லி ஹரிப4க்தியனு இச்சயிஸி ||38

அதி4கப்ராணனெ பூர்வத3லி நீ
முத3தி3 ஐவத் ஸஹஸ்ரமித கா3
வத3த3 வ்யவதா4னமித ம்ருதர(த3) ஸஞ்சீவனௌஷத4வா|
மொத3லெ ஆகி3ஹ வனஸ்பதிக3ளிம
து3த3தி4யனிஸித3 க3ந்த4மாத3ன
சதுரனே எல்லா கி3ரிய லங்காபுரகெ தந்தி3 ||39

தருவாய லங்கித3 கித்தித3
கி3ரி தெகெ3து3 கொண்ட்3ஹாரி மேலகெ1
ஹரிபரத3 மார்க்க3த3லி ப3ந்தா3 ராக4வாங்க்4ரியலி ।
ஷிரவிடு3த நமனவனு மாடி3த3
மருதனே நின்னகி2ல லோகத3
நரரு ஒந்தே3 க்ஷணதி3 நோட்3த3ரு ப3ஹுப்ரஸித்3த4விது3 ||40

ஸரி ரஹித மதி முக்2ய ப்ராணனெ
கி3ரிய ஷத யோஜனத3 உன்னத
பரிமிதத3 விஸ்தார அஷ்டே ஆத3ரு ஸரியே
ஹிரித்3னு ஸ்ரேஷ்டவாகி3ர்த்3த3 கு3ண வா
நரத3 ரூபத3 நின்ன ஆடதி3
தருவாய மணி லேஷதோபாதி3 ரிஸு பட்டிதெலா ||41

தருவாய தம்ம தம்ம ஸ்த2ளத3லி
ஸ்தி2ரதொ3ளிஹ பாஷாண ஜாலவு
வரஸுதிரெ முரிதி3ர்தா3னி கித்திர்த்த3 கூ2னக3ளா
யிரதெ3 மாஜுத மொத3லினந்த3தி3
முரியாதி3யனெ ஆயிது கேளு கபி
வர ஷரீரனெ தவ குஷலகோ3ஸ்கர நமனவம் மாள்ப ||42

ராவணாரிகெ3 ப்ரிய நடிஸுவ
பா4வ படு ஆத3ந்த2 கரத3லி
ஸூஸுவ கங்கணவு கோடி1 தடித்ப்ரகாஷவனு
தீ1வி தா3ஸெய நின்ன முஷ்டியு
தே3வ எனகெ3 அபீ4ஷ்ட2 ப2லக3ளு
ஈ வத3கெ ஷக்தல்ல வேனோ ஆ முஷ்டி2யிந்த3 ||43

து3ருள தை3த்யாதி4ப த3ஷாஸ்யன
ப4ரம கவசவ ஸீளி அஸ்தி2ய
முரிது3 நுக்3கு3னளந்தெ பூர்ணவ மாடு3திரலவனா
உரவு ஜன நோட3க்கெ ஹாடக
பரவதத3 தீரத3லி அத்யம்
திருவ ஷங்க2க3ளந்தெ ஆ க்ஷணதொ3ளகெ3 அது3 ஆய்து ||44

த4ரி ஸுதெகெ3 ஸ்ரீராமனாக்ஞவ
த்வரதி3 பேளுத பி3ரம்ம ருத்3ரர
வரக3ளிந்த3லவத்4யராகி3ஹ ராக்ஷஸருக3ளனா
மரண மாள்பத3 காதி3யெனிஸுத
ஸருவ ஸேவெயொளிரலு ஹுட்டித3
கருண ரஸதா3ர்த்3ரா மக3தொ3ப்பரிகொ3ஷ்யவஹ த3ந்தா2 ||45

பரமேஷ்டி பத3 கொடு3த அஸத்3ருஷ
கரதளவு மூர்த்4னி யொளிடு3தலி
கு3ருவெ நின்ன க்ருதார்த்த2 மாடெ3-பி4வ்யக்த ஸ்னேஹத3லி |
திருகி3 விகஸித அப்ஜதோ3ள் கண்
தெரெது3 ஸ்ரீராமெப்3ஹெஸரின
ஹரியு நின்ன விசேஷ நோடு3த போ4க3 மாடி3த3னு ||46

எலோ எலோ க்ரீடா3 மொத3லு கு3ண
க3ள விசிஷ்டத3 பீ4மசேனனெ
ப3லு க்லேஷ ப3டு3வந்த2 பூ4ஸுரரல்லி த3யெவெம்பா3 |
செலுவ பாஷாதீ4ன நின்னிந்
தளியுவந்த1தி1 ப3லத3 ப3கனா
பொளல ஜனரிகெ3 விக்4ன கொந்த3ஸுர நதி4க ஸுக2வித்தே|47

தருவாய து3ர்பு3த்3தி4யாத3 அ
ஸுர மொத3லிக3 கிர்மீரவன
பரிஹாஸதி3ம் கொந்தெ3யா ஈ மஹிமெயுள்ளா |
கு1ருகு1லகெ பதியாத3 நிமகோ3
ஸ்கர நின்னய கர்மக3ளிகு3
பரம ப4குதியலிந்த3 நிருததி3 நமன மாடு3வெனு ||48

ஜரெரஹித தே3வதெ க3ளெல்லர
ஹிரியனெனிஸுவ பீ4மஷேனனெ
ஜரிஜகாயத3 அஸ்தி2 ஸந்தி4க3ளனு அனாயாஸ
முரிது3 யுத்3த4தி3 ஸத்4வரபரி
ஹரிய பக்ஷக3ரிக3ளெனிஸிருவ
து3ரளரீஷா மாக3த4ன மேத4த3லி பஷுவோலு ||49

மரண மாடி3 ப்ரத்யக்ஷ தோருவ
த4ரியொளகி2ளா யாக3 பு4ஞ்சிப
ஹரிகெ3 யாவத்த்ருப்தி ப3டி3ஸிதை3 பூஜ்ய ஸ்ரீ பீ4மா
அரஸ ஸோமாத4ரி மேத4த3லி ஆ
ஹரியு பூர்ணாத3ந்த2 த்ருப்ததி3
மருத நிம்மொளு ஸம்ப3ந்த4 மாடி3த3னெ ஏன்ஹேளோ ||50

அரி ஸம்ஹாரக நாத3 ஸம்ப1
த்கரத3 ஆனந்தா3ர்ய நாமதி3
இருவ பீ4மன ஸிம்ஹதோ3பாதே3லி அபி4வ்ருத்3த4
ஹிரி நகி3யு யுக்தாத3 நிம்மொளு
ப3ருவ ப3ஹளா க்ஷோஹிணி த3ள
த்வரதி3 ஸம்ஹார மாடி3 ப3ஹு நிபுணத3லி ரணவன்னு ||51

தா3வ ஸர்வோத்தமகெ3யிது3 அதி
ஸேவ அர்த்த2தி3 மாட்3த3 மஹகெ3தெ3
தாவு ஹிடி3தெ3தி3ரில்ல த3ந்தா2 பா3ஹுக3ளு உள்ளா
தே3வ தவ யுத்3த4தி3 அனந்தர
ஸ்ரீ வரனு ஸம்யுக்த வாகி3ஹ
பா4வதி3ம் நிம்மிப்3ப3ரடி3 பத்3மக3ள மொரெ ஹோகு3வெ ||52

ஞான தத்வ ஸமுத்4ரனெ ஸு
க்ஞான தத்வெம்ப3ந்த2 த்3ரவ்யவு
நீனு கொட3வவ முஞ்செ பீ4மாவதார தாள்த3 ஷாபா
ஏணலோசனெ த்3ரௌபதியு ஷிவ
ராணி ஷச்யாதி3க3ளதி4க தவ
மானினியு வாக்3தே3வி த்3ரோஹவ மாள்ப பு3த்3தி4யனு ||53

மத்தெ ஹ்ருத3யதி3 து3க்க2 ப3டி3பது3
அத்த இத்தோடா3டு3திஹ மன
கத்தலெய அஞ்ஞானாலஷ்யவு நின்ன ஆக்ஞெயலி
ஷக்தி களெத3வகெல்ல ஓடி3ஸி
தத்கால கவிதெ பேள்வ படு1 மாடெ3
த்யந்த த்வர ப3ஹ அமங்க3ல பி3டி3ஸலதி1ப3லதி3 ||54

அனில நீ கு1ருராயனொம்ஷதி3
ஜனன மாடி3ரெ க்ஷத்ர குல ப்4ரா
ம்மண குலதி3 வ்யக்தாகி3 சித ஸுக2 தே3ஹ யுக்தாதா3
கொனெயு பே4தி3ல்லத3 விசேஷா
த்மன எரடு3 ரூபக3ளு வ்யாஸ க்ரு
ஷ்ணனு எம்ப3 நாமக3ளிகி3வர விஷயராத3ந்தா2 ||55

முத3தொ3ளிப்3ப3ரு க்ருஷ்ண நாமா
ஸ்பத3ரு ஷப்த3 பி3ரம்மவாச்யரு
சதுர இவரிப்3ப3ரிகெ3 ஸேவெய இச்செயவனா தீ3
ஸத3மலின ஸஜ்ஜனரிக3தி ஸுக2
ப்ரத3னெ கண்ணொளு கமலக3ள அந்
த3தி3 எஸெயுதிஹ நிமகா3க3லி என்ன நமனக3ளு ||56

ப4ரதனே பீ4மாவதாரதி3
பரிமளத3 ஸௌக3ந்திகார்த்த2தி3
த்வரதி3 போக3லு மார்க்க3த3லி ஹனுமந்த பா3லவனு
கரதி3 எத்தலு அஷக்தனாத3ந்
த3ரிப தொ3ட்3ட3 ஷரீரத3லி ப்ருத2
வ(கெ)ரட3னெ மக3னஞ்சிஸித3 ஹீகெ3ந்து3 தவ மஹிமெ || 57

த்3வேஷ மாடு3வ தை3த்ய நரிகெ3
மோஸ மோஹக ஞானிக3ளிகி3து3
தோ3ஷ கொடு3வது கு3ருதமானந்தா3ர்யநந்தின்னா
லேஸு அவதாரக3ள பரி பூ
ர்ணாஸு ஞானத3 ப3லகெ க்ரீட3 வி
லாஸ தீ3 வபுக3ளு யெனுத திளிவரு ஸுஜனரெல்லா ||58

ஷரணரிகெ3 ஸம்ரக்ஷிஸுத ஶ்ரீ
ஹரிய தோரிஸி கொடு3வ ப்ராணனெ
து3ரபு3த்3தி4 கட்டு குடில ஹெச்சித3 கெங்கி3டி3ய கோப
தி3ருவ ப3ஹு கோடி1க3ள ஸங்க்2யத3
அரிக3ளன ஸம்ஹரிஸலோஸுக3
த்வர க3மனதி3ம் க3தெ3யிந்தீ3பரி காதி3 ஷீக்4ரத3லி ||59

ஒள்ளெ மார்க்க3வ பி3ட்ட ப3த்3த3தி3
ஸுள்ளு வசனவ ஹேள்த3 வாக்1யதி3
ப3ல்லித3ரு எந்தெ3னிப மத்தெ கெலவு தை3த்யரனா
கொல்லுதலி த்வர ப்ரீயளெனிஸுவ
நல்லி த்3ரௌபதி3 ப்ரீதி அதிஷய
உள்ள ஸௌக3ந்தி4கவ கொட்டானிலனெ நமோ நினகெ3 ||60

ஷரீர தொ3ளு ம்யாலெ க3த3 ப்ர
ஹரதி3 ஹோடிஸி3த்3யாக3 ஸஜ்ஜன
து3ருள தை3த்யாதீ4ஷ குடிலத3 பு3த்3தி4யுள்ளவனு
பரம கோபதி3 து3ஷ்டஜந்துன
பரிய க்ரோத4க முக்2ய வாஸனா
நிருத து3ஷ்கர்மவுள்ள மணிமந்தனெம்ப3 ராக்ஷஸனு ||61

ஹிரிதனதி3 பூ4 சக்ரவனு ஸஞ்
சரிஸி சக்ரவ கரதி3 பி1டி3தி3ஹ
ஹரிகெ3 கு3ண க3ண சே2தி3ஸுத ஜீவைக்ய ஸ்தா2பிஸுதா |
பரம ஸஜ்ஜன மனகெ கரக3ஸ
பரியு வேத3 விருத்3த4 யுக்தியலி
பரிபரிய கஷ்டவனு கொடு3திஹ ஷாஸ்த்ர மாடி3த3னு ||62

நானெ பி3ரம்மனு நிர்கு3ணனு நா
காணிஸுத ஜக3வெல்ல மித்2யம்
ஹீன ஆ ஸங்கரன து3ர்பு3த்தியனு அனுஸரிஸி
க்ஷோனியொளு பாஷண்ட3 கெலர
ஞானிக ஸ்தி2த புருஷரிகெ3 ப3ஹு
காணிஸிது ஆத3ரவு அன்யைரிகெ3ல்ல பி3ட்டிஹது3 ||63

ப4ரத ஆ ஸங்கரன ப3த்3த4த3
மருளு யுக்தி ஸமூஹ ஹரவித3
க3ரள வ்ருக்ஷவு ஸுடு3வத3கெ படு1வெந்த3 வாக்யெம்ப3
உரிய மாலிகெ த4ரிஸி இஹ தவ
நிரமலத3 த்1ருதியாவதாரவு
த4ரெயொள ஸ்தி2ர அக்3னி ப3ஹளுத் க்ருஷ்டவாகி3ஹது3 ||64

பூர்ணப்ரக்ஞாசார்யரே தவ
சாரு வாக்2யானெம்ப3 ஸிம்ஹத3
வீர க3ர்ஜனெ கேளி ஸோதிஹ மாயிக3ளு எம்பா3
க்ரூர நரிக3ளு ப3ஹ பரஸ்பர
பீ3ரித3ரு ஜய இச்செ பொய்திந்
தீ3 ரீதி கங்கெ3டு3த ப4ரத3லி பரவஷதி3 தம்ம ||65

து3ருள அபி4ப்ராயவனு சே2தி3ஸு
திரலு க3ர்வின குஸ்தி2தத3 மதி
ப4ரிதரெல்லரு தே3ஷ ஷரீரகெ நாஷவெந்தெந்தா3
ஸ்சர்யத3லி கூகு3தலி த3ஷதி3ஷ
குரிது ஓடு3த க்3ராம்யகர்மதி3
வ்யரத2 ஷபதா2 ஷௌர்ய அரிவரு காணிஸுவரெல்ல ||66

மருதனே க்ரீடா3தி3 கு3ணக3ள
ப4ரித தவ த்ருதியாவ தாரதி3
அரிக3ளலி த3ய ரஹிதனாகி3 ப3டி3யலு ஸரியே |
ஸருவ ஷக்தி ஞான கு3ண க3ண
ஷரீர ப்ரௌடா4த3ந்த2 ஷ்வேச்சா
மரண உள்ளவ நீனு ஸுஜனர தோ1ஷப3டி3ஸுதஹீ ||67

மூரு மனெக3ள உள்ள ஸ்ரீஹரி
தாரகனு ஜக3வெல்ல தீ4னவு
மாரரிபு மொத3லாத3 தி3விஜரு எல்ல கிங்கரரு
மாருதன ஆ மஹிமெ எமகெ3
ஸூரிஜன ஸுக ப3டி3ப விஷயதி3
தோருவரெ ஆயாஸ நினகி3து3 ஏனு ஆஸ்சர்ய ||68

ஹரியு நித்யதி3 தோரி கொடு3திஹ
ஹருஷ தீர்த்த2னெ உத3யிஸித3 தவ
கி1ரி நகெ3ய காந்தியலி ம்ருது3 மது4 மது4ரவசனவெம்பா3
ஷரதி4 ப4வ தா4ரெக3ள ஸமூஹவு
கரியெ அ ஸுக2வு நஷ்டவாகி3ஹ
பரமஸுஜனர மனஸு கண்ணனுப4விப ஸௌந்த3ர்யவு ||69

நா மொத3லு ப3ஹு ப4க்த ஜனரிகெ3
பூ4மியொளு மஹ ஸுக2வ கொடு3தலி
தாமஸத3 பாபவனு பரிஹாரவனு மாடு3தலி ।
ப்ரேமத3லி ப்ரஸன்னவாகி3ஹ
ஸ்ரீ மத் வக்த்ரேந்து3பி3ம்ப3வு
ஸ்வாமி கேளுவாக3 நா சன்னாகி3 கண்டே3னு ।।70

நிரது3ஷ்ட பா4ஷ்யதி3 ஷாஸ்த்ர
கரதனே மஹ யோக்3ய பூஜா
சரண மத்4வாசார்ய பூர்வத3 ஜன்மத3லி மாட்3தா3 ।
பரிபரிய புண்யக3ள ஸமூஹதி3
பரம சாதுரராத3வர ஆ
சரணெயிந்த3லி மனோஹரத3 மனதி3ந்த3 பி1ரஷ்னெத3லி ।।71

ப3லு ப்ரஸித்3த4ரு ஆத3 ஸ்ரோத்ரிய
க3ள குரிது அத்யந்த காந்திய
ப3லதி3 ப3ஹு உத்க்ருஷ்ட து3க்க2வ களெவ ஸ்ருதியல்லீ ।
கலத வாக்ய விசித்ரதி3ந்த3லி
ஹேளுவ வ்யாக்2யானவனு த்4யானதி3
நிலிஸி இஹ தவ பாத3கிங்கர(கெ) கேளிஸுவத3ல்வா ।।72

சரித ஷுப4 மத்4வார்ய நிஜபத3
கிரண மனோஹர மாணிகத3 ப்ரபெ4
வர ப்ரகாஷத3 ரத்ன க்லப்ததி3 மாட3பட்டந்தா2 ।
ஹிரிய ஆஸனத3ல்லி சன்னா
கி3ருவ பா4வீ பி3ரம்மவனிப தவ
சரண ஸ்தோத்ரவு வேத3ஸம்ப3ந்த4 புராணக3ளு ।।73

மொத3லு வித்3யவ மூர்த்திக3ளு ப3ஹு
முத3தி3 ஸேவெய மாள்பரஹுத3லா
ஸத3மலின பூஜ்யாத3 மத்4வனெ ஸர்த1னவ மாள்ப ।
த்ரித3ஷலோகத3 அப3லெயரு ஸபெ4
எது3ரினலி க3ந்த4ர்வப்ரத2(க்) ப்ரத2
கொத3ரி காயனதி3ந்த3 தவ மஹிமெயனு ஒப்புவது ।।74

ஜனன ம்ருத நர்கெம்ப3 த2ரெக3ள
க4னதி3 மாலிகெ கலுஷதி3 ப4வ
வனதி4யலி முணகி3 நிஜரக்ஷகரன்ன காணத3லெ ।
மனதி3 இச்சிஸி ரக்ஷக ப்ராணக3
ளனு நோடி3 த3ய ஸஹித நிம்மா
நனதி3 ப்ரார்த்த2னெ கேளி ஜலநிதிஷயன ஸத்யவதி ।।75

பராஷர ரிஷியிந்த3 ஞான
ஷரீர மூர்த்யபி4வ்யக்தனாத3னு
நாராயணகீ3 ப்ராக்ருதன ஜட3தே3ஹ எந்தெ3ந்து3
ஸேரலிரியது3 எந்து3 பேள்வரு
ஸூரிஜனரா மஹிமெ எல்லா
மாருதனெ நீ ப3ல்லி அன்யரிகெ3ல்ல அளவட3து3 ।।76

குருட3ரெத3ரிகெ3 மாணிகத3 ரா
ஷிரிஸித3ரெ தோர்த3ந்தெ அத4மரு
ஸருவ வேதா3ர்த்த2வனு திளியதெ3 அன்யதா2ர்த்த2வனு ।
விரசிஸித3ரெ கு3ணக3ணகெ மனெயா
கி3ருவ வேத3வ்யாஸ ஹெஸரின
ஹரியு ஞானிக3ளிகெ3ல்லரிகெ3 உபகார கோ3ஸ்கரவு ।।77

ஸ்ருதிய அர்த்த2வ ஸூத்ரதி3ந்த3லி
ப்ரதிபாதி3ஸந்த2 வியாஸன
அதி அனுக்3ரஹதி3ந்த3 வித்4யெய ப்ராப்திகோ3ஸுக3வு ।
ப்ரதிதி3ன கு3ருரஹித கு3ருதம
அதுள ஸுக்ஞானரஸத3 ஸத்ய
வதிய குவரகெ3 ஆனு ப4க்திலி நமன மாடு3வெனு ।।78

ஞான ஆனந்தா3தி3 ஸம்பத3
மானி ஸ்ரீ மத்4வார்ய எல்லரி
கே3னு த4ரிஸலஷக்தவாகி3ஹ வ்யாஸராக்3ஞெயனு ।
நீனு தாளுவ நால்கு தி3க்கிகெ3
காணிஸுவ ப்ரபெ4 கிரீடத3ஞ்சின
மாணிகவ ஷிரதி3ட்டு க்லேஷக3ளில்லதி3ஹ கர்மா ।।79

உள்ளவனெ ஸுரஸமூஹ ப்ரார்த்த2னெ
ஸொல்லிக3சலதி3 ப3ந்த3 ராக்ஷஸ
கள்ள மணிமந்தனிந்த3 உத3ஸித3 து3ஷ்டவாக்யவனு |
எல்ல வேத3க3ளிந்த3 நிர்மல
ப3ல்லத்3யுக்திலில ஞ்ஞானிக3ள ஷ
க்யல்லத3ந்தா2 பி3ரம்ம ஸூத்ரத3 பா4ஷ்யரசிஸிதி3யோ ||80

பூர்ணப்ரக்ஞார்யனே நீ
தா4ருணிகெ3 ஷுத்3தா4த3 த்3விஜரிகெ3
ஜாரு ஆலய ரஜதபீட2புரவு வெம்ப்3ஹெஸரா |
மூரு லோககெ க்2யாதவாகி3ஹ
ஊரொளாத3ரு நடுமன்யாக்2யா
கா3ரத3லி பி3ராமணனாக3(கு3)த்யா அதி4பத்யரிகெ3 ||81

ஒடெய நாகு3த புனஹ பத3ரிகெ3
நடெ3து3 வேத3வ்யாஸதே3வர
அடி3கெ3 நமனவ மாடி3 பா4ஷ்யாதி3க3ள ரசிஸுதலி |
பொட3வியொளு பா4ரதத3 அர்த்த2கெ1
கடு3 தேஜ தாத்பரிய நிரணய
பி3ட3தெ3 யாவத்3ரஸப4ரித சென்னாகி நீ மாட்3தீ3 ||82

எலோ பூர்ணப்ரக்ஞ ப்ரஸித்த4னெ
சலுவ நின்னனு நானு வந்தி3பெ
ப3லு தி3விஜரிந்தெ3ல்ல கடெ3யலி ப்ரதிதி3னதி3 ஸேவெ
கொ3ளுவ பரிபூர்ண ப்ரக்ருஷ்டத3
ஹொளெவ ஞானத3 தோ1ஷதீர்த்த2னெ
கொ1ளுவதெ3ன்னய நமன பர மாது மன விஷயத3லி ||83

தருவாய ஷிரியல்லி நமனவ
நிருத மாள்பானந்த3தீரத2
கு3ருவெ நிமகொ3ந்தி3ஸுவெ பா4கீ3ரதி2 அமல ஜலதி3
ஷரீர தொளெத3 த3க1தி4க1 ஸங்க3தி
மருத ப4வ ப4ய ஸுடு3வி ஸம
க்ஞாரன மோதி3ப தே3வ நின்னனு ப4க்திலொந்தி3ஸுவெ ||84

த$^{4}$ரிகெ$^{3}$ ஸுப்ரமண்ய வித்$^{3}$வாம்
ஸரிகெ$^{3}$ ஸுத அத்யந்த சதுர்முக$^{2}$
ஹரி நியாமக மோத$^{3}$தீர்த்த$^{2}$ர ஸம்பத்தினா பத$^{3}$
ஸரிஸிஜகெ அதி ப$^{4}$க்தனாகி$^{3}$ஹ
வர த்ரிவிக்ரம பண்டி$^{3}$தாசார்யரு
து$^{3}$ரிதஹர ஸ்ரீஹரிகெ$^{3}$ மாதகெ$^{3}$ பூர்வரீதி ஸ்துதி
மாடி$^{3}$தெ$^{3}$னு ஞானிக$^{3}$ள நன்னிம் ||85

மாடி$^{3}$தே$^{3}$னு க்ஞானிக$^{3}$ளு நன்னிந்
தா$^{3}$டி$^{3}$தா$^{3}$ ஹரிஹருஷ தீர்த்த$^{2}$ர
ஜோடு$^{3}$ பாத$^{3}$க்கெ ஆத$^{3}$ரதி$^{3}$ மாலிகெய
ஏஸெவந்தெ நோடி$^{3}$ சென்னாக$^{3}$ர்சிஸிப்பர
நீடி$^{3}$ நமன க்ஞானிக$^{3}$ளு
நலிதா$^{3}$டி$^{3}$ ப$^{3}$லு அபரோக்ஷத$^{3}$லி
மோக்ஷவனு ஐது$^{3}$வரு || 86

வரத்ரிவிக்ரம பண்டி$^{3}$தாசார்யரு
பத$^{3}$ரிகாஷ்ரமதி$^{3}$மோதா$^{3}$ர்யர
ஸரீரதி$^{3}$ ஹனுமதா$^{3}$கார கண்டி$^{3}$தாக்ஷணதி$^{3}$
மருதஸ்ருதி மாடி$^{3}$ரலு கன்னட$^{3}$
விரசிஸதெனித்துத$^{3}$னெ ஸுஜனரெ கருணதி$^{3}$ந்த$^{3}$லி
தந்தெ$^{3}$ பிராணேஷவிட்டல நுடி$^{3}$ஸிஹனு ||87

|| ஸ்ரீமத்வாந்தர்கத ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||

ஹரி: ஓம் ஸ்ரீ
ஸ்ரீ சீதாபதி ஸ்ரீராமசந்திராய ப்ரஸீதது

ஸ்ரீபாரதிரமண முக்யபிராணாய நம:
பிரதமோ ஹனுமன் நாம த்விதியோ பீம ஏவ ச |
பூர்ணபிரக்ஞ த்ருதீயஸ்து பகவத் கார்ய ஸாதக: ||

ஸ்ரீபிராணேஷ விட்டல விரசித
ஹரிவாயு ஸ்துதி:
(பாமினி ஷட்பதி)

ஒந்து3 தி3ன ப3த3ரி வனகெ ஆ
நந்த3தீர்த்த2ரு போப ஸமயதி3 |
அந்து3 த்ரிவிக்ரம பண்டி3தாசார்யரு அவர கூடா3 |
ப3ந்து3 நாராயண கு3டி3யலி
நிந்திரலு கு3ரு ஔளகெ3 பொக்கத3
ஹொந்தி3ஸிரெ ஹொரகி3ந்த3
நோட்3த3ரு த்3வார ஸந்தி3யலி ||1

த்3வாரதி3 ஜாம்பு3வனு க்ருஷ்ணன
ரூபதொ3ளு ஸ்ரீராம இனகுல
தீ3ப தே3ஹவ கண்ட3 தெர மத்4வார்யரொளு ஹனுமா
தா பொளெத3 வோல் நோடி3 அவரிகெ3
போபஹஹுதெ3ந்தெ3னுத நிஸ்சய
ஸ்தா2பிஸுத மூலக்கெ அவதாரக3ள ஸ்தோத்ரவனு ||2

மாடி3 வாயுஸ்துதிய க்ரந்த2வ
நோடி3ரம் தோரிஸுத குருக3ள
பே3டி3த3ரு புனஸ்சரணெயிந்தி3து3 பட2ன மாள்பரிகெ3
நீடு3வது3 ஒந்தொ3ந்து3 ஷ்லோகக்கெ
ஆடிதா3 ஆ காம்ய ப2லவ
ரூடி4யொளு ப்ரக்2யாதவாக3லி எந்து3 ப்ரார்த்2திஸலு ||3

வர த்ரிவிக்ரம பண்டி$^{3}$தாசா
ர்யரு ஸகல பண்டி$^{3}$த ஸ்ரேஷ்டரு
கர முகி$^{3}$து$^{3}$ ஸிஷ்யத்வ பா$^{4}$வதி$^{3}$ தோரலது$^{3}$ நோடி$^{3}$
ஹருஷத$^{3}$லி ப்ரஸன்னராகு$^{3}$த
வரவு பே$^{3}$டி$^{3}$த$^{3}$ தெரத$^{3}$ பீ$^{4}$ஷ்டவு
கரவ ப$^{2}$லக$^{3}$ள கொடு$^{3}$வ கேவல விஷ்ணுஸ்துதி ஹொரது ||4

ஸருவ ப$^{3}$கி$^{3}$யலி தம்ம ஸ்தோத்ரவு
த$^{2}$ரவெ யுக்தவல்லவிது$^{3}$ மங்க$^{3}$ள
தர ஸ்ரீ நரஹரி நக$^{2}$த$^{3}$ மஹிமெய ஸ்துதிய ஷ்லோகக$^{3}$ளு |
எரடு$^{3}$ ரசிஸுத ஸம்புடக்கா
பரியு த$^{4}$ரியொளதீவ காந்திலி
நிருதத$^{3}$லி பவித்ரவனு நம்மெல்லரனு மாடு$^{3}$வனு ||5

ஸ்ரீமதானந்த தீர்த்தர் அருளிய 'பாந்த்வஸ்மான் புருஹூதவைரி' மற்றும் 'லட்சுமிகாந்த ஸமந்ததோ' இந்த இரு ஸ்லோகங்களையும் இங்கு படித்துக் கொள்ளவும். ஸ்ரீநகஸ்துதி, ஸ்ரீ வாயுஸ்துதிகள் பக்திஞானங்களைக் கொடுக்கக்கூடிய பவித்ர மந்திரங்களாக இருக்கின்றன. நக ஸ்துதியை சம்புடாகாரமாக சொல்லி, வாயுஸ்துதி பாராயணத்தை சமர்ப்பணம் செய்யும்போது மட்டுமே, சம்பூர்ண பலன் மற்றும் விரும்பிய பலன்கள் கிடைக்கின்றன. இவ்வாறு வாயுஸ்துதியை புனஸ்சரணம் செய்தவர்கள், இஹ பர லோகத்தின் சுகத்தினை அடைகின்றனர் என்று ஞானிகளின் அனுபவத்தின் வித்யாவாணியை கேட்டிருக்கிறோம். இது அனுபாவிகர்களின் வாக்கு.

சுக பரிபூர்ணனான, ஞானானந்த மயனான, சர்வோத்தமனான, சர்வதோஷ ரஹிதனான, அனந்தகல்யாண குண பரிபூர்ண, ஜட சேதனர்களுக்கு சைதன்ய ரூபனான ஸ்ரீ நரஹரியின் நகங்களின் ஸ்தோத்திரம் இந்த நகஸ்துதி. வாயுஸ்துதி ஸ்ரீமத் கவி குலதிலக ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதாசார்யர், தான் கண்டதைப் போல ஸ்ரீமதாசார்யரின், மூன்று அவதாரங்களின் நிஜஸ்வரூபத்தை வர்ணித்த, அற்புத, அப்ரதிம க்ருதியாக

இருக்கிறது. மனஸ், அந்த:கரண ஷுத்திக்காக இதனை தொகுத்திருக்கிறோம். பவமானன் என் மன பாவனைகளை பவித்ரமாக்கட்டும் என்று பிரார்த்தனையுடன் அவருக்கு, ஸ்ரீஹரிக்கு அனந்த பிரணாமங்கள்.

|| ஸ்ரீமத்வாந்தர்கத ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||

கிருஷ்ண ஜாலிஹாள

பாந்த்வஸ்மான் புருஷூத வைரி பலவன் மாதங்க மாத்யத் கடா
கும்போச்சாத்ரி விபாடனாதிகபடு ப்ரத்யேக வஜ்ராயிதா: |
ஸ்ரீமத் கண்டீரவாஸ்ய ப்ரதத ஸுனகரா தாரிதாராதி தூர
ப்ரத்வஸ்த த்வாந்த ஷாந்த ப்ரவிதத மனஸா பாவிதானாகி வ்ருந்தை: ||

லட்சுமிகாந்த: ஸமந்ததோऽவி கலயன் நைவேஷிதுஸ்தே ஸமம்
பஷ்யாம்யுத்தம வஸ்துதூர தரதோऽபாஸ்தம் ரஸோ யோऽஷ்டம: |
யத் ரோஷோத்கர தக்ஷ நேத்ர குடில ப்ராந்தோத்திதாக்னி ஸ்புரத்
கத்யோதோபம விஸ்புலிங்க பஸிதா: பிரம்மேஷ ஷக்ரோத்கரா:

பகவந்தனின் நகங்கள் துஷ்ட தைத்யர்களை அழிக்கும், ஒளிரும்படியான வஜ்ராயுதங்களாக இருக்கின்றன. தேவானுதேவதைகளுக்கு அனைத்து இஷ்டார்த்தங்களையும் வழங்கும் சிந்தாமணியாக இருக்கின்றன. நரஹரியின் நகங்கள் துஷ்டர்களைக் கொல்வதைப் போல, பக்தர்களின் அபீஷ்டங்களையும் நிறைவேற்றுகின்றன என்று ஸ்ரீமத்வாசார்யர் நகஸ்துதியில் வர்ணிக்கிறார். பிரளய காலத்தில் பரமாத்மனின் உணர்ச்சிகரமான கண்ணின் ஓரப்பார்வையால் தோன்றிய (சூரியனுக்கு ஒப்பிட்டால், சிறு மின்மினிப் பூச்சியிலிருந்து வரும் ஒளியைப் போல சிறியது) சிறு பொறியால் (இந்த சிறு பொறிக்கே இவ்வளவு சக்தி

இருந்தால், இன்னும் பூர்ண சக்தியின் ஸ்வரூபம் எத்தகையது? என்று சிந்திக்க வேண்டும்) பிரம்மாதி தேவதைகளின் சமூகமே பொசுங்கிப் போகிறது என்று ஸ்ரீமத்வாசார்யர் வர்ணித்திருக்கிறார். ஆனால், பரமாத்மன் கருணைக்கடல். உலகினை லயம் செய்யும் காரியத்தில் பகவந்தனின், சத்ய சங்கல்ப விசேஷம் சிறப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தன்னவர்களுக்கு ஆனந்தத்தையும் கொடுக்கிறான்.

|| ஸ்ரீகுருமத்வாந்தர்கத கிருஷ்ணார்ப்பணமஸ்து ||

ஸ்ரீ சீதாராம கிருஷ்ண வேதவியாஸ ப்ரஸீதது
ஸ்ரீஹனும பீம மத்வாசார்ய நமோ நம:

ஸ்ரீ விஜயதாச க்ருத, ஸ்தோத்திரபாக சுளாதிகள்

ஸ்ரீபிராணதேவரின் மஹிமா சுளாதி. த்ருவ தாள

பிராண அபான வ்யான ஸமான உதான
ஞான மயா ஸத்வ ஷரீர ஸமீர
ஆனந்த ஸாந்த்ர ஹரி நந்தன பவமான
மான தபிமானியெ வாணி ப்ரியா
நீனெ ஸர்வரல்லி கீர்வாணரிகெ மொதலு
நானா ப்ரகார ஜீவிகளாதார
ஸ்னான ஜப தப ஹோம
மௌன தீர்த்தயாத்ரெ
நீ நடெஸலதரிந்த ஸித்திபவு
நீனெல்லி அல்லி ஸ்ரீ நாரயணனிப்ப
ஏனெம்பெ நின்னய கர்த்ருதனகெ
கோணெவிகொணெயல்லி ஸர்வ வ்யாபார பஞ்ச
ப்ராண ஜனக வாயு நின்னதய்ய
தானவாமரர மத்யபந்த அகோர விஷ
பானவன்னு மாடித ப்ரபஞ்சனா
தீன வத்ஸல நம்ம விஜய விட்டலனங்க்ரி
ரேணு ஷிரதல்லி இட்ட(த்யு)ரைரமண ||1

அட்ட தாள
தந்தெ ஈதனு காணோ தாயி ஈதனு காணோ
பந்து பளக ஸர்வார்த்தவு ஈதனு
ஹிந்தெ முந்தெ நமகாதார ஈதனு
எந்தெந்திகெ ஸம்பந்திகெ நீதனு ।
ஜதெ
மூரவதாரத குருவெ ஸூர தருவெ
வாரவாரக்கெ விஜய விட்டலன்ன ப்ரதிபிம்பா ।।

**[ஸ்லோகம் 1]**

ஸ்ரீமத் விஷ்ண்வங்க்ரி நிஷ்டாதிகுண குருதம ஸ்ரீமதானந்த தீர்த்த
த்ரைலோக்யாசார்ய பாதோஜ்வல ஜலஜ லஸத் பாம்ஸவோऽஸ்மான் புனந்து ।
வாசாம் யத்ர ப்ரணேத்ரி த்ரிபுவனமஹிதா ஷாரதா ஷாரதேந்து
ஜ்யோத்ஸ்ன்யா பத்ர ஸ்மிதஸ்ரீ தவளித ககுபாப்ரேம பாரம் பபார ।।1

**ஸகல வேதாக்3ஷ்ரதி3 நியா**
**மக1ளெனிஸி த்ரைலோகத3வரிம்**
**த3கி2ள பூஜெகொ3ண்டு3 ஷரத்காலேந்து3ப்ரபெ4 போல்வ ।**
**ஸுக2த3 ஷுப4 கிரி நகெ3ய பெ3ளகு3வ**
**ககுப4க3ளுள்ள பா4ரதிய பதி பத3**
**நக2தூ4ளிக3ளலி அதிஷய தோஷ த4ரிஸித3ளு ।।6**

ஸத்ய லோக முதலான மேலே உள்ள அனைத்து உலகங்களிலும் இருக்கும் ருத்ராதி தேவதைகளுக்கு, பாதாள ஆகிய லோகங்களில் இருக்கும் சேஷ முதலான தேவதைகளுக்கு, பூ லோகத்தின் சஜ்ஜனர்களுக்கு சாஸ்திரார்த்த உபதேச செய்துகொண்டிருக்கும் சர்வக்ஞரான ஸ்ரீமதாசார்யர் 'த்ரைலோக்யாசார்ய' என்று பெயர் பெற்றிருக்கிறார். இவரின் பாத கமலங்களின் ஒளிரும் பாத தூளி நம்மை பவித்ரமாக்கட்டும். ஸ்ரீஹரி, லட்சுமிதேவி, வாயுதேவர், சாரதாதேவி (பாரதிதேவி) ஆகியோர் – அனைத்து ஜீவர்களின்

வாக்கு, மனஸ், நடவடிக்கைகளுக்கும் முக்ய நியாமகர்கள் ஆவர். அனைத்து ஹரி பக்தர்களும் ஜகத்குருகளான ஸ்ரீவாயுதேவரின் பத்னியான ஸ்ரீசாரதா தேவியை பக்தியுடன் பூஜிக்கும்போது, சாரதாதேவி புன்னகை பூத்த முகத்துடன், சரத் காலத்து சந்திரனைப் போல, ஒளிர்கிறாள். அந்த ஒளியினால் 10 திசைகளும் ஒளிர்ந்தன. இவ்வாறு ருத்ராதிகளை, அனைத்து பக்தர்களை அருளும் சாரதா தேவி, ஸ்ரீமத்வாசார்யரின் பாத தூளியில் அத்யந்த பக்தி பாவம் நிரம்பியவளாக சரணடைகிறாள். இத்தகைய ஞான ஒளியில் மனம் ஈடுபடுமாறு பாரதி எனக்கு அருளட்டும்.

**[ஸ்லோகம் 2]**

உத்கண்டா குண்ட கோலா ஹலஜவ விதிதா ஜஸ்ர
ஸேவானுவ்ருத்த
ப்ராக்ஞாத் மஞ்ஞான தூதாந்த தமஸ ஸுமனோ மௌளி
ரத்னாவலீனாம் |
பக்த்யுத்ரேகாவகாட ப்ரகடன ஸகடாத்கார ஸங்க்ருஷ்யமாண
ப்ராந்த ப்ராக்யாங்க்ரி பீடோத்தித கனக ரஜ:பிஞ்சரா
ரஞ்சிதாஷா: ||2

**தி3விகெ ப3ஹு கலகல த்4வனி**
**தவகதி3ம் திளித3னிஷ ஸேவெயு**
**கவலு இல்லதெ3 மாடி3 நாராயணன ஞானத3லி |**
**கவிது3 தம லோகக3ள காணத3**
**தி3விஜரெல்லர மௌளியல்லிஹ**
**ரவி ப்ரகாஷத3 வோலு தோருவ ரத்ன பங்க்திக3ளு ||7**

**பரம ப4க்த்யாத்ரேக த்3ருட3தொ3**
**ப்3ப3ரிகெ3 ஒப்3ப3ரு ஸங்க4டி1ஸி ஈ**
**த4ரிது3 ப3ந்தொ3த்துதிரெ ஸக4ட1த்கார ஷப்3த3த3லு |**
**வருஸு வஞ்சுக3ளு த்துமாங்க4ரிலி**
**ஹோருடு1வ ஸுரஜ தி3ஷவுதி3ம் பௌகு3வ**
**ஹருஷதீர்த்த2ர பாத3தூ4ளி மாடு3வது3 ஸுபவித்ரா ||8**

கருட, சேஷ, ருத்ர, இந்திராதி தேவதைகள், ரிஷிகள், முனிகள், பக்தாக்ரேசர்கள் ஆகியோர் ஸ்ரீமத்வாசார்யரின் சேவைக்கு, உற்சாகத்துடன் நான் முன்னே நீ முன்னே என்று முண்டியடிக்கும்போது, அவர்களின் கிரீடங்கள் இடித்துக்கொண்டு அதிலிருந்து சத்தம் வருகிறது. மத்வசாஸ்திர தத்வஞான என்னும் வெளிச்சம் அஞ்ஞான என்னும் இருட்டினை ஓட்டுகிறது. பிராணதேவரின் ப்ரேரணையினால் பக்தர்களின் இதயத்தில் ஞான விருத்தி ஆவதற்கு ஆசை வருகிறது. இப்படியாக பக்தியின் எழுச்சியினால் தேவதைகள், ஸ்ரீமத்வரின் பாத கமலங்களுக்கு வணங்கியபோது தேவதைகளின் ரத்னங்களால் இழைக்கப்பட்ட கிரீடங்கள், பூர்ணபிரக்ஞரின் பாதுகைகளுக்கு இடித்தபோது, அந்த தங்கப் பொடிகள் (துகள்கள்) பறக்கின்றன. இந்த தங்கப் பொடியினால், ஆசார்யரின் பாத தூளி வண்ணமயமாக, பத்து திசைகளிலும் ஒளிர்கிறது. இத்தகைய பாத தூளி என்னை பவித்ரமாக்கட்டும்.

**[ஸ்லோகம் 3]**

ஜன்மாதி வியாத்யுபாதி ப்ரதிஹதி விரஹ ப்ராபகாணாம்
குணானாம்
அக்ர்யாணாமர்ப்பகாணாம் சிரமுதித சிதானந்த
ஸந்தோஹதானாம் |
ஏதேஷாமேஷ தோஷ ப்ரமுஷித மனஸாம் த்வேஷிணாம்
தூஷகாணாம்
தைத்யானாமார்த்திமந்தே தமஸி விததாம் ஸம்ஸ்தவே
நாஸ்மி ஷக்த: ||3

**ஜனன மனோ வ்யதெ$^{2}$ வ்யாதி$^{4}$க$^{3}$ளு கா**
**ரணத$^{3}$ அஞ்ஞானவு மரளெ பா$^{3}$**
**ணஹவு சே$^{2}$தி$^{3}$ஸி ஸ்ரேஷ்டவாகி$^{3}$ஹ ப$^{4}$க்தி ஞானத$^{3}$லீ |**
**மினுகு$^{3}$திஹ ஞான்ஹாருஷ ஸுக$^{2}$ மய**
**மனுஜரொளு யோக்$^{3}$யரிகெ த$^{3}$யத$^{3}$லி**
**தி$^{3}$ன தி$^{3}$ன வ்யக்தியனு மாடு$^{3}$வ கு$^{3}$ருவு பவமான ||9**

**ஸுள்ளு ஞானதி$^3$ கத$^3$டி$^3$ஸுவ மன**
**உள்ள த்$^3$வேஷதி$^3$ து$^3$ஷிஸுவரன**
**வல்ல தை$^3$த்யர அந்த$^4$தமஸிலி ப$^3$ஹள காலவனு(த$^3$லி) |**
**அல்லி இரிஸுவ து$^3$க்க$^2$ கொடு$^3$தலி**
**கொல்லிஸுவ வாதாங்க்$^4$ரி ஸ்துதியனு**
**ப$^3$ல்லெனெ சென்னாகி$^3$ மாட$^3$லு ஷக்த நானல்ல ||10**

இந்த சம்சாரத்தில் பிறந்தபோது, இந்த தேகத்திற்கு ஆதி வியாதி, வலி, அஞ்ஞான, பிறப்பு, இறப்பு ஆகியவை தொடர்ந்து வருகின்றன. மனிதன் இவற்றிற்கு பலியாகி, தொடர்ந்து துக்கப்படுகிறான். 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்னும் இந்த சுழற்சியிலிருந்து விடுபட ஸ்ரீஹரியிடம் பக்தி ஞானம் உள்ளவனாக வேண்டும். (மஹாத்ம்ய ஞான பூர்வக உத்தமமான ஸத்ருட பக்தி. குருகளின் கருணையால் யோக்யருக்கு இத்தகைய பக்தி செய்வதற்கு சாத்தியம்). ஸ்ரீபூர்ணப்ரக்ஞரின் பாததூளியின் சம்பந்தத்திற்கு, ஸ்ரீ வாசுதேவனின் தியான சமுத்திரத்தில் இறங்கி, இந்த சம்சார சாகரத்தை சுலபமாக தாண்டும் சக்தி இருக்கிறது என்றபோது, அதனை எவ்வளவு வர்ணித்தாலும் போதாது. ஹரியை, ஹரிபக்தர்களை, நற்சாஸ்திரங்களை எப்போதும் த்வேஷிப்பவரகளுக்கு, எப்போதும் தோஷங்களையே கூறும் அயோக்யர்களுக்கு, இத்தகைய பாததூளி, என்றென்றும் அந்தம்தமஸ், நரகத்திற்கு அனுப்புகிறது.

**[ஸ்லோகம் 4]**
அஸ்யாவிஷ்கர்துகாமம் கலிமல கலுஷேऽஸ்மின் ஜனே ஞானமார்க்கம்
வந்த்யம் சந்த்ரேந்த்ர ருத்ர த்யுமணி பணி வயோ நாயகாத்யைரிஹாத்ய |
மத்வாக்யம் மந்த்ரஸித்தம் கிமுத க்ருதவதோ மாருதஸ்யாவதாரம்
பாதாரம் பாரமேஷ்ட்யம் பதமபவிபத: ப்ராப்துராபன்ன பும்ஸாம் ||4

**க்ஷோணியொளு கலி க்ருதத$^{3}$ மித்$^{2}$யா**
**ஞானதோ$^{3}$ஷதி$^{3}$ து$^{3}$ஷ்டராகி$^{3}$ஹ**
**மானவரொளதி$^{4}$காரி ஜனரிகெ$^{3}$ தத்வமார்க்க$^{3}$வனு |**
**காணிஸுவ இச்சுள்ள தி$^{3}$விஜரு**
**ஏணலாஞ்ச$^{2}$ன இந்தி$^{3}$ர ஷிவ ரவி**
**ஸ்ரீனிவாஸ மஞ்ச க$^{3}$ருடா$^{3}$தி$^{3}$கள கையிந்தா$^{3}$ ||11**

**ப$^{3}$ந்து$^{3}$ மொரெ ஹொக்கந்த$^{2}$ புருஷர**
**சந்த$^{3}$தி$^{3}$ம் ரக்ஷிப பளித்தா$^{2}$**
**தி$^{3}$ந்த$^{3}$ ப்ரதிபாத்$^{3}$ய மத்$^{4}$வாவதாரவனு மாட்தா$^{3}$ |**
**முந்தெ$^{3}$ பி$^{3}$ரம்மனபத$^{3}$வியைது$^{3}$வ**
**எந்து$^{3}$ விபத்துக$^{3}$ளில்லத$^{3}$ புரன**
**இந்து$^{3}$ ஸ்துதிஸலு ஷக்தனல்லந்த்$^{3}$ஹேள பே$^{3}$கே$^{1}$னோ ||12**

கலியின் சன்னிதானத்தினால் உண்டான தோஷங்களால், களங்கப்பட்டிருக்கும் சஜ்ஜனர்களுக்கு ஞானத்தின் வழியைக் காட்டுவதற்காக, வாயுதேவர் மத்வ என்னும் ரூபத்தினால் அவதரித்தார். சந்திரேந்த்ர ருத்ர த்யுமணி கணிவயோனாயகாத்யை: (ஏணலாஞ்சன இந்திர சிவ ரவி ஸ்ரீனிவாஸனின் ஐந்து கருடாதிகள்) என்னும் இந்த அனைத்து தேவதைகளும், ஸ்ரீஹரியிடம் மாறுபட்ட பக்தி, சத்குணங்களின் அ-பரிபூர்ணத்வம் ஆகிய தோஷங்களைக் கொண்டிருக்கின்றனர் எனப்படுகின்றனர். ஆனால், மத்வர், ருஜுகணஸ்தர். கலி ப்ரவேசம் இல்லாதவர். களங்கமற்ற பக்தி கொண்டவர். தோஷங்கள் அற்றவர். பளித்தா சூக்தத்தினால், ரிக்வேதத்தினால் போற்றப்பட்டவர். (மந்திரஸித்தம் = பளித்தா'வினால் போற்றப்பட்டவர்). சஜ்ஜனர்களுக்கு ஞான மார்க்கத்தைக் காட்டி (ஞானமார்க்கம் ஆவிஷ்கர்த்ருகாமம் = மானவர்களில் அதிகாரிகளுக்கு தத்வமார்க்கத்தை காட்டுபவர்) அவர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றியவர் (பாதாரம்). ருத்ராதி அமரர்களால் வணங்கப்படுபவர். இத்தகைய ஸ்ரீமத்வரை, அவரின் கருணை, சரண பாத தூளிகளின் மஹாத்ம்யத்தை முழுமையாக வர்ணிப்பதற்கு நான் ஷக்தன் அல்ல என்று

தனியாக சொல்ல வேண்டியதில்லை என்று சொல்கிறார். மத்வரின் பாதங்களில் சரணடைந்தவர்களுக்கு (ஆபன்னபும்ஸான்) ஆபத்துகளே இல்லை.

**[ஸ்லோகம் 5]**

உத்யத் வித்யுத் ப்ரசண்டாம் நிஜ ருசி நிகர வ்யாப்த லோகாவகாஷோ
பிப்ரத் பீமோ புஜேயோऽப்யுதித தினகரா பாங்கதாட்ய ப்ரகாண்டே ।
வீர்யோத்தார்யாம் கதாக்ர்யாமயமிஹ சுமதிம் வாயுதேவோ விதத்யாத்
அத்யாத்ம ஞானனேதா யதிவரமஹிதோ பூமிபூஷா மணிர்மே ||5

**ஸ்வருசி ஸமுதா$^3$யவனு லோகதி$^3$**
**ஹரவித$^3$ புபனு பீ$^4$ம நாமதி$^3$**
**த$^4$ரியொளுதி$^3$ஸுத மிஞ்சினோல் ப்ரகாஷ உள்ளந்தா$^2$ ।**
**ப$^4$ரதி$^3$ பா$^3$ஹு ப$^3$லதி$^3$ந்தெ$^3$த்துவ**
**வரக$^3$தெ$^3$ய சன்னாகி$^3$ உதி$^3$ஸுவ**
**த$^1$ரணி காந்தி$^1$ய தெரத$^3$ பா$^3$ஹுபுரியுக்த தோளுக$^3$ளு ||13**

**க$^2$்யாத வாகி$^3$ஹ பு$^4$ஜதி$^3$ த$^4$ரிஸித$^3$**
**ஆதனே யதி ஸ்ரேஷ்டரிந்த$^3$லி**
**நீத பூஜெயகொ$^3$ண்டு$^3$ ஹரி விஷயகத ஞானக்கெ ।**
**நீத பூ$^4$ஷா மணி யெனிப ஈ**
**பூ$^4$தளகெ மாருதனெ நின்னய**
**ஸ்தோதர மாள்பந்த$^2$ ஸுமதிய கொடு$^3$வதீ$^3$னெனகெ$^3$ ||14**

ஸ்ரீவாயுதேவர் ஹனும, பீம, மத்வ என்னும் மூன்று ரூபங்களை ஏற்றது, பளித்தா சூக்த ஆகிய பிரமாணங்களால் தெரியவருகிறது. இந்த அவதாரங்களில் ஞான சாமர்த்திய மற்றும் ஷத்ரு நிக்ரஹ சாமர்த்யம் ஆகியவை வெளிப்பட்டிருக்கின்றன. இங்கு பீமசேன தேவரின் வீர மூருதியை 'கதாக்ர்யாம்' என்று சொல்கிறார். மிக உத்தமமான

கதையை, அதிலிருந்து வரும் ஒளி மின்னலைப் போல, சத்தம் இடியைப் போல இருக்கிறது என்று வணங்குகிறார். அவரின் வலிமையான தோள்கள், அந்த தோள்களில் இருக்கும் கவசமானது, உதயசூரியனைப் போல ஒளிர்கிறது. ரத்னங்களைப் போல ஒளிர்வதான, நான்கு வேதங்கள், மகாபாரத, புராணங்கள் மூலராமாயண, பஞ்சராத்ர என்னும் ஏழு பிரமாண கிரந்தங்களின் ஞானத்தை மனதில் ஏந்திக் கொண்டிருக்கும் ‘பீம’ சக்தியின் மத்வர், உத்தம ஞான, நல்லறிவைக் கொடுக்கட்டும் என்றும், மற்றும் அதி உத்தம ரீதியினால் ஸ்தோத்திரம் செய்ய அருளட்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்.

**[ஸ்லோகம் 6]**

ஸம்ஸாரோத்தாப நித்யோபஷமத ஸதய ஸ்னேஹ
ஹாஸாம்புபூர
ப்ரோத்யத் வித்யானவத்யத்யுதி மணிகிரண ஸ்ரேணி
ஸம்பூரிதாஷ: |
ஸ்ரீ வத்ஸாங்காதிவாஸோ சிததர ஸரள ஸ்ரீமதானந்த தீர்த்த
க்ஷீராம்போதிர் விபிந்த்யாத் பவதனபிமதம் பூரி மே பூதி
ஹேது: ||6

**நரர ஸம்ஸாரத$^3$லி ப$^3$ந்தி$^3$ஹ**
**பரிபரி உத்க்ருஷ்ட தாபக்கெ**
**நிருதத$^3$லி ஷாந்தியனு கொடு$^3$திஹ ஸத$^3$ய ஸ்னேஹத$^3$லி |**
**கி$^1$ரி நகி$^3$ய பொராம்பு$^3$து$^3$தி$^3$ஸித$^3$**
**நிரது$^3$ஷ்ட வித்$^3$யெம்ப$^3$ மாணிக**
**கிரண பங்க்திக$^3$ளிந்த$^3$ தி$^3$ஷ சென்னாகி$^3$ தும்பி$^3$ர்தா$^3$ ||15**

**பரம ப$^4$க்தி ஞான மொத$^3$லை**
**ஷ்வரிய காரண ஷிரி வத்ஸ சின்**
**ஹரி ஸமீபத$^3$ல்லிருவத$^3$கெ ப$^3$ஹுயோக்$^3$யவெந்தெ$^3$னிபா |**
**க$^3$ருட$^3$ மொத$^3$லாத$^3$ர்க்கெ$^3$ ஸ்ரேஷ்டனெ**
**ஷிரி மதா$^3$னந்தா$^3$ர்ய நெம்போ$^4$ல்**
**ஷரதி$^4$ யெனகா$^3$கு$^3$திஹ்ய ப$^3$ஹளானிஷ்ட சே$^2$தி$^3$ஸலி ||16**

சம்சாரத்தில் மிகவும் பிரபலமாக இருக்கும் ‘தாப’ ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதெய்விகமான ஏராளமான தாபங்கள், ஸ்ரீமதானந்த தீர்த்தரின் கருணை என்னும் கடலால் அழியட்டும். சஜ்ஜனர்களின் சாதனை பூர்ணமாகட்டும். ஸ்ரீமத்வாசார்யர் தம் பக்தர்களுக்கு பூர்ணானுக்கிரகம் செய்து, கஷ்ட தாபங்களை பரிகரித்து, நிரந்தர யுக்தி சுகங்களைக் கொடுக்கிறார் என்பது பாற்கடலுடன் ஒப்பிடப்படுகிறது. ஸ்ரீமத்வாசார்யர் நம்மில் ஞானத்தை பிறக்கச்செய்து, முக்தியைக் கொடுக்கிறார். ஆகையால் அந்த பாற்கடலை விட ஸ்ரீமதானந்த தீர்த்தர் என்னும் பாற்கடல் (ஞானவாரிதி) நமக்கு உத்தமம் எனப்படுகிறது. சம்சார என்னும் அதி பிரபலமான கஷ்டத்தை, அதிலிருந்து உண்டாகும் துக்கத்தை பரிகரித்து, ஸ்ரீசுகதீர்த்தர் நமக்கு ஞான பக்திகளை அருளட்டும். நம்மை காப்பாற்றட்டும்.

**[ஸ்லோகம் 7]**

மூர்த்தன்யே ஷோஞ்சலிர்மே த்ருட தரமிஹதே பத்யதே
பந்தபாஷ
ச்சேத்ரே தாத்ரே ஸுகானாம் பஜதி புவிபவிஷ்யத் விதாத்ரே
த்யுபத்ரே ।
அத்யந்தம் ஸந்ததம் தம் ப்ரதிஷ பதயுகே ஹந்த ஸந்தாப
பாஜா
மஸ்மாகம் பக்திமேகாம் பகவத உத தே மாதவஸ்யாத
வாயோ: ||7

**ப$^4$ரதனே த$^4$ரி ப$^4$க்த ஜனரிகெ$^3$**
**முரிது$^3$ கட்டித$^3$ ப$^4$வத$^3$ பாஷவ**
**கொரது$^3$ ஸுக$^2$க$^3$ள கொட்டு பா$^4$வி பி$^3$ரம்மனெந்த$^3$னிபா ।**
**த்$^3$யுரமணனெ நினகா$^3$கி$^3$ அஞ்சலி**
**கரத$^3$ ப$^3$ஞ்த$^4$வு ஷிரஸினலி த்ருட$^4$**
**தரதி$^3$ அதி க$^4$ட்யாகி$^3$ ஸந்தத கட்டிதென்னிந்தா$^3$ ||17**

**எரடு$^3$ ஸந்தாபக$^3$ளு ப$^4$வத$^3$லி**
**நிருத யைதுவ நமகெ$^3$ நீனெ**

**ஹருஷத$^{3}$லி ஷட்கு$^{3}$ணத$^{3}$ ஸம்பத$^{3}$ மாத$^{4}$வன நின்னா**
**சரண த்$^{3}$வயத$^{3}$லி ஞான பூர்வக**
**ஸரவதோதி$^{4}$க ஸ்னேஹ லக்ஷண**
**ப$^{4}$ரித த்ருட$^{3}$ ப$^{4}$க்தியனு மாடு$^{3}$வ மனஸனீட$^{3}$வது$^{3}$ ||18**

அனைத்து விதமான கஷ்டங்களையும் நாம் அனுபவிக்கிறோம். இந்த கஷ்ட துக்கங்களிலிருந்து, சம்சார பந்தனத்திலிருந்து, விடுதலை அடையவேண்டும் என்றால், முக்தி கிடைக்க வேண்டும். முக்தி வேண்டும் என்பவர்கள் ஸ்ரீஹரி வாயு குருகளில் திடமான பக்தி வைக்க வேண்டும். பக்தி நிரந்தரமாக இருக்க வேண்டும். வரங்களைக் கேட்பதற்கு முன், ஸ்ரீவாயுதேவர் அனாதி காலத்திலிருந்து இன்றுவரை நமக்கு செய்திருக்கும் உதவியையும், இனி இந்த ஜீவனில் அடுத்து செய்யப்போகும் உதவியையும் நினைக்க வேண்டும். அவர் செய்யும் உதவிக்கு பிரதியாக நமக்கு எதையும் செய்வதற்கு சாத்தியம் இல்லை. ஸ்ரீஹரி வாயுதேவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து பக்தியுடன் 'ஸ்வாமி எனக்கு அருளட்டும்' என்று வேண்டிக் கொள்ள வேண்டும். ஸ்ரீஹரி வாயு குருகள் இந்த வேண்டுதலை எனக்கு எப்போதும் நிறைவேற்ற வேண்டும் என்று தொடர்ந்து பிரார்த்தனை செய்ய வேண்டும். இந்த வேண்டுதலை வேண்டும் மனதினை அவர் கொடுக்கட்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.

**[ஸ்லோகம் 8]**
ஸாப்ரோஷ்ணா பீஷு ஷுப்ர ப்ரபமயனபோ பூரி பூப்ருத் விபூதி
ப்ராஜிஷ்ணுர்பூ ருபூணாம் பவனமபி விபோsபேதி பப்ரே பபூவே
யேன ப்ரூ விப்ரமஸ்தே ப்ரமயது ஸுப்ருஷம் பப்ருவத் துர்ப்ருதாஷான்
ப்ராந்திர்பேதாவபாஸ ஸ்த்வதி பயமபிபூர் போக்ஷ்யதோ மாயிபிக்ஷூன் ||8

**அரஸ ஹே ஆனந்த$^{3}$ தீரத$^{2}$**
**ஸருவரிகெ$^{3}$ அப$^{4}$ய ப்ரத$^{3}$னெ நீ**
**திருவுதிஹ ஹுப்$^{3}$பி$^{3}$ன விலாஸவுயெணிஸி நோள்பெனெவெ |**

**ப3ரிதெ3 தும்ப3ல ஷக்த வாகி3ஹ**
**ப3ரிதா3ஸெய பெ3க்கினந்த3தி3**
**கரம3ந்தி3பரிகெ3 எல்ல பே4த3த3 பரிய பி4ராந்திப4யா ||19**

**அனுப4விஸுதிஹ ப்4ரூ விலாஸவு**
**க4ன ஷஷி ரவி ஸஹிததா3 நப4**
**வனு ப3ஹள ராமர விபூ4திலி பொம்மதிஹ த4ரிய |**
**அனிமிஷர நாயகன லோகவ**
**வினயத3லி ஸ்ருஜிஸுதலி பாலிஸி**
**கொனெயவரெல்லரன ஸம்ஹர ஹைதி3ஸுதலிஹுது3 ||20**

மத்வரூபி வாயுதேவர் தமது பக்தர்களுக்கு புருஷார்த்தங்களை அருள்பவர். ஸ்ருஷ்டி முதலான காரியங்களில் உங்கள் அபாரமான சக்தி இருக்கிறது. வந்த பயங்களை பரிகரிக்கிறீர்கள். ஆகையால் அபய என்னும் பெயர் உங்களுக்கு இருக்கிறது. எதிரிகளை அழிக்கும் சக்தி உங்கள் புருவங்களின் சலனத்திற்கே இருக்கிறது. ஆகையால் 'அபி பூ' என்னும் பெயர் வந்திருக்கிறது. எஜமானனிடம் சிறிதும் விஸ்வாசம் இல்லாத பிராணி – பூனை. உலக நாயகனான ஶ்ரீ ஹரியை அலட்சியம் செய்து, தாமே தெய்வம் என்றும், இந்த உலக செல்வத்திற்கு ஆசைப்படும் கள்ள பிக்ஷுக்கள், திருட்டுப் பூனைகளைப் போல, பகவந்தனின் ஆளுமையில் அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். ஆனால் சர்வ ஸ்வாமியான பரமாத்மனால் துஷ்டர்களுக்கு தண்டனை, சிஷ்யர்களுக்கு அருள் இருக்கிறது என்பதை மறக்கக்கூடாது. சிஷ்ய ஜனப்ரிய பிராணதேவர் எனக்கு பக்தியைக் கொடுத்து அருளட்டும்.

**[ஸ்லோகம் 9]**
யே஽மும் பாவம் பஜந்தே ஸுரமுக ஸுஜனாராதிதம் தே
த்ருதீயம்
பாஸந்தே பாஸுரைஸ்தே ஸஹசர சலிதைஸ்
சாமரைஸ்சாரு வேஷ: |
வைகுண்டே கண்ட லக்னஸ்திர ஷுசி விலஸத் காந்தி
தாருண்ய லீலா

லாவண்யா பூர்ணகாந்தா குசபரசுலபா ஷ்லேஷ ஸம்மோத
ஸாந்த்ரா: ||9

**அமரரெ மொத$^3$லாத$^3$ ஸுஜனர**
**நமன பூஜெய கொ$^3$ம்ப$^3$ நின்னய**
**விமல த்ருதீயவதார ஸேவிஸுதிருவராவரிகெ$^3$ |**
**ரமெய ரமணனனுசரர கையலி**
**த$^4$மகத$^3$லி ஹாரிஸுவ சாமர**
**கமலமுகி$^2$யரு மனோஹராலங்காரக$^3$ளுள்ள ||21**

**கொரளொளாஸக்ததலி த்ருடதலி**
**நிருமலதொளுப்புவ ப்ரகாஷதி**
**தருணிர்யவ்வன லீலெ லாவண்யதலி ஸௌந்தர்யதீ |**
**பரிபூர்ணராதவர ஸ்தனகள**
**பரத ஸுகதாலிங்கனெய மஹ**
**ஹருஷதிந்த வைகுண்டதொளு காந்தியலி வொப்புவரு ||22**

ஸ்ரீவாயு தேவரின் மூன்றாவது அவதாரம் மத்வாசார்யர். தேவதைகளில் சிறந்தவர் எனப்படும் கருட, சேஷ, ருத்ரர்கள், ரிஷி முனிவர்கள், முமுக்ஷுகள், சகல சஜ்ஜனர்கள் ஆகியோர் அவரை மிகவும் பக்தியுடன் ஆராதனை செய்கின்றனர். எவ்வித தோஷங்களும் இல்லாததனான ஹரியின் உலகமான வைகுண்டத்தில், முக்த புருஷர்கள், பெண்கள் ஆகியோர் ஸ்வரூப தேகத்தினால் சஞ்சரித்தவாறு மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். முக்தரான பெண்களின் தேகத்தின் ஒளி, அழகு மற்றும் சௌந்தர்யம் நிரந்தரமாக இருக்கிறது. அவர்களின் அப்ராக்ருதமான தேக அங்கங்களின் அழகு, மகிழ்ச்சிக்கு காரணமாகவும், மாற்றம் இல்லாததாகவும் இருக்கிறது. முக்தர்கள் தத்தம் யோக்யதைக்கேற்ப பூர்ணராகி, ஹரிதியானத்தில் அபார ஸ்வரூப சுகத்தை அனுபவிக்கின்றனர். ருத்ராதி அமரர்கள், சுஜனர்களால் வணங்கப்படும் ஸ்ரீமத்வாசார்யர் நம் மூலமாகவும் உத்தம சாதனை செய்விக்கட்டும்.

**[ஸ்லோகம் 10]**

ஆனந்தான் மந்தமந்தா தததிஹி மருத: குந்தமந்தார நந்த்யா
வர்த்தாமோதான் ததானா ம்ருதுபதமுதிதோத் கீதகை:
ஸுந்தரீணாம் |
வ்ருந்தைராவந்த்ய முக்தேந்த்வஹி மகுமதனா ஹீந்த்ர
தேவேந்திர ஸேவ்யே
மௌகுந்தே மந்திரேஸ்மின் அவிரதமுதயன் மோதினாம்
தேவதேவ ||10

**தே3வதெக3ளெல்லரிகெ3 நீனெ**
**தே3வனாதா3னந்த3 தீர்த்த2னெ**
**பா4வ ஷுத்3த4தி3 நின்ன ப4ஜிஸெ முகுந்த3 மந்தி3ரதீ3**
**தீவி கொண்டி3ர்பா பரிமளத3 நன்**
**த்3யாவர்த்த மந்தா3ர குந்த3த3**
**ஆ வனதி3 ப3ருவந்த2 மந்தா3னிலனு ஸுக2 கொடு3வ ||23**

**அளஸ்வரகிந்ததி4க கா3யன**
**லலனெயர கையிந்த3 ஸேவெய**
**கொ3ளுவ முக்தாதி3ந்து3 அஹிமகு3 ஸ்மர அஹிபஸுரபா**
**க3ளு மொத3லு பூஜிஸுவ விஷ்ணுன**
**பொளலொளனிஷா நந்த3தி3ந்த3லி**
**ப3ளகெ மாடு3த இரலு எல்ல ஸுக2வ கொடு3திஹவு ||24**

வைகுண்டத்தில் மல்லிகை, மந்தார, நந்தியாவட்டை முதலான நறுமணம் மிக்க, அனைத்து ருதுக்களிலும் பூக்கும் பூக்களின் ஏராளமான தேவ வ்ருட்சங்கள் உள்ளன. வாயுதேவர் காற்று ரூபத்தில், சில சமயம் மெதுவாகவும், சில சமயம் வேகமாகவும் வீசியவாறு, பூக்களை மென்மையாக தொட்டவாறு, அவற்றின் நறுமணத்தை ஏந்திச் செல்கிறார். அவரின் அதீனமான அனைத்து ஜீவர்களுக்கும் மல்லிகை, நந்தியாவட்டைகளின் நறுமணத்தை வீசி, அவர்களுக்கு மகிழ்ச்சியின் அனுபவத்தை கொடுக்கிறார். சூர்ய, மன்மத, சேஷ, இந்திர, ருத்ராதி அனைத்து தேவதைகளால் வணங்கப்படும் நீங்கள் பாவி பிரம்மராக இருக்கிறீர்கள். முக்தர் அனைவரும் ஸ்ரீவாயுதேவரை

தழுதழுத்த குரலால் வணங்குகின்றனர். திடமான பக்தி, பக்தியின் நறுமணம் அனைத்து பிறவிகளிலும் வீசுமாறு பிராணதேவர் அருளட்டும்.

**[ஸ்லோகம் 11]**
உத்தப்தாத்யுத்கடத்வட் ப்ரகடகடகட த்வானஸங்கட்ட நோத்யத்
வித்யுத் வ்யூடஸ்புலிங்க ப்ரகரவிகரணோத் க்வாதிதே
பாதிதாங்கான் |
உத்காடம் பாத்யமானா தமஸி தத இத: கிங்கரை: பங்கிலே தே
பங்க்திர்க்ராவ்ணாம் கரிம்ணா க்லபயதி ஹி பவத்
த்வேஷிணோ வித்வதாத்ய ||11

**ஆதி3 வித்3வாம்ஸரு க3ளிகெ3 ஸ்ரீ**
**மோத3 தீர்த்த2 ப3ஹள தபிஸுவ**
**காத3 ஷிலெ ஸால் ப்ரகட மாடு3வ க1ட1க1ட1 த்4வனியா**
**போ3த4 ஸுஹ சன்னாகி3 க4ட்டிஸெ**
**லாத3 சபல விபா4க3 யைதி3தோ3**
**பாதி3 கிடி3க3ள பங்க்தி கிரணவு ஹரவித3த3ரல்லி ||25**

**ப3லு குதி3ஸுதிஹ்யனர்க ஸஹக**
**த்தலெய கவிதி3ஹ அந்த4 தமஸி**
**நலி பி3த்3து3 பா3தி4த ஷரீரத3 தவ வைரிக3ளிகெ3 |**
**முளித3 கு3ருத்வத3 நின்ன தூ3தரு**
**க3ளு எல்ல கடெ3யலி அவரிகெ3**
**அளுவ பரி து3க்க2வனு ப3டி3ஸுதலிஹரு அஹுத3ல்லி ||26**

ஸ்ரீஹரியை ஹரிபக்தர்களை, த்வேஷிக்கும், திட்டும், ஹரித்வேஷிகள் அனுபவிக்கும் அந்தம்தமஸ்ஸின், நரக யாத்திரையின் துக்கத்தை இங்கு சொல்கிறார். கும்மிருட்டு, சேறு நிறைந்த மடு, கல் மழை, அக்னி ஜ்வாலைகள், காதுகளை செவிடாக்கும் கடும் சத்தத்துடனான இடி மின்னல், இவற்றால் கடும் துக்கம் வருமாறு, ஸ்ரீமத்வாசார்யரின் சேவகர்களால் ஹரித்வேஷிகளுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. ஆகையால், வாயுதேவரை நினைவிலும், கனவிலும், சிறிதும்

த்வேஷம் செய்யாதவாறு, ஸ்ரீஹரி நமக்கு அருளட்டும். மத்வ மதத ஸித்தாந்தத பத்ததி விட ப்யாடி, பிட ப்யாடி, பிட்டு கெடப்யாடி கெடப்யாடி । என்பதே என்னில் எப்போதும் சிந்தனைக்கு வரட்டும். அன்யதா ஷரணம் நாஸ்தி । த்வமேவ ஷரணம் மம ||

**[ஸ்லோகம் 12]**

அஸ்மின் அஸ்மத் குரூணாம் ஹரிசரணசிர
த்யானஸன்மங்களானாம்
யுஷ்மாகம் பார்ஷ்வ பூமின் த்ருதரணரணிக ஸ்வர்க்கி
ஸேவ்யாம் பிரபன்ன: ।
யஸ்தூதாஸ்தே ஸ ஆஸ்தேऽதிபவ மஸுலப க்லேஷ
நிர்மோகமஸ்த
ப்ராயானந்தம் கதஞ்சின் நவஸதி ஸததம் பஞ்சகஷ்டேऽதி
கஷ்டே ||12

**த4ரெயொளகெ3 மத்3கு3ருவெ ஸ்ரீ ஹரி**
**சரண சிர த்4யானத3லி மங்க3ள**
**த1ர ஸ்வரூபவ த4ரிஸி லவலவிகெய ஸுரர கைய்யா ।**
**நிருத ஸேவ்யனெ நின்ன ப3ளி நெல**
**ஸிருவ நாத1னாதா3ஸிஸித3 ஆ**
**நர விசேஷாகார ஈ ப3கெ3 கஷ்ட ப3டு3திஹனு ||27**

**ஸுலப4யில்லதெ3 க்லேஷ து3க்க2தி3**
**ப3ளலி பி3ட்டிஹ தொ3ட்3ட3 நந்த3வு**
**கலது ஸம்ஸாராதி3 நிரந்தர அல்லெ இருதிஹனு ।**
**ப3லு கஷ்ட தை3கஷ்ட வாகி3ஹ**
**நெலெய நரகத3 லோகத3ல்லெயெ**
**கெலவு காலத3 லாத3ரெயு ஸரி வாஸ மாட3னு ||28**

ஸ்ரீவாயுதேவர் மற்றும் ஸ்ரீஹரிசரணங்களில் வணங்கியவாறு, சஜ்ஜனர்களுக்கு மங்களங்களை அருள்கிறார். அச்யுதனின் சேவையில் ஈடுபட்டிருக்கிறார். நம் வித்யா குருகளில் பிராணதேவர் நிலைத்திருந்து, நமக்கு ஞானோபதேசத்தை

செய்து கொண்டிருக்கும் ஆதிகுருவாக இருக்கிறார். 1. சிலருக்கு ஹரியில், வாயுதேவரில் பக்தி. 2. சிலருக்கு த்வேஷம் 3. சிலர்க்கு உதாசீனம் இருக்கிறது. பக்திக்கு முக்தி, த்வேஷத்திற்கு நரகம், உதாசீனத்திற்கு நித்யசம்சாரம். த்வேஷிகளுக்கு பஞ்ச கஷ்டெ - ஐந்து நரகங்களின் யாத்திரை இருக்கிறது. ஹே ஸ்ரீபிராணபதியே, எனக்கு உன்னில் பக்தியை அருள்வாயாக.

**[ஸ்லோகம் 13]**

க்ஷுத் க்ஷாமான் ரூக்ஷரக்ஷோ ரதகர நகர க்ஷுண்ண விக்ஷோபிதாக்ஷான்
ஆமக்னானந்த கூபே க்ஷுரமுகமுகரை: பக்ஷிபிர் விக்ஷதாங்கான் ।
பூயாஸ்ருங் மூத்ர விஷ்டா க்ருமிகுல கலிலே தத்க்ஷணாக்ஷிப்தஷக்த்யா
த்யுஸ்த்ரப்ராதார்தி தாம்ஸ்த்வத் த்விஷ உஷஜிஹதே வஜ்ரகல்பா ஜலூகா: ||13

**கீவு நெத்தர மூத்ர விஷ்டத$^3$**
**டா$^2$வு க்ரிமி குலதி$^3$ந்த$^3$ கத$^3$டி$^3$த$^3$**
**நோவினந்த$^2$ தமஸினலி சன்னாகி$^3$ முளுக$^3$தலி ।**
**தாவு க்ஷுத$^3$த$^3$லி க்ஷீணராதா$^3$**
**ஜீவரிகெ$^3$ க்ருஷராத$^3$ ராக்ஷஸ**
**ராவளியு த$^3$ந்த$^1$த$^3$லி நக$^2$த$^3$லி தூர்ண மாடு$^3$வரு ||29**

**தெரெது$^3$ க்ஷோபிஸு வக்ஷியலி நி**
**ந்னரிக$^3$ளனு காடு$^3$வரு அல்லிஹ**
**க்ஷுர முக$^2$த$^3$ பக்ஷிக$^3$ளு நடி$^1$ஸுத கா$^4$யமாடு$^3$வரு ।**
**த்வரதி$^3$ ஷக்த்யாத$^3$ஸ்த்ர ஸமூஹவு**
**கரது$^3$ பீடி$^3$ஸுதிரலவர ப$^3$ளி**
**நெரெது$^3$ ஜக்$^3$கு$^3$தலிஹ வஜ்ரஸமான ஜக$^3$ளிக$^3$ளு ||30**

ஸ்ரீஹரி மற்றும் வாயுதேவர் மேல் என்றென்றும் எப்போதும் த்வேஷம் செய்யக்கூடாது என்றும், அப்படி செய்தால்

எந்தவிதமான தண்டனை, நரக யாத்திரை ஆகிறது என்றும், நித்ய நரக துக்கம் எவ்வளவு பயங்கரம், சகிக்கமுடியாதது மற்றும் கொடுமையானது என்பதை ‘உத்தப்தாத்யுத்கட’ மற்றும் ‘க்ஷுத் க்ஷாமான் ரூக்ஷ’ என்னும் இரு ஸ்லோகங்களில் விவரித்திருக்கிறார். இந்தப் பிறவியில் மட்டுமல்ல, எந்த பிறவியிலும் ஹரி வாயு த்வேஷம், தூஷணை செய்தவர்களுக்கு இந்த தண்டனை கண்டிப்பாக கிடைக்கிறது. நர ஜென்மத்தினால் ஞான பக்தி சாதனை. நர ஜென்மம் வந்தபோது இந்த மனம் ஹரியின் கோயில் ஆகவேண்டும். நல்ல புத்தியினால் பிராணதேவரின் பாதங்களில் சரணடைந்தால், இந்த நரகத்தின் பயம் இல்லாததாகி, மற்றும் ஞான பக்தியின் ஸாதனைக்கு வழி தெரிகிறது. ஆனந்ததீர்த்தர் அந்தர்கத முகுந்தனின் ஸ்மரணை வருவதே முக்தி சுகம். சுக தீர்த்தர் எனக்கு இந்த சுகத்தை மறக்காமல் அருளட்டும்.

**[ஸ்லோகம் 14]**

மாதர்மே மாதரிஷ்வன் பிதரதுலகுரோ ப்ராதரிஷ்டாப்தபந்தோ
ஸ்வாமின் ஸர்வாந்தராத்மன் அஜரஜரயிதர் ஜன்மம்ருத்யா
மயானாம் |
கோவிந்தே தேஹிபக்திம் பவதிச பகவன் ஊர்ஜிதாம்
நிர்னிமித்தாம்
நிர்வ்யாஜாம் நிஸ்சலாம் ஸத் குணகண ப்ருஹதீம்
ஷாஷ்வதீமாஷு தேவ ||14

**மாத பித நிர்து$^{3}$ஷ்ட கு$^{3}$ருவெ**
**ப்$^{4}$ராதரிஷ்டாப்த ஸுபா$^{3}$ந்த$^{4}$வ**
**வாத தே$^{3}$வனெ ஸர்வரந்தர்யாமிகனெ முப்பா**
**தீத ஜனி ம்ருதி ரோக$^{3}$க$^{3}$ளிகெ$^{3}$**
**தா$^{4}$துகெ$^{3}$டி$^{3}$ஸுத ஜரகொடு$^{3}$த ஹே**
**மாதரிஷ்வனெ ஆருகு$^{3}$ண ஐஷ்வர்ய ஸம்பன்ன ||31**

**ஹரிய ப$^{3}$ளி நின்னலி ஊர்ஜித**
**நிரனிமித்த நிர்வ்யாஜ்யதி$^{3}$ந்த$^{3}$லி**
**ஸ்திரதொ$^{3}$ளிஹ ஸத்கு$^{3}$ணத$^{3}$ உதவளி தொ$^{3}$ட்$^{3}$ட$^{3}$ ஷாஷ்வித$^{3}$**

**வர ப4குதியனு ஷீக்4ரதி3ந்த3லி**
**மருத தே3வனெ நீனு அந்த:**
**கருணத3லி ஒலிதெ3னெகெ3 கொடு3 அச்யுதன நிஜதா3ஸ ||32**

ஸ்ரீபிராணபதி, ஜீவர்களுக்கு, பிராண, த்ராண, அன்ன, ஞான, கைவல்ய ஆகியவற்றைக் கொடுத்து, கொடுக்க வைக்கிறான். கருணையில் தாயாகி, போஷணையில் தந்தையாகி, தத்வ உபதேச செய்வதில் குருவாக, அன்பில் அண்ணனாக, கஷ்டம் வந்தபோது உதவி செய்யும் நண்பனாக, தக்க உதவி செய்வதில் ஆப்த பந்துவாக, நம் விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஸ்வாமியாகி, அனைவரின் சர்வாந்தர்யாமியாகி அனாதி காலத்தின் பந்துவாகி இந்த ஜீவனுக்கு (எனக்கு) ரட்சகனாக இருக்கும் உனக்கு அனந்தானந்த பிரணாமங்கள். உன் பாதபத்மங்களுக்கு திரும்பதிரும்ப என் நமஸ்காரங்கள். ஸ்ருஷ்டி, ஸ்திதி, நியமன ஆகிய செயல்களில் ஸ்ரீஹரியின் சங்கல்பத்திற்கேற்பவே மருததேவர் எப்போதும் இருக்கிறார். சஜ்ஜனர்களுக்கு பக்தி, ஞான, வைராக்ய, ஐஸ்வர்ய, சுகத்தின் வரம் கொடுப்பவர். அனைத்து வேத பிரதிபாத்யரான ஸ்ரீஹரி கோவிந்தனில் அனைத்து நிலைகளிலும், அனைத்து காலங்களிலும் எனக்கு நிரந்தரமான பக்தி இருக்குமாறு அருள்வாயாக. உன்னையே நம்பிய எனக்கு, உன்னில், ஸ்ரீஹரியில், உண்மையான பக்தி கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன்.

**[ஸ்லோகம் 15]**

விஷ்ணோரத்யுத்தமத்வாதகில குணகணைஸ்தத்ர பக்திம் கரிஷ்டாம்
ஸம்ஸ்லிஷ்டே ஸ்ரீதராப்யாம் அமதபரிவாராத்மனா சேவகேஷு
ய: ஸம்தத்தே விரிஞ்ச ஸ்வஸன விஹகபா நந்த ருத்ரேந்த்ர பூர்வே
ஷ்வாத்யாயம் ஸ்தாரதம்யம் ஸ்புடமவதி ஸதா வாயுரஸ்மத் குருஸ்தம் ||15

**கு3ண க3ணக3ளகி2ளத3லி நாரா**
**யணகெ3 அத்யுத்தமதி3 இஹ கா**
**ரணவு ஆ விஷ்ணு நலி ஸ்ரேஷ்டாத3ந்த2 ப4க்தியனு**
**வனஜ ஆலய த4ரிய ஆலிங்**
**க3னியொளலிஹ ஹரியல்லி ஆவா**
**தனு மாடு3திஹனு தருவாயத3லி ஹரி குரிது ||33**

**பரிவாராப்தகராகி3 இருவரு**
**ஸரிஸிஜாஸன ஷ்வஸன விஹக3ப**
**உரக3பதி ருத்ரேந்த்3ர மொத3லாத்3ஹரிய தா3ஸரொளு |**
**ஹிரிகிரிது தரதம்ய சன்னா**
**க3ரிது ஸ்மரிஸுத ப4க்தி மாடு3வ**
**நரகெ3 மத்3கு3ரு மருதனீஷ ரக்ஷிஸுதலிஹனு ||34**

பிரம்ம ருத்ரேந்த்ராதி தேவதைகளால் பரம பூஜ்யனும், ஸ்ரீமன் நாராயணனும், ஸ்ரீரமாரமணனும், வேத பிரதிபாத்யனுமான ஸ்ரீஹரி அனந்த குணங்களைக் கொண்டவன். ஒவ்வொரு குணமும் பரிபூர்ணமாகவே இருக்கும் ஸ்வதந்த்ரன். அப்ராக்ருத சரீரம் கொண்டவன். ஞானானந்த ஷரீரம் உள்ளவன். தோஷங்கள் அற்றவன். நீரஜ பவாண்டோதய ஸ்திதிகாரணன். கைவல்ய தாயகன். நித்யத்ருப்தன். இத்தகைய பகவந்தனின் பரமானுக்கிரகத்திற்கு பாத்திரரான, பிரம்மதேவரில் வாயுதேவரில், மற்றும் தாரதம்யத்திற்கேற்ப அனைத்து தேவதைகளில், குருகளில் மற்றும் சர்வோத்தம ஸ்ரீஹரியில் நன்றாக பக்தி செய்ய வேண்டும். வாயுதேவர் முன்று அவதாரங்களில் துஷ்டர்களை தண்டித்து, சிஷ்டர்களை சத்பக்தர்களை காக்கிறார். இத்தகைய வாயுதேவரின் சரண ஸ்மரணை எப்போதும் மனதில் நிலைத்திருக்கட்டும்.

**[ஸ்லோகம் 16]**
தத்வக்ஞான் முக்திபாஜ: ஸுகயஸி ஹி குரோர் யோக்யதா தாரதம்யாத்
ஆதஸ்தே மிஸ்ர புத்தீன் த்ரிதிவ நிரய பூ கோசரான் நித்யபத்தான் |

தாமிஸ்ராந்தாதிகாக்யே தமஸி ஸுபஹுலம்
துக்கயஸ்யன்யதாஞான்
விஷ்ணோராக்ஞாபிரித்தம் ஷ்ருதிஷதமிதிஹா ஸாதி
சாகர்ணயாம: ||16

**கு$^{3}$ருவெ தத்வஞான இஹ அப**
**வரக$^{3}$ யோக்$^{3}$யத$^{3}$ ஜீவ மானுஷ**
**வரரு மொத$^{3}$லாத$^{3}$ரிகெ$^{3}$ தரதம்யானுஸாரத$^{3}$லி |**
**ஹருஷத$^{3}$லி ஸுக$^{2}$ப$^{3}$டி$^{3}$ஸி ஸலுஹுவி**
**நிருத ஸம்ஸாரிக$^{3}$ள ஸ்வர்க்க$^{3}$தி$^{3}$**
**நிரய பூ$^{4}$மியொளிடு$^{3}$வி மிஸ்ரஞான காரணதி$^{3}$ ||35**

**அன்ய ஞானர அந்த$^{4}$தாமி**
**ஸ்ரென்னுதிஹ தமஸினலி அதித்$^{3}$ருட$^{2}$**
**து$^{3}$ண்ணிஸுவி து$^{3}$க்க$^{2}$வனு ஈ ரிதியலி ஹரி ஆக்ஞா**
**நின்னொளிஹதெ$^{3}$ந்தெ$^{3}$னுத ஷ்ருதி ஷத**
**க$^{4}$ன்ன இதிஹாஸக$^{3}$ளு பா$^{4}$ரத**
**வன்னெ மொத$^{3}$லு ப்ரஸித்$^{3}$த$^{4}$ க்$^{3}$ரந்த$^{2}$வு கேளுதிஹவெல்ல ||36**

வாயு ஜீவோத்தமர். முக்தி யோக்யரான அனைத்து ஜீவர்களுக்கும், சுக்ஞானத்தை அவரவர்களின் குருகள் மூலமாக பெறுமாறு செய்வீர்களாக. நித்ய சம்சாரிகளுக்கு மிஸ்ர ஞான, தமோ யோக்ய ஜீவிகளுக்கு விபரீத ஞான கொடுக்கிறீர்கள் ஆகையால், பகவந்தனின் சங்கல்பத்திற்கேற்ப 'ஜீவ'ர்கள் அனைவருக்கும் குருகள் என்றால், அது வாயுதேவரே ஆகியிருக்கிறார். அந்த ஜீவகுருகளால் அவரவர்களுக்கு அவர்களின் குணத்திற்கேற்ப சாதனை செய்விப்பவர் வாயுதேவர். ஸ்வர்க்க மோட்சாதி சுகத்தையும், தமோயோக்யர்களுக்கு துக்கத்தையும் கொடுக்கும் அதிகாரம் ஸ்ரீஹரிக்கு மட்டுமே இருக்கிறது. ஆனாலும், தன் பக்தர்களில் சிறந்தவரான வாயுதேவருக்கு இந்த சுக துக்கங்களை கொடுக்குமாறு ஹரியின் ஆணை ஆகியிருக்கிறது. வேதங்கள், நற்சாஸ்திரங்கள், பாரத இதிகாசாதிகள் இதற்கு பிரமாணமாக இருக்கின்றன.

**[ஸ்லோகம் 17]**

வந்தேஹம் தம் ஹனுமான் இதி மஹித மஹா பௌருஷோ பாஹுஷாலி:
க்யாதஸ்தேऽக்ர்யோऽவதார: ஸஹித இஹ பஹு ப்ரம்மசர்யாதி தர்மை: |
ஸஸ்னேஹானாம் ஸஹஸ்வானஹரஹரஹிதம் நிர்தஹம் தேஹ பாஜா
மம்ஹோ மோஹாபஹோ ய: ஸ்ப்ருஹயதி மஹதீம் பக்திமத்யாபி ராமே ||17

**வாத நினகா3னமிஸுவெனு ஈ**
**பூ4தளதி3 ஹனுமெம்ப3 நாமதி3**
**க்2யாத அவதார ப3ஹு வடு த4ர்மவுள்ளந்தா2**
**நீதபூஜெய எல்லரிந்த3லி**
**தா தெகெ3து3 கொம்ப3ந்த2 தோள்ப3ல**
**தா3தி1ஷய யித்3த3ந்த2 தாளுவ ஷக்திஸஹிதாத3 ||37**

**அதி ப3லத3 அவதார நீனே**
**அதுல ஸ்னேஹத3லிந்த3 ப4க்திலி**
**ஸதத ஸேவிஸுவந்த2 தே3ஹவ த4ரிஸி இஹனெம்பா3 |**
**ப்ரதி தி3வஸ அப்ரீயவனு த3ஹி**
**ஸுத து3ரித அஞ்ஞான கெடி3ஸுத**
**க்ஷிதிமக3ள பதியல்லி ஹரிப4க்தியனு இச்சயிஸி ||38**

ஸ்ரீ வாயுதேவர் தம் மூன்று அவதாரங்களில் மூலரூபத்திற்கு சமமான, ஞான கார்ய, பல கார்ய, ஸேவா கைங்கர்யத்தினை செய்து ‘ஹனுமான்’ என்னும் பெயருக்கு ஏற்ப புகழ் பெற்றிருக்கிறார். ஹனு, மஹாஞான பௌருஷ, பாஹுஷாலி, பிரம்மசர்ய, சகிப்புத்தன்மை, அஞ்ஞானத்தை பரிகரிப்பவர், பூர்ணபக்தி, நிஷ்காம சேவை செய்பவர், ஹரி இச்சைக்கேற்ப நடப்பவரான ஹனுமந்த தேவர் தீமந்த, குணவந்த, பலவந்த மற்றும் பெயருக்கு ஏற்றாற்போல இருப்பவராக ஸ்ரீராமனின் தூதராக, புகழ் பெற்றிருக்கிறார். அபார மகிமாதிஷயம் உள்ள

ஜீவோத்தமரான வாயுதேவருக்கு, அனந்த கல்யாண குண பரிபூர்ண ஸ்ரீஹரிக்கு என் அனந்த பிரணாமங்கள்.

**[ஸ்லோகம் 18]**

ப்ராக் பஞ்சாஷத் ஸஹஸ்ரைர்வ்யவஹித மமிதம் யோஜனை:
பர்வதம் த்வம்
யாவத் ஸஞ்சீவனாத்யௌஷத நிதிமதிக ப்ராண
லங்காமனைஷீ: |
அத்ராக்ஷிதுத் பதந்தம் தத உத கிரிமுத்பாடயந்தம்
க்ருஹீத்வாss
யாந்தம் கே ராகவாங்க்ரௌ ப்ரணதமபி ததைக க்ஷணே
த்வாம் ஹி லோக: ||18

**அதி4கப்ராணனெ பூர்வத3லி நீ**
**முத3தி3 ஐவத் ஸஹஸ்ரமித கா3**
**வத3த3 வ்யவதா4னமித ம்ருதர(த3) ஸஞ்சீவனௌஷத4வா |**
**மொத3லெ ஆகி3ஹ வனஸ்பதிக3ளிம்**
**து3த3தி4யனிஸித3 க3ந்த4மாத3ன**
**சதுரனே எல்லா கி3ரிய லங்காபுரகெ தந்தி3 ||39**

**தருவாய லங்கித3 கித்தித3**
**கி3ரி தெகெ3து3 கொண்ட்3ஹாரி மேலகெ1**
**ஹரிபரத3 மார்க்க3த3லி ப3ந்தா3 ராக4வாங்க்4ரியலி |**
**ஷிரவிடு3த நமனவனு மாடி3த3**
**மருதனே நின்னகி2ல லோகத3**
**நரரு ஒந்தே3 க்ஷணதி3 நோட்3த3ரு ப3ஹுப்ரஸித்3த4விது3 ||40**

சர்வ தத்வங்களுக்கு, சர்வ ஜீவர்களுக்கு பிராணதேவரே ப்ரேரகர். சர்வஜீவ நியாமகர். இலங்கையிலிருந்து 50,000 யோஜன தூரம் இருக்கும் கந்தமாதன பர்வதத்தை எடுத்து வந்து, ம்ருத ஸஞ்சீவினி, ஸந்தானுகரண மூலிகை, விகல்யகரணீ மூலிகை, ஸர்வணகரணி மூலிகைகளைக் கொண்டு வந்து, பல சைன்யங்களை பிழைக்க வைத்தார். ஒரே நொடியில் நீங்கள் கந்தமாதன பர்வதத்தைக் கொண்டு வர

பாய்ந்ததை, பர்வதத்தைக் கொண்டு வந்ததை, அதனால் அபாரமான பலன்களைப் பெற்று, அடுத்த நொடியில் ஶ்ரீராமசந்திரனின் பாதங்களில் விழுந்து வணங்கியதை அனைத்து தேவதைகளும் பார்த்து மெய் மறந்தனர். இத்தகைய அற்புத சக்தி, வேகம், காரியத்தை செய்த விதத்தை, இலங்கையில் இருந்தவர்கள் அனைவரும், ஆகாயத்தில் இருந்த அனைவரும் பார்த்து உன்னை கொண்டாடினார்கள். இப்படியாக மகிமாதிஶய சக்தியைக் கொண்ட பிராணதேவருக்கு என் அத்யந்த நமஸ்காரங்கள்.

**[ஸ்லோகம் 19]**

க்ஷிப்த: பஸ்சார் ஸலீலம் ஷதமதுலமதே யோஜனானாம் ஸ உச்ச
ஸ்தாவத் விஸ்தாரவாம்ஸ்சாப்யுபல லவ இவ வ்யக்ர புத்யா த்வயாத: |
ஸ்வஸ்வஸ்தானஸ்திதாதி ஸ்திர ஷகலஷிலா ஜால ஸம்ஷ்லேஷ நஷ்ட
ச்சேதாங்க: ப்ராகிவாபூத் கபிவர வபுஷே: தே நம: கௌஷலாய ||19

**ஸரி ரஹித மதி முக்$^{2}$ய ப்ராணனெ**
**கி$^{3}$ரிய ஷத யோஜனத$^{3}$ உன்னத**
**பரிமிதத$^{3}$ விஸ்தார அஷ்டே ஆத$^{3}$ரு ஸரியே**
**ஹிரித்$^{3}$னு ஸ்ரேஷ்டவாகி$^{3}$ர்த்$^{3}$த$^{3}$ கு$^{3}$ண வா**
**நரத$^{3}$ ரூபத$^{3}$ நின்ன ஆடதி$^{3}$**
**தருவாய மணி லேஷதோபாதி$^{3}$ ரிஸு பட்டிதெலா ||41**

**தருவாய தம்ம தம்ம ஸ்த$^{2}$ளத$^{3}$லி**
**ஸ்தி$^{2}$ரதொ$^{3}$ளிஹ பாஷாண ஜாலவு**
**வரஸுதிரெ முரிதி$^{3}$ர்தா$^{3}$னி கித்திர்த்த$^{3}$ கூ$^{2}$னக$^{3}$ளா**
**யிரதெ$^{3}$ மாஜுத மொத$^{3}$லினந்த$^{3}$தி$^{3}$**
**முரியாதி$^{3}$யனெ ஆயிது கேளு கபி**
**வர ஷரீரனெ தவ குஷலகோ$^{3}$ஸ்கர நமனவம் மாள்ப ||42**

அதுலமதி, கபிவர வபுஷ:, அஸாமான்ய எனப்படும் மற்றவர்களுக்கு சமானம் இல்லாத விசேஷ பூர்ணப்ரக்ஞாவந்தர் எனப்படும் கபிரூபத்தின் ஹனுமந்தனின் பலமும், கௌஷலமும், அஸாதாரணமானதாகும். 1200 மைல்கள் உயரம், அவ்வளவே எடை உள்ள பர்வதத்தை, இலங்கை பட்டணத்திலிருந்து 5,000 யோஜனை தூரம் இருக்கும் அந்த இருப்பிடத்திற்கு, ஒரு சிறிய கோலி குண்டினை தூக்கி எறிவதைப் போல, தூக்கி எறிந்தபோது, பர்வதத்தில் இருந்த, புழு, பூச்சி, ஜீவராசிகளுக்கு எந்த பிரச்னையும் இல்லாதவாறு, அனைத்தையும் திரும்ப அதே இடத்தில் நிறுவி, வைத்த உங்கள் புத்தி கூர்மை, விக்ஞானத்திற்கு அனந்த நமஸ்காரங்கள். கபி ரூபத்தில் இருந்தாலும் 'மூலரூப' வாயு தேவரில் இருந்த குண, பல, அகணித சாதுர்யங்களை காட்டிய ஹனுமந்த தேவருக்கு என் நமஸ்காரங்கள்.

**[ஸ்லோகம் 20]**

த்ருஷ்ட்வா துஷ்டாதிபோர: ஸ்புடிதகனகஸத் வர்ம
க்ருஷ்டாஸ்திகூடம்
நிஷ்பிஷ்டம் ஹாடகாத்ரி ப்ரகடதட தடாகாதி ஷங்கோ
ஜனோऽபூத் ।
யேனாऽஜௌ ராவணாரி ப்ரிய நடன படுர் முஷ்டிரிஷ்டம்
ப்ரதேஷ்டும்
கிம் நேஷ்டே மே ஸ தேऽஷ்டாபத கடக தடித் கோடி
பாம்ருஷ்ட காஷ்ட: ||20

**ராவணாரிகெ$^{3}$ ப்ரிய நடிஸுவ**
**பா$^{4}$வ படு ஆத$^{3}$ந்த$^{2}$ கரத$^{3}$லி**
**ஸூஸுவ கங்கணவு கோடி$^{1}$ தடித்ப்ரகாஷவனு**
**தீ$^{1}$வி தா$^{3}$ஸெய நின்ன முஷ்டியு**
**தே$^{3}$வ எனகெ$^{3}$ அபீ$^{4}$ஷ்ட$^{2}$ ப$^{2}$லக$^{3}$ளு**
**ஈ வத$^{3}$கெ ஷக்தல்ல வேனோ ஆ முஷ்டி$^{2}$யிந்த$^{3}$ ||43**
**து$^{3}$ருள தை$^{3}$த்யாதி$^{4}$ப த$^{3}$ஷாஸ்யன**
**ப$^{4}$ரம கவசவ ஸீளி அஸ்தி$^{2}$ய**

**முரிது$^{3}$ நுக்$^{3}$கு$^{3}$னளந்தெ பூர்ணவ மாடு$^{3}$திரலவனா**
**உரவு ஜன நோட$^{3}$க்கெ ஹாடக**
**பரவதத$^{3}$ தீரத$^{3}$லி அத்யம்**
**திருவ ஷங்க$^{2}$க$^{3}$ளந்தெ ஆ க்ஷணதொ$^{3}$ளகெ$^{3}$ அது$^{3}$ ஆய்து ||44**

ராவணனின் சக்தி ஆயுதங்களின் பயன்பாட்டினால் லட்சுமணன் மூர்ச்சை அடைந்தபோது, ராவணன் லட்சுமணனை சிறைபிடிக்க முயன்றபோது, ஹனுமந்தன், ராவணனின் இதயத்தில் தன் முஷ்டியால் குத்தினான். ஹனுமந்தன் அடிப்பதற்கு கை எடுத்தபோது, அவனின் கையில் இருந்த கங்கணங்கள் கோடி மின்னலைப் போல ஒளிர்ந்து, ராட்சச சைன்யத்திற்கு திக்பிரமை உண்டானது போல ஆயிற்று. ஹனுமந்தனின் பலமான வஜ்ர முஷ்டி அடிக்கு, ராவணன் தரித்த தங்கக் கவசம் பொடிப்பொடியாகி, இதயம் நொறுங்கியதைப் போல ஆயிற்று. ஹனுமந்தனின் அடிக்கு ராவணனின் இதய எலும்புகள் முறிந்து விழுந்தபோது, சரோவரத்தின் கரையில் சங்குகள் பல விழுந்ததைப் போல ஆயிற்று. ஸ்ரீராமனின் பக்தர்களுக்கு இஷ்டார்த்தங்களைக் கொடுக்கும், தைத்யாதிகளுக்கு கஷ்டங்களைக் கொடுக்கும், ஸ்ரீபிராணதேவரின் கருணைப் பார்வை என் இஷ்டார்த்தங்களை நிறைவேற்றட்டும் என்று நமஸ்காரங்களை செலுத்துகிறேன்.

**[ஸ்லோகம் 21]**
தேவ்யாதேஷ ப்ரணீதி த்ருஹிணஹர வராவத்ய ரக்ஷோ விகாதா
த்யா ஸேவோத்யத் தயார்த்ர: ஸஹபுஜ$_{S}$மகரோத் ராமனாமா முகுந்த: |
துஷ்ப்ராபே பாரமேஷ்ட்யே கர தலமதுலம் மூர்த்னி வின்யஸ்ய தன்யம்
தன்வன் பூய: ப்ரபூத ப்ரணய விகஸிதாச் சேக்ஷணஸ்த் வேக்ஷமாண: ||21

**த4ரி ஸுதெகெ3 ஸ்ரீராமனாக்ஞுவ**
**த்வரதி3 பேளுத பி3ரம்ம ருத்3ரர**
**வரக3ளிந்த3லவத்4யராகி3ஹ ராக்ஷஸருக3ளனா**
**மரண மாள்பத3 காதி3யெனிஸுத**
**ஸருவ ஸேவெயொளிரலு ஹுட்டித3**
**கருண ரஸதா3ர்த்3ரா மக3தொ3ப்பரிகொ3ஷ்யவஹ த3ந்தா2 ||45**

**பரமேஷ்டி பத3 கொடு3த அஸத்3ருஷ**
**கரதளவு மூர்த்4னி யொளிடு3தலி**
**கு3ருவெ நின்ன க்ருதார்த்த2 மாடெ3-பி4வ்யக்த ஸ்னேஹத3லி |**
**திருகி3 விகஸித அப்ஜதோ3ள் கண்**
**தெரெது3 ஸ்ரீராமெப்3ஹெஸரின**
**ஹரியு நின்ன விசேஷ நோடு3த போ4க3 மாடி3த3னு ||46**

மோட்சத்தைக் கொடுக்கும் அதிகரம் ஸ்ரீஹரியைத் தவிர வேறு எந்த தேவதைகளுக்கும் இல்லை. ஸ்ரீஹரி ராமாவதாரத்தில் – நீங்கள் (வாயு – ஹனுமந்த தேவர்) செய்த அற்புத, அகணித சேவைக்கு மெச்சி, கருணைக்கடலான ஸ்ரீராமனின் அன்பு, ஒவ்வொரு நொடிக்கும் வளர்ந்தவாறு, மகிழ்ச்சி அடைந்து, ஸ்ரீராமனின் கண்கள் மலர்ந்து உங்களையே பார்த்துக் கொண்டிருந்தது. பிரம்ம ருத்ர தேவரிடமிருந்து வரம் பெற்ற, வெல்ல முடியாத அசுரர்களை, ஸ்ரீஹரியின் சங்கல்பத்திற்கேற்ப கொன்று, ஸ்ரீசீதாபதியின் சேவையை அமோகமாக செய்த, ஈடில்லாத புண்ய காரியத்திற்கு மனம் மெச்சி ஸ்ரீராமன், உங்கள் தலை மேல் தன் அமிர்த கைகளை வைத்து அருளினான். ஸ்வர்க்க லோகத்தின் ஸ்வரூப சுகத்தை ஸ்ரீஹரி போகிப்பதைப் போல, உங்களுக்கும் அந்த சுகத்தின் சஹபோகத்தைக் கொடுத்து பிரம்ம பதவியை அருளினான். ஸ்ரீராமனின் கருணையைப் பெற்ற பிராணதேவர், எனக்கு ஞான பக்தி வைராக்ய சாதனைக்கு த்ராணத்தை அருளட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**[ஸ்லோகம் 22]**

ஜக்னே நிக்னேன விக்னோ பஹுல பல பகத்வம்ஸனாத் யேன ஷோசத்
விப்ரானு க்ரோஷ பாஷைரஸு வித்ருதி ஸுகஸ்யைக சக்ரா ஜனானாம் ।
தஸ்யை தே தேவகுர்ம: குருகுல பதயே கர்மணா ச ப்ரணாமான்
கிர்மீரம் துர்மதீனாம் ப்ரதமமதசயோ நர்மணா நிர்மமாத ||22

**எலோ எலோ க்ரீடா3 மொத3லு கு3ண**
**க3ள விசிஷ்டத3 பீ4மசேனனெ**
**ப3லு க்லேஷ ப3டு3வந்த2 பூ4ஸுரரல்லி த3யெவெம்பா3 ।**
**செலுவ பாஷாதீ4ன நின்னிந்**
**தளியுவந்த1தி1 ப3லத3 ப3கனா**
**பொளல ஜனரிகெ3 விக்4ன கொந்த3ஸுர நதி4க ஸுக2வித்தே**
**||47**

**தருவாய து3ர்பு3த்3தி4யாத3 அ**
**ஸுர மொத3லிக3 கிர்மீரவன**
**பரிஹாஸதி3ம் கொந்தெ3யா ஈ மஹிமெயுள்ளா ।**
**கு1ருகு1லகெ பதியாத3 நிமகோ3**
**ஸ்கர நின்னய கர்மக3ளிகு3**
**பரம ப4குதியலிந்த3 நிருததி3 நமன மாடு3வெனு ||48**

ஸ்ரீபீமசேனனின் அவதாரத்தில் செய்திருக்கும் அற்புத செயல்களை வர்ணித்தவாறு ஸ்ரீவாயுதேவரை வணங்குகிறார். ஸ்ரீபீமசேன தேவர் செய்த பால லீலைகள், செய்த செயல்கள், ஹரிவிரோதியான துரியோதனன், அவனின் சகோதரர்கள், அபிமானிகளைக் கொன்ற, மற்றும் ஸாது ஸஜ்ஜனர்களின் சோகத்தை பரிகரிக்கும் காரியங்கள் இருக்கின்றன. ஆதியில் பகாசுரன், கிர்மீரர்களைக் கொன்று, குருகுலத்திற்கு மஹா ஸாஹஸிகள் எனப்பட்டீர்கள். இதனால் ஏகசக்ர நகரத்தின் மக்களுக்கு மட்டுமல்லாமல், அனைத்து சாத்விக மக்களுக்கும், மகிழ்ச்சி உண்டானது. ஹனும, பீம, மத்வ என மூன்று

அவதாரங்களிலும் சக்ரபாணி ஸ்ரீஹரியை வணங்கியவாறு, உங்களின் ஆணை மற்றும் அன்பின் வளையத்தில் இருப்பவர்களை காக்கும் உங்களின் வலிமை, ஞான காரியத்திற்கு என் அனேக அனேக நமஸ்காரங்கள்.

**[ஸ்லோகம் 23]**

நிர்ம்ருத்னன்னத்ய யத்னம் விஜரவர ஜராஸந்த
காயாஸ்திஸந்தீன்
யுத்தே த்வம் ஸ்வத்வரேவா பஷுமிவ தமயன் விஷ்ணுபக்ஷ
த்விடீஷம் ।
யாவத் ப்ரத்யக்ஷ பூதம் நிகில மகபுஜம்
தர்ப்பயாமாஸிதாஸௌ
தாவத்யாssயோஜி த்ருப்த்யா கிமு வத பகவன்
ராஜஸூயாஸ்வமேதே ||23

**ஜரெரஹித தே3வதெ க3ளெல்லர**
**ஹிரியனெனிஸுவ பீ4மஷேனனெ**
**ஜரிஜகாயத3 அஸ்தி2 ஸந்தி4க3ளனு அனாயாஸ**
**முரிது3 யுத்3த4தி3 ஸத்4வரபரி**
**ஹரிய பக்ஷக3ரிக3ளெனிஸிருவ**
**து3ரளரீஷா மாக3த4ன மேத4த3லி பஷுவோலு ||49**

**மரண மாடி3 ப்ரத்யக்ஷ தோருவ**
**த4ரியொளகி2ளா யாக3 பு4ஞ்சிப**
**ஹரிகெ3 யாவத்த்ருப்தி ப3டி3ஸிதை3 பூஜ்ய ஸ்ரீ பீ4மா**
**அரஸ ஸோமாத4ரி மேத4த3லி ஆ**
**ஹரியு பூர்ணாத3ந்த2 த்ருப்ததி3**
**மருத நிம்மொளு ஸம்ப3ந்த4 மாடி3த3னெ ஏன்ஹேளோ ||50**

பாண்டு ராஜனுக்கு இந்திரசபையில் கௌரவம் கிடைப்பதற்கு ராஜசூய யாகம் செய்ய வேண்டும் என்று நாரதர், தர்மராஜனிடம் கூறினார். இந்த யக்ஞம் செய்வதற்கு ஸ்ரீகிருஷ்ணனின் ஆணையை, உதவியைக் கேட்கிறார். ஸ்ரீகிருஷ்ணனின் எதிரி மற்றும் ஹரி பக்தர்களின்

த்வேஷிகளின் முக்யஸ்தனான ஜராசந்தனின் (மாகதன) வதம் ஆகாமல், இந்த யக்ஞம் பலன்களைக் கொடுக்காது என்று அறிந்து, பீம அர்ஜுனனுடன், ஸ்ரீகிருஷ்ணன் கிரிவஜ்ர என்னும் நகரத்திற்கு ஜராசந்தன் இருந்த இடத்திற்கு சென்றான். போர் துவங்கியது. பிரம்மதேவரிடம் வரம் பெற்ற அந்த ஜராசந்தனை, பீமசேனன் போர் புரிந்து, ஸ்ரீஹரியின் விருப்பத்திற்கேற்ப, அனாயாசமாக ஜராசந்தனின் தேகத்தை இரண்டாக கிழித்து, ஸ்ரீஹரியின் எதிரில், போர் என்னும் யக்ஞத்தில் பூர்ணாஹுதியாக கொடுத்து முகுந்தனின் ப்ரீதிக்கு பாத்திரர் ஆனார். அத்தகைய ஸ்ரீபீமசேனதேவர் நமக்கும் ஞான சக்திகளைக் கொடுக்குமாறு அருளட்டும்.

**[ஸ்லோகம் 24]**

க்ஷேவாக்ஷீணாட்டஹாஸம் தவரணமரி ஹன்னுத்
கதோத்தாமபாஹோ:
பஹ்வக்ஷோஹிண்யனீக க்ஷபண ஸுனிபுணம் யஸ்ய
சர்வோத்தமஸ்ய ।
ஷுஷ்ரூஷார்த்தம் சகர்த்த ஸ்வயமயமிஹ ஸம்வக்துமானந்த
தீர்த்த
ஸ்ரீ மன்னாமன் ஸமர்த்தஸ்த்வமபி ஹி ய்யுவயோ: பாதபத்மம்
ப்ரபத்யே ||24

**அரி ஸம்ஹாரக நாத$^{3}$ ஸம்ப$^{1}$**
**த்கரத$^{3}$ ஆனந்தா$^{3}$ர்ய நாமதி$^{3}$**
**இருவ பீ$^{4}$மன ஸிம்ஹதோ$^{3}$பாதே$^{3}$லி அபி$^{4}$வ்ருத்$^{3}$த$^{4}$**
**ஹிரி நகி$^{3}$யு யுக்தாத$^{3}$ நிம்மொளு**
**ப$^{3}$ருவ ப$^{3}$ஹளா க்ஷோஹிணி த$^{3}$ள**
**த்வரதி$^{3}$ ஸம்ஹார மாடி$^{3}$ ப$^{3}$ஹு நிபுணத$^{3}$லி ரணவன்னு ||51**

**தா$^{3}$வ ஸர்வோத்தமகெ$^{3}$யிது$^{3}$ அதி**
**ஸேவ அர்த்த$^{2}$தி$^{3}$ மாட்$^{3}$த$^{3}$ மஹகெ$^{3}$தெ$^{3}$**
**தாவு ஹிடி$^{3}$தெ$^{3}$தி$^{3}$ரில்ல த$^{3}$ந்தா$^{2}$ பா$^{3}$ஹுக$^{3}$ளு உள்ளா**
**தே$^{3}$வ தவ யுத்$^{3}$த$^{4}$தி$^{3}$ அனந்தர**
**ஸ்ரீ வரனு ஸம்யுக்த வாகி$^{3}$ஹ**

**பா⁴வதி³ம் நிம்மிப்³ப³ரடி³ பத்³மக³ள மொரெ ஹோகு³வெ ||52**

ஸ்ரீபீமசேன தேவரின் மகா பாஹு யுத்தம் மற்றும் ஸ்ரீமன் மத்வாசார்யரின் சாதுர்யத்தின் வாக் யுத்தம் இந்த இரண்டும் அற்புதமானவை ஆகையால், வர்ணிப்பதற்கு முடியாதது என்று சொல்லியவாறு, ஞான பலத்திற்கு சரிசமானம் இல்லாத பீமசேனன் மற்றும் ஆனந்த தீர்த்தரின் பாத பத்மங்களுக்கு ஷரணு ஷரணு என்று வணங்குகிறார். ஸ்ரீமத்வாசார்யர் தனது சஞ்சாரத்தில் குருக்ஷேத்திரத்திற்கு வந்தபோது, பூமியில் புதைந்திருந்த கதையை வெளியே எடுத்து, அந்த கதையை தூக்கிக் காண்பித்து, தாமே அந்த பீம பலம் உள்ள பீமசேனன் என்று தெளிவு படுத்தினீர்கள். பீமசேனதேவர் ஹுங்காரம் செய்தபோது, சிம்ம நாதம், அட்டகாசத்தின் சிரிப்பில் சிம்ம கர்ஜனையைப் போல இருந்த சத்தத்திற்கு எதிரிகளின் பலமே அடங்கிப் போவதாக இருந்தது. குருக்ஷேத்திரத்தில் செய்த போர், பீமசேனதேவர் ஸ்ரீகிருஷ்ணனின் ப்ரீத்யர்த்தமாக, செய்தது. அதில் வேறு நோக்கம் இல்லை. இதனை ஸ்ரீகிருஷ்ணன் கண்ணாரக் கண்டிருக்கிறான். இவரின் அருள் ஸ்மரணையினால் என்னில் ஹரிபக்தி நிரந்தரமாக, நிலைத்திருந்து, வளரட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**[ஸ்லோகம் 25]**

த்ருஹ்யந்தீம் ஹ்ருத்ருஹம் மாம் த்ருத மனில பலாத் த்ராவயந்தீம வித்யா
நித்ராம் வித்ராவ்ய ஸத்யோரசன படுமதாऽபாத்ய வித்யா ஸமுத்ர |
வாக்தேவி ஸா ஸுவித்யா த்ரவிணத விதிதா த்ரௌபதி ருத்ர பத்ன்யா
த்யுத்ரிக்தா த்ராக பத்ராத் ரஹயது தயிதா பூர்வபீமாऽக்ஞயா தே ||25

**ஞான தத்வ ஸமுத்$^{4}$ரனெ ஸு**
**க்ஞான தத்வெம்ப$^{3}$ந்த$^{2}$ த்$^{3}$ரவ்யவு**
**நீனு கொட$^{3}$வவ முஞ்செ பீ$^{4}$மாவதார தாள்த$^{3}$ ஷாபா**
**ஏணலோசனெ த்$^{3}$ரௌபதியு ஷிவ**
**ராணி ஷச்யாதி$^{3}$க$^{3}$ளதி$^{4}$க தவ**
**மானினியு வாக்$^{3}$தே$^{3}$வி த்$^{3}$ரோஹவ மாள்ப பு$^{3}$த்$^{3}$தி$^{4}$யனு ||53**

**மத்தெ ஹ்ருத$^{3}$யதி$^{3}$ து$^{3}$க்க$^{2}$ ப$^{3}$டி$^{3}$பது$^{3}$**
**அத்த இத்தோடா$^{3}$டு$^{3}$திஹ மன**
**கத்தலெய அஞ்ஞானாலஷ்யவு நின்ன ஆக்ஞெயலி**
**ஷக்தி களெத$^{3}$வகெல்ல ஓடி$^{3}$ஸி**
**தத்கால கவிதெ பேள்வ படு$^{1}$ மாடெ$^{3}$**
**த்யந்த த்வர ப$^{3}$ஹ அமங்க$^{3}$ல பி$^{3}$டி$^{3}$ஸலதி$^{1}$ப$^{3}$லதி$^{3}$ ||54**

வாயுதேவர் வித்யா சமுத்ரர். வேத நற்சாஸ்திரங்களில் கடலளவு ஞானம் உள்ளவர். பூர்ணபிரக்ஞர். ஞான செல்வத்தையும் மற்றும் நிரந்தர சுகத்திற்கு சாதனமான வித்யையை போதிக்கும் ஜகத்குருகள். வேத சாஸ்திரங்களின் அபிமானி தேவதை - பாரதிதேவி. வாயுதேவரின் விருப்பம் மற்றும் ஆணைக்கேற்ப :

ஸதத ஹரியலி குருகளலி ஸத்ரதிய பாலிஸி
பாகவத பாரத புராண ரஹஸ்ய தத்வகளருபு கருணதலி ||

என்று பாரதிதேவியிடம் பிரார்த்திக்கிறேன். அனாதி காலத்திலிருந்தும் அஞ்ஞான, விபரீத ஞானங்களால் நிஸ்சிதமான ஹரி சர்வோத்தமத்வ ஞானத்தைப் பெறாமல், சம்சார துக்க சாகரத்தில் இந்த ஜீவன் அல்லாடுகிறது. சாதனைக்காக சுக்ஞானத்தை வேகமாக அருள்வாயாக என்று ஸ்ரீவாக்தேவியிடம் வேண்டிக் கொள்கிறேன். அவித்யை, விபரீத ஞானத்தின் இருட்டினை ஓட்டி, ஞானத்தின் வெளிச்சத்தில் வாழ்க்கை ஒளிருமாறு செய்வதற்கு பாரதிதேவியருக்கு மட்டும் சாத்தியம். ஆகவே, ஸ்ரீ பாரதீஷனின், பாரதிதேவியரின் சரண

கமலங்களில் சரணடைந்து, அவர்களின் காருண்யத்திற்காக பிரார்த்திக்கிறேன்.

**[ஸ்லோகம் 26]**

யாப்யாம் ஷுஷ்ரூஷராஸீ: குருகுல ஜனனீ க்ஷத்ர
விப்ரோதிதாப்யாம்
பிரம்மப்யாம் ப்ரும்ஹிதாப்யாம் சிதிசுக வபுஷா க்ருஷ்ண
நாமாஸ்பதாப்யாம் |
நிர்பேதாப்யாம் விசேஷாத் த்விவசன விஷயாப்யாம்
அமூப்யாம் உபாப்யாம்
துப்யம் ச க்ஷேமதேப்ய: ஸரஸிஜ விலஸல் லோசனேப்யோ
நமோ஽ஸ்து ||26

**அனில நீ கு$^{1}$ருராயனொம்ஷதி$^{3}$**
**ஜனன மாடி$^{3}$ரெ க்ஷத்ர குல ப்$^{4}$ரா**
**ம்மண குலதி$^{3}$ வ்யக்தாகி$^{3}$ சித ஸுக$^{2}$ தே$^{3}$ஹ யுக்தாதா$^{3}$**
**கொனெயு பே$^{4}$தி$^{3}$ல்லத$^{3}$ விசேஷா**
**த்மன எரடு$^{3}$ ரூபக$^{3}$ளு வ்யாஸ க்ரு**
**ஷ்ணனு எம்ப$^{3}$ நாமக$^{3}$ளிகி$^{3}$வர விஷயராத$^{3}$ந்தா$^{2}$ ||55**

**முத$^{3}$தொ$^{3}$ளிப்$^{3}$ப$^{3}$ரு க்ருஷ்ண நாமா**
**ஸ்பத$^{3}$ரு ஷப்த$^{3}$ பி$^{3}$ரம்மவாச்யரு**
**சதுர இவரிப்$^{3}$ப$^{3}$ரிகெ$^{3}$ ஸேவெய இச்செயவனா தீ$^{3}$**
**ஸத$^{3}$மலின ஸஜ்ஜனரிக$^{3}$தி ஸுக$^{2}$**
**ப்ரத$^{3}$னெ கண்ணொளு கமலக$^{3}$ள அந்**
**த$^{3}$தி$^{3}$ எஸெயுதிஹ நிமகா$^{3}$க$^{3}$லி என்ன நமனக$^{3}$ளு ||56**

ஸ்ரீபீமசேன தேவர், ஸ்ரீகிருஷ்ணனை மற்றும் ஸ்ரீவேதவியாச தேவரையும் சேவை செய்வதற்காக குரு (kuru) குலத்தில் அவதரித்தார். ஸ்ரீவேதவியாசர் நாராயணனின் அவதாரம் என்பதற்கு பிரம்மாண்ட புராணத்தின் பிரமாணம் இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனும் நாராயணனின் அவதாரம். இவரின் தேகம் அப்ராக்ருதம். ஞானானந்த பரிபூர்ணமானது. ஆகையால், பிரம்ம என்று அழைக்கப்படுகிறது. இவரின் வியாப்தி

பிரம்மாண்டத்தின் உள்ளே மற்றும் வெளியே இருக்கிறது. க்ஷத்ரியனான யதுராஜனின் வம்சத்தில் வசுதேவ மற்றும் தேவகியருக்கு மகனாக ஸ்ரீகிருஷ்ணன் அவதரித்தான். பிராமணரான வசிஷ்டரின் வம்சத்தில் பராஷர மற்றும் சத்யவதி தேவியருக்கு மகனாக ஸ்ரீவேதவியாச தேவர் அவதரித்தார். இவரில் பேதம் இல்லை. நாராயணன், க்ஷாத்ர, பிராமண குலத்தில் அவதரித்தான். ஞான பக்தி வைராக்யத்தினாலேயே ஜீவனுக்கு நலன் உண்டாகிறது. இத்தகைய க்ஷேமத்தை உருவாக்குவதற்கு உங்களின் ஹனும (பீம-மத்வ) அந்தர்கத ஒளிரும்படியான ஸ்ரீகிருஷ்ண வேதவியாசாத்மக ஸ்ரீ ஹரியை பிரார்த்தனை செய்தவாறு, அனந்த பிரணாமங்களை அர்ப்பித்தவாறு, என் நமஸ்காரங்கள்.

**[ஸ்லோகம் 27]**

கச்சன் ஸௌகந்திகார்த்தம் பதி ஸ ஹனுமத: புச்சமச்சஸ்ய
பீம:
ப்ரோத்தர்த்தும் நாஷகத் ஸ த்வமும் உருவபுஷா பீஷயாமாஸ
சேதி ।
பூர்ணஞானௌஜஸோஸ்தே குருதமவபுஷோ: ஸ்ரீமதானந்த
தீர்த்த
க்ரீடாமாத்ரம் தததேத் ப்ரமதத ஸூதியாம் மோஹக
த்வேஷபாஜாம் ||27

**ப4ரதனே பீ4மாவதாரதி3**
**பரிமளத3 ஸௌக3ந்திகார்த்த2தி3**
**த்வரதி3 போக3லு மார்க்க3த3லி ஹனுமந்த பா3லவனு**
**கரதி3 எத்தலு அஷக்தனாத3ந்**
**த3ரிப தொ3ட்3ட3 ஷரீரத3லி ப்ருத2**
**வ(கெ)ரட3னெ மக3னஞ்சிஸித3 ஹீகெ3ந்து3 தவ மஹிமெ || 57**

**த்3வேஷ மாடு3வ தை3த்ய நரிகெ3**
**மோஸ மோஹக ஞானிக3ளிகி3து3**
**தோ3ஷ கொடு3வது கு3ருதமானந்தா3ர்யநந்தின்னா**
**லேஸூ அவதாரக3ள பரி பூ**

**ர்ணாஸு ஞானத³ ப³லகெ க்ரீட³ வி**
**லாஸ தீ³ வபுக³ளு யெனுத திளிவரு ஸுஜனரெல்லா ||58**

1000 இதழ்களைக் கொண்ட, நறுமணமுள்ள, தங்கமயமான சௌகந்திகா புஷ்பத்தை திரௌபதி விரும்பியபோது, அதைக் கொண்டு வர பீமசேனன் சென்றார். அப்போது கந்தமாதன பர்வதத்தை தாண்டிக் கொண்டிருந்தபோது, வழியில் அமர்ந்திருந்த ஹனுமந்த தேவரைக் கண்டு வாலினை நகர்த்தச் சொன்னார். 'வாலை சரிப்படுத்திவிட்டுப் போ' என்று ஹனுமந்தன் கூற, பீமசேனரால் வாலை நகர்த்த முடியவில்லை. இதனைக் காணும் அஞ்ஞானிகளுக்கு பீமசேனன் தோற்றுப் போனார் என்னும் தவறான ஞானம் உண்டாகிறது. ஆனால் இது உங்களின் லீலை என்று ஞானிகள் அறிவார்கள். சஜ்ஜனர்களுக்கு வரும் தவறான ஞானத்தை பரிகரித்து, விசேஷ ஆனந்தத்தைக் கொடுக்கும் தீர்த்த என்றால் – சாஸ்திரத்திற்கு; அத்தகைய சாஸ்திர சர்வமூல கிரந்தங்களை இயற்றியிருக்கும் மூன்றாம் அவதாரம் எனப்படும் குருதமர் எனப்படும் ஆனந்ததீர்த்தர் என்னும் பெயர் காரணப் பெயர் ஆகிறது. இத்தகையவருக்கு நம் வணக்கங்கள்.

**[ஸ்லோகம் 28]**

பஹ்வீ: கோடீரடீக: குடில கடு மதீன் உத்கடாடோப கோபான்
த்ராக் ச த்வம் ஸத்வர த்வாச்சரணத கதயா
ப்ரோதயாமாஸிதாரீன் |
உன்மத்யா தத்ய மித்யாத்வவசன வசனான்
உத்பதாஸ்தாம்ஸ்ததா஽ன்யான்
ப்ராயச்ச: ஸ்வப்ரியாயை ப்ரியதம குசுமம் ப்ராண தஸ்மை
நமஸ்தே ||28

**ஷரணரிகெ³ ஸம்ரக்ஷிஸுத ஸ்ரீ**
**ஹரிய தோரிஸி கொடு³வ ப்ராணனெ**
**து³ரபு³த்³தி⁴ கட்டு குடில ஹெச்சித³ கெங்கி³டி³ய கோப**
**தி³ருவ ப³ஹு கோடி¹க³ள ஸங்க²யத³**
**அரிக³ளன ஸம்ஹரிஸலோஸுக³**

**த்வர க$^{3}$மனதி$^{3}$ம் க$^{3}$தெ$^{3}$யிந்தீ$^{3}$பரி காதி$^{3}$ ஷீக்$^{4}$ரத$^{3}$லி ||59**

**ஒள்ளெ மார்க்க$^{3}$வ பி$^{3}$ட்ட ப$^{3}$த்$^{3}$த$^{3}$தி$^{3}$**
**ஸுள்ளு வசனவ ஹேள்த$^{3}$ வாக்$^{1}$யதி$^{3}$**
**ப$^{3}$ல்லித$^{3}$ரு எந்தெ$^{3}$னிப மத்தெ கெலவு தை$^{3}$த்யரனா**
**கொல்லுதலி த்வர ப்ரீயளெனிஸுவ**
**நல்லி த்$^{3}$ரௌபதி$^{3}$ ப்ரீதி அதிஷய**
**உள்ள ஸௌக$^{3}$ந்தி$^{4}$கவ கொட்டானிலனெ நமோ நினகெ$^{3}$ ||60**

ஷரணத என்றால் ரட்சகன். ஸ்ரீஹரி அனைவரின் ரட்சகன். ப்ராணதேவர் மத்வராயர் சாஸ்திரங்களால் ஸ்ரீஹரியை அறியுமாறு செய்கிறார். சத்பக்த – சுஜனர்களுக்கு எப்போதும் ஹரியை தியானிக்குமாறு பிரேரணை செய்து, அகக்கண்களில் ஸ்ரீரங்கனை காணுமாறு அருள்கிறார். இவ்வாறு பக்தர்களை காக்கும் உங்களுக்கு அனந்த நமஸ்காரங்கள். விஷ்ணு த்வேஷிகளான, மித்யாவாதிகளான, லட்சக்கணக்கான தைத்யர்களுடன் போர் புரிந்து அவர்கள் அனைவரையும் கதாயுதத்தினால் கொன்றீர்கள். த்ரௌபதி தேவியின் விருப்பத்தின்படி, 81,000 யோஜனை தூரம் இருக்கும், 75,000 யோஜனை உயரம் இருக்கும் கந்தமாதன பர்வதத்தில் இருக்கும் குபேரனின் பட்டணத்திற்குச் சென்று, அங்கிருக்கும் சௌகந்திகா கமல சரோவரத்திற்கு பாய்ந்தாய். 'குடிலகடுமதீன்' ஆன மணிமந்த ஆகிய தைத்யர்களை கொன்ற பீமசேனதேவரின் மிகச்சிறப்பான வலிமைக்கு நமோ நம:. பிறகு, குபேரனுடன் போர் புரிந்து, வென்று, ஸௌகந்திகா புஷ்பத்தை த்ரௌபதிக்குக் கொண்டு வந்து கொடுத்த உங்களின் சாமர்த்திய வாத்ஸல்யத்திற்கு அனந்த பிரணாமங்கள்.

**[ஸ்லோகம் 29]**

தேஹாதுத் க்ராமிதானாமதிபதி ரஸதாமக்ரமாத் வக்ரபுத்தி:
க்ருத்த: க்ரோதைகவஷ்ய: க்ரிமிரிவ மணிமான் துஷ்க்ருதி நிஷ்க்ரியார்த்தம் |
சக்ரே பூ சக்ரமேத்ய க்ரகசமிவ ஸதாம் சேதஸ: கஷ்டசாஸ்திரம்

துஸ்தர்க்கம் சக்ரபாணீ் குணகண விரஹம் ஜீவதாம்
சாதிக்ருத்ய ||29

**ஷரீர தொ3ளு ம்யாலெ க3த3 ப்ர**
**ஹரதி3 ஹோடிஸி3த்3யாக3 ஸஜ்ஜன**
**து3ருள தை3த்யாதீ4ஷ குடிலத3 பு3த்3தி4யுள்ளவனு**
**பரம கோபதி3 து3ஷ்டஜந்துன**
**பரிய க்ரோத4க முக்2ய வாஸனா**
**நிருத து3ஷ்கர்மவுள்ள மணிமந்தனெம்ப3 ராக்ஷஸனு ||61**

**ஹிரிதனதி3 பூ4 சக்ரவனு ஸஞ்**
**சரிஸி சக்ரவ கரதி3 பி1டி3தி3ஹ**
**ஹரிகெ3 கு3ண க3ண சே2தி3ஸுத ஜீவைக்ய ஸ்தா2பிஸுதா |**
**பரம ஸஜ்ஜன மனகெ கரக3ஸ**
**பரியு வேத3 விருத்3த4 யுக்தியலி**
**பரிபரிய கஷ்டவனு கொடு3திஹ ஷாஸ்த்ர மாடி3த3னு ||62**

கந்தமாதன பர்வதத்தில் சௌகந்திகா கமல சாகரத்தை காக்கும் 300 கோடி அசுரர்களை பீமசேனன் சம்ஹாரம் செய்த கோபத்தால், மணிமந்த என்னும் அசுரன் இந்த பூமியில் பிறந்தான். பாஹு பலத்தினாலும், வாக் பலத்தினாலும் வாயுதேவரை வெல்வது அஸாத்தியம் என்றபோது 'கஷ்டஷாஸ்த்ர' - ஹரி விரோத – ஜீவ ஐக்ய சாஸ்திர (குஷாஸ்திர)த்தை இயற்றி சஜ்ஜனர்களின் புத்தியை கெடுக்குமாறு செய்து நரகத்திற்கு வழிகாட்டி ஆனான். ஸ்ரீஹரி – ஜகத்ஜன்மாதி காரணன். ஸ்ருஷ்டிகர்தன், ஸர்வ வியாப்தன். சார்வதோஷ தூரன். அனந்த கல்யாண குணபரிபூர்ணன். ஞானானந்தமயன். அப்ராக்ருதன். நித்யத்ருப்தன். கைவல்யதாத என வேத ஆகம சாஸ்திரங்கள் பகவந்தனை போற்றிக் கொண்டிருக்கும்போது, மணிமந்தன் இதற்கு எதிராக சாஸ்திரங்களை இயற்றினான்.

**[ஸ்லோகம் 30]**

தத் துஷ்ப்ரேக்ஷானுஸாராத் கதிபய குனரைராத்ருதோऽன்யைர் விஸ்ருஷ்டோ
ப்ரம்மாஹம் நிர்குணோऽஅம் விததமித மிதி ஹ்யேஷ பாஷண்டவாத: |
தத் யுக்த்யாபாஸ ஜால ப்ரஸர விஷ தரூத்தாஹ தக்ஷ ப்ரமாண
ஜ்வாலா மாலா தரோக்னி: பவன விஜயதே தேऽவதார ஸ்த்ருதீய: ||30

**நானெ பி3ரம்மனு நிர்கு3ணனு நா**
**காணிஸுத ஜக3வெல்ல மித்2யம்**
**ஹீன ஆ ஸங்கரன து3ர்பு3த்தியனு அனுஸரிஸி**
**க்ஷோனியொளு பாஷண்ட3 கெலர**
**ஞானிக ஸ்தி2த புருஷரிகெ3 ப3ஹு**
**காணிஸிது ஆத3ரவு அன்யைரிகெ3ல்ல பி3ட்டிஹது3 ||63**

**ப4ரத ஆ ஸங்கரன ப3த்3த4த3**
**மருளு யுக்தி ஸமூஹ ஹரவித3**
**க3ரள வ்ருக்ஷவு ஸுடு3வத3கெ படு1வெந்த3 வாக்யெம்ப3**
**உரிய மாலிகெ த4ரிஸி இஹ தவ**
**நிரமலத3 த்1ருதியாவதாரவு**
**த4ரெயொள ஸ்தி2ர அக்3னி ப3ஹளுத் க்ருஷ்டவாகி3ஹது3 ||64**

‘நானே பரபிரம்மன்’, ‘நான் நிர்குணன்’. இந்த பிரபஞ்சம் பொய். என்னும் வாதத்தை – வேதத்திற்கு எதிரான பாஷண்டி வாதத்தை சிலர் ஏற்றுக் கொண்டனர். இப்படியான மாயாவாத, யுக்திகள், விஷச்செடிகளைப் போல வேகமாக அனைத்து இடங்களிலும் பரவியபோது, ‘ஹே பவன தே த்ருதீய: அவதார: விஜயதே’ என்று சொல்வதைப் போல வாயுதேவரின் மூன்றாம் அவதாரியாக ஸ்ரீமன் மத்வாசார்யரின் அவதாரம் ஆயிற்று. விஷ மரங்களின் காட்டிற்கு – மாயாவாதிகளின் வனத்திற்கு ஸ்ரீமத்வாசார்யர் காட்டுத்தீ போன்று, பிரமாணங்களின் ஜ்வாலா

மாலையைப் போல மாறி, குவாதிகளின் மாயாவாதத்தை வென்றார்.

**[ஸ்லோகம் 31]**

ஆக்ரோஷந்தோ நிராஷாபயபர விவஷ ஸ்வாஷயாஷ் சின்னதர்ப்பா:
வாஷந்தோ தேஷனாஷ ஸ்த்விதி பத குதியாம் நாஷமாஷா தஷாsஷு |
தாவந்தோsஷ்லீல ஷீல விதத ஷபதஷாபாஷி வா:ஷாந்த ஷௌர்யா: |
த்வத் வ்யாக்யா ஸிம்ஹனாதே ஸபதி தத்ருஷிரே மாயி கோமாயவஸ்தே ||31

**பூர்ணப்ரக்ஞாசார்யரே தவ**
**சாரு வாக்$^{2}$யானெம்ப$^{3}$ ஸிம்ஹத$^{3}$**
**வீர க$^{3}$ர்ஜனெ கேளி ஸோதிஹ மாயிக$^{3}$ளு எம்பா$^{3}$**
**க்ரூர நரிக$^{3}$ளு ப$^{3}$ஹ பரஸ்பர**
**பீ$^{3}$ரித$^{3}$ரு ஜய இச்செ பொய்திந்**
**தீ$^{3}$ ரீதி கங்கெ$^{3}$டு$^{3}$த ப$^{4}$ரத$^{3}$லி பரவஷதி$^{3}$ தம்ம ||65**

**து$^{3}$ருள அபி$^{4}$ப்ராயவனு சே$^{2}$தி$^{3}$ஸு**
**திரலு க$^{3}$ர்வின குஸ்தி$^{2}$தத$^{3}$ மதி**
**ப$^{4}$ரிதரெல்லரு தே$^{3}$ஷ ஷரீரகெ நாஷவெந்தெந்தா$^{3}$**
**ஸ்சர்யத$^{3}$லி கூகு$^{3}$தலி த$^{3}$ஷதி$^{3}$ஷ**
**குரிது ஓடு$^{3}$த க்$^{3}$ராம்யகர்மதி$^{3}$**
**வ்யரத$^{2}$ ஷபதா$^{2}$ ஷௌர்ய அரிவரு காணிஸுவரெல்ல ||66**

ஸ்ரீபூர்ணப்ரக்ஞாசார்யர், ஹரிசர்வோத்தமத்வ, பஞ்சபேத, தாரதம்ய, மத்வ சித்தாந்தத்தைப் பற்றி ப்ரவசன செய்தபோது, நரிகள் இத்தகைய சிம்மத்தின் கர்ஜனையைக் கேட்டு, மிகவும் பயந்து திசை தடுமாறி ஓடி தப்பித்துக் கொள்வதைப் போல – மாயாவாதி, பாஷண்டவாதிகள் என்னும் நரிகள், தம் ஸ்தானங்களிலிருந்து ஓடினர். மாயாவாதி குவாதிகள், ஸ்ரீமத்வாசார்யரின் பிரமாணம், ப்ரமேயங்களின் யுக்திக்கு

தோற்றபோது, ஷபத – ஷாபங்களால் ஸ்ரீமன் மத்வாசார்யருக்கு மாயாவாதிகள் கடும் தவறுகளை செய்கின்றனர். ஆனால், அனைத்தும் பலனற்று, பலம் அற்று, ஒன்றாக சேர்ந்து 'அஷிவ' களை இழந்தவர்கள் ஆயினர். உங்களின் 'தத்வவாதத்தின்' சிம்ம கர்ஜனை ஸ்ரீலட்சுமி நரசிம்ம தேவருக்கு ப்ரியமாக இருக்கிறது. உங்களின் அந்த சிம்ம கர்ஜனையானது, தத்வ சித்தாந்த மேரு பர்வதத்தில், ஸ்ரீஹரிபக்தரின், தாச வரேண்யரின் இதய குகையில் இன்றைக்கும் தெளிவாக ப்ரதிபலிக்கிறது. இந்த த்வனி எனக்கு எப்போதும் மோத பிரமோதத்தை கொடுத்துக் கொண்டு இருக்கட்டும்.

**[ஸ்லோகம் 32]**

த்ரிஷ்வப்யே வாவதாரேஷு அரிபிரப க்ருணம் ஹிம்ஸிதோ நிர்விகார:
ஸர்வக்ஞ: ஸர்வஷக்தி: ஸகலகுணகணா பூர்ணரூப ப்ரகல்ப: |
ஸ்வச்ச: ஸ்வச்சந்த ம்ருத்யு: ஸுகயஸி ஸுஜனம் தேவ கிம் சித்ரமத்ர
த்ராதா யஸ்ய த்ரிதாமா ஜகதுத வஷகம் கிங்கரா:ஷங்கராத்யா: ||32

**மருதனே க்ரீடா3தி3 கு3ணக3ள**
**ப4ரித தவ த்ருதியாவ தாரதி3**
**அரிக3ளலி த3ய ரஹிதனாகி3 ப3டி3யலு ஸரியே |**
**ஸருவ ஷக்தி ஞான கு3ண க3ண**
**ஷரீர ப்ரௌடா4த3ந்த2 ஷ்வேச்சா**
**மரண உள்ளவ நீனு ஸுஜனர தோ1ஷப3டி3ஸுதஹீ ||67**

**மூரு மனெக3ள உள்ள ஸ்ரீஹரி**
**தாரகனு ஜக3வெல்ல தீ4னவு**
**மாரரிபு மொத3லாத3 தி3விஜரு எல்ல கிங்கரரு**
**மாருதன ஆ மஹிமெ எமகெ3**
**ஸூரிஜன ஸுக ப3டி3ப விஷயதி3**
**தோருவரெ ஆயாஸ நினகி3து3 ஏனு ஆஸ்சர்ய ||68**

ஸ்ரீமத் ஹனும அவதாரத்தில் அரக்கி சிம்ஹிகை உங்களை கொல்ல வேண்டும் என்றபோது, இந்திரஜித் தன் பிரம்மாஸ்திரத்தால் உங்களை கட்டியபோது, பீமாவதாரத்தில் விஷபிரயோகம், பாம்புகளால் கடிக்க வைத்தது, தண்ணீர் குளத்தில் அழுத்தியபோது, அரக்கு மாளிகையில் தீ வைத்தபோது, மத்வ அவதாரத்தில் மணிமந்தன் பாம்பின் ரூபத்தில் வந்தபோது, குடிபாடித்தாய, மூடம்பாடித்தாய ஆகியோர் உங்களை கொல்ல வந்தபோது, வாயுதேவராக, சிறிதும் கவலைப்படாமல், அவர்களின் முயற்சியை தோற்கடித்தீர்கள். கிஷ்கிந்தா பர்வதத்தின் அருகில் ஸ்ரீராமசந்திரன் வந்து நின்றபோது, முதன்முதலில் ஆன தரிசனத்தில் ஸ்ரீராமனின் சர்வோத்தமத்வ குண, ஸ்வாதந்த்ர்ய, நிர்தோஷத்வ, அனந்தகல்யாண குணங்களை வணங்கி, சர்வக்ஞர் என அழைக்கப்பட்டீர்கள். பீம அவதாரத்தில் குருகுல அக்ஷோஹிணி சைன்யத்தை நாசம் செய்து, சர்வஷக்த: என்று அழைக்கப்பட்டீர்கள். மத்வ அவதாரத்தில் சர்வ மூல கிரந்தங்களை இயற்றி, பூர்ணப்ரக்ஞ எனப்பட்டீர்கள். அனந்தாஸன ஷ்வேதத்வீப வைகுண்ட மூன்று உலகத்தின் அதிபதியான ஸ்ரீஹரியின் பூர்ண அருளுக்குப் பாத்திரரான நீங்கள் சஜ்ஜனர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறீர்கள்.

**[ஸ்லோகம் 33]**

உத்யன்மந்த ஸ்மிதஸ்ரீ ம்ருதுமதுமதுரா லாபபீயூஷ தாரா
பூராஸே கோபஷாந்தா ஸுகஸுஜன மனோ
லோசனாபீயமானம் |
ஸந்த்ரக்ஷ்யே ஸுந்தரம் ஸம் துஹதிஹ மஹதானந்த
மானந்ததீர்த்த
ஸ்ரீமத் வக்த்ரேந்துபிம்பம் துரிதனுதுதிதம் நித்யதாsஹம் கதா நு ||33

**ஹரியு நித்யதி$^{3}$ தோரி கொடு$^{3}$திஹ**
**ஹருஷ தீர்த்த$^{2}$னெ உத$^{3}$யிஸித$^{3}$ தவ**
**கி$^{1}$ரி நகெ$^{3}$ய காந்தியலி ம்ருது$^{3}$ மது$^{4}$ மது$^{4}$ரவசனவெம்பா$^{3}$**

**ஷரதி$^4$ ப$^4$வ தா$^4$ரெக$^3$ள ஸமூஹவு**
**கரியெ அ ஸுக$^2$வு நஷ்டவாகி$^3$ஹ**
**பரமஸுஜனர மனஸு கண்ணனுப$^4$விப ஸௌந்த$^3$ர்யவு ||69**

**நா மொத$^3$லு ப$^3$ஹு ப$^4$க்த ஜனரிகெ$^3$**
**பூ$^4$மியொளு மஹ ஸுக$^2$வ கொடு$^3$தலி**
**தாமஸத$^3$ பாபவனு பரிஹாரவனு மாடு$^3$தலி |**
**ப்ரேமத$^3$லி ப்ரஸன்னவாகி$^3$ஹ**
**ஸ்ரீ மத் வக்த்ரேந்து$^3$பி$^3$ம்ப$^3$வு**
**ஸ்வாமி கேளுவாக$^3$ நா சன்னாகி$^3$ கண்டே$^3$னு ||70**

ஸ்ரீமதானந்த தீர்த்தர் ஆனந்த பரிபூர்ணனான ஸ்ரீஹரியை எப்போதும் வணங்கியவாறு, ஆனந்ததாயகமான சாஸ்திரத்தை இயற்றி, தம்மில் நிஷ்டை உள்ள பக்தர்களுக்கு நற்சாஸ்திரங்களின் மூலம் ஸ்ரீஹரியை அந்தரங்கத்தில் காணுமாறு செய்வித்தவாறு முமுக்ஷுகளுக்கு மோக்ஷானந்தத்தை கொடுக்கிறார். ஸ்ரீஹரியின் அனந்த ரூபங்களுக்கு சாட்சாத் ப்ரதிபிம்ப ரூபமானவர் வாயுதேவர். இந்த மூல பிம்பரூபத்தின், மற்றும் அதன் சாட்சாத் ப்ரதிபிம்பரூபத்தின் தரிசனமே பிம்பசாட்சாத்காரம். சந்திர மண்டலத்தைப் போல இருக்கும் ஸ்ரீமத்வாசார்யரின் முகத்திலிருந்து வெளிவரும் புன்னகையின் வளர்பிறையைப் போன்ற ஒளி, சஜ்ஜனர்களின் பாவங்களை பரிகாரம் செய்து, அவர்களுக்கு சுகத்தைக் கொடுக்கிறது. ஸ்ரீமன் மத்வாசார்யரின் ம்ருது நுடிகளில் அமிர்தத்தின் சாறு நிரம்பி வழிகிறது. ஸ்ரீமதானந்த தீர்த்தரின் முகம் உதயசந்திரனைப் போல, பேசிய வாக்குகள் முத்து மணிகளைப் போல ஒளிர்கிறது. அதன் அர்த்தங்களில் அதிமதுரமான தேன் நிரம்பியிருக்கின்றன. இத்தகைய சுக தீர்த்தரின் வாக்கு, எனக்கு எப்போதும் சுகத்தைக் கொடுக்கட்டும்.

**[ஸ்லோகம் 34]**

ப்ராசீனாசீர்ண புண்யோச்சய சதுரதரா சாரதஸ்சாருசித்தான்
அத்யுச்சாம் ரோசயந்தீம் ஸ்ருதி சிதவசனாம்
ஸ்ராவகாம்ஸ்சோத்ய சஞ்சூன்
வ்யாக்யாமுத் காததுக்காம் சிரமுசித மஹாசார்ய
சிந்தாரதாம்ஸ்தே
சித்ராம் ஸச்சாஸ்த்ர கர்தஸ்சரண பரிசராம்
ஸ்ராவயாஸ்மாம்ஸ்ச கிஞ்சித் ||34

**நிரது3ஷ்ட பா4ஷ்யதி3 ஷாஸ்த்ர**
**கரதனே மஹ யோக்3ய பூஜா**
**சரண மத்4வாசார்ய பூர்வத3 ஜன்மத3லி மாட்3தா3 |**
**பரிபரிய புண்யக3ள ஸமூஹதி3**
**பரம சாதுரராத3வர ஆ**
**சரணெயிந்த3லி மனோஹரத3 மனதி3ந்த3 பி1ரஷ்னெத3லி ||71**

**ப3லு ப்ரஸித்3த4ரு ஆத3 ஸ்ரோத்ரிய**
**க3ள குரிது அத்யந்த காந்திய**
**ப3லதி3 ப3ஹு உத்க்ருஷ்ட து3க்க2வ களெவ ஸ்ருதியல்லீ |**
**கலத வாக்ய விசித்ரதி3ந்த3லி**
**ஹேளுவ வ்யாக்2யானவனு த்4யானதி3**
**நிலிஸி இஹ தவ பாத3கிங்கர(கெ) கேளிஸுவத3ல்வா ||72**

ஸ்ரீமதாசார்யர் இயற்றிய நற்சாஸ்திரங்களை படிக்க வேண்டும். அவற்றின் பிரவசனங்களைக் கேட்டு வாழ்க்கையை பவித்ரமாக்கிக் கொள்ள வேண்டும். சாஸ்திர ஸ்ரவணத்தினால் ஞான. ஞானத்தினால் பக்தி. பக்தியினால் முக்தி. ஆகவே, ஆசார்யரின் சாஸ்திரங்களின் ஸ்ரவணம் செய்ய வேண்டும். ஆசார்யரின் வியாக்யான, பாஷ்யங்கள் ஸ்ரீஹரியின் மகிமையை மிகவும் அற்புதமாக விளக்குகின்றன. பாகவத, பாரத, ராமாயணங்களுக்கு தாத்பர்ய நிர்ணய கிரந்த, தத்வ சித்தாந்தங்களின் கண்ணாடி போல இருக்கிறது. ஆசார்யரின் அருள் ஸ்ரீஹரியின் கருணையால் பாவத்தின் மூலமாக துக்கங்கள் விலகுகின்றன. ஆகவே, ஆசார்யரின் சாஸ்திர

சிரவணத்தை எப்போதும் கேட்குமாறு பாக்கியத்தை ஆசார்யர் அருளட்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

**[ஸ்லோகம் 35]**

பீடே ரத்னோபக்லப்தே ருசிரருசி மணிஜோதிஷா ஸன்னிஷண்ணம்
ப்ரம்மாணம் பாவினம் த்வாம் ஜ்வலதி நிஜபதேவைதிகாத்யா ஹிவித்யா:
ஸேவந்தே மூர்த்திமத்ய: ஸுசரித சரிதம் பாதி கந்தர்வ கீதம்
ப்ரத்யேகம் தேவஸம்ஸ்த்வபி தவபகவன் நர்திதத்யோவதூஷு ||35

**சரித ஷுப4 மத்4வார்ய நிஜபத3**
**கிரண மனோஹர மாணிகத3 ப்ரபெ4**
**வர ப்ரகாஷத3 ரத்ன க்லப்ததி3 மாட3பட்டந்தா2 |**
**ஹிரிய ஆஸனத3ல்லி சன்னா**
**கி3ருவ பா4வீ பி3ரம்மவனிப தவ**
**சரண ஸ்தோத்ரவு வேத3ஸம்ப3ந்த4 புராணக3ளு ||73**

**மொத3லு வித்3யவ மூர்த்திக3ளு ப3ஹு**
**முத3தி3 ஸேவெய மாள்பரஹுத3லா**
**ஸத3மலின பூஜ்யாத3 மத்4வனெ ஸர்த1னவ மாள்ப |**
**த்ரித3ஷலோகத3 அப3லெயரு ஸபெ4**
**எது3ரினலி க3ந்த4ர்வப்ரத2(க்) ப்ரத2**
**கொத3ரி காயனதி3ந்த3 தவ மஹிமெயனு ஒப்புவது ||74**

அடுத்த கல்பத்தில் பிரம்மதேவரின் பதவிக்கு இந்த வாயுதேவர் வருகிறார் ஆகையால், சத்ய லோகத்து சபையில் நவரத்ன கசிதமான மாணிக்க முத்து ரத்னங்களால் ஒளிர்வதான சிம்மாசனத்தில் யுவராஜனாக அமர்ந்து ஒளிர்கிறாய். நீங்கள் வரும்போது - ஹனும, பீம, மத்வ என்னும் மூன்று அவதார ரூபங்களாலும், மூலரூபத்தினாலும் நீங்கள் செய்திருக்கும் லீலைகளை – கந்தர்வர், அப்ஸரஸ் ஆகியோர் பாடுகிறார்கள். பாடலுக்கு ஏற்ப நடனமாடுகிறார்கள். அனைத்து வித்யாபிமானி

தேவதைகளும் நிஜ சரீரத்தில் வந்து, ஸ்ரீமன் மத்வாசார்யரை வணங்குகின்றனர். இத்தகைய சபையில் கந்தர்வர்கள் பாடுகிறார்கள்.

**[ஸ்லோகம் 36]**

ஸானுக்ரோதைரஜஸ்ரம் ஜனி ம்ருதி நிரயாத்யூர்மி மாலாவிலே஽ஸ்மின்
ஸம்ஸாராப்தௌ நிமக்னான் சரணமஷரணான் இச்சதோ வீக்ஷ்ய ஜந்தூன் ।
யுஷ்மாபி: ப்ரார்த்தித: ஸன் ஜல நிதிஷயன: ஸத்யவத்யாம் மஹர்ஷே
ர்வ்யக்தஸ்சின் மாத்ர மூர்தினகலு பகவத: ப்ராக்ருதோ ஜாதுதேஹ: ||36

**ஜனன ம்ருத நர்கெம்ப3 த2ரெக3ள**
**க4னதி3 மாலிகெ கலுஷதி3 ப4வ**
**வனதி4யலி முணகி3 நிஜரக்ஷகரன்ன காணத3லெ ।**
**மனதி3 இச்சிஸி ரக்ஷக ப்ராணக3**
**ளனு நோடி3 த3ய ஸஹித நிம்மா**
**நனதி3 ப்ரார்த்த2னெ கேளி ஜலநிதிஷயன ஸத்யவதி ||75**

**பராஷர ரிஷியிந்த3 ஞான**
**ஷரீர மூர்த்யபி4வ்யக்தனாத3னு**
**நாராயணகீ3 ப்ராக்ருதன ஜட3தே3ஹ எந்தெ3ந்து3**
**ஸேரலிரியது3 எந்து3 பேள்வரு**
**ஸூரிஜனரா மஹிமெ எல்லா**
**மாருதனெ நீ ப3ல்லி அன்யரிகெ3ல்ல அளவட3து3 ||76**

சம்சார சாகரம் பயங்கரமாக இருக்கிறது. கடல் அலைகளைப் போல - புனரபி ஜனனம், புனரபி மரண’. பிறப்பு இறப்புகளின் அலைகளில் வாழ்க்கை நிரந்தரமாக அல்லாடிக் கொண்டிருக்கிறது. இந்த ஜீவனுக்கு அலைகளின் அடி மேலிருந்து விழுந்து கொண்டிருந்தால், மனைவியர், மக்கள், ஆகியோரின் மோகம் என்னும் முதலை, திமிங்கிலம்

கீழிலிருந்து இழுக்கிறது. ஜீவர்களின் த்ரிவித ராஷிகளில் சிலர் முக்தி யோக்யர்கள், இன்னும் சிலர் எப்போதும் சம்சாரத்தில் இருக்கும் நித்ய சம்சாரிகள். மேலும் சிலர் நித்ய நரகானுபவ யோக்யர்கள் இருக்கின்றனர். முக்தி யோக்யர்களை சம்சாரத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்னும் விருப்பத்தினால், இவர்களுக்காக ஹரியை பிரார்த்தனை செய்தபோது 'ஸத்யவதி பராஷரரின் மகனாக' ஸ்ரீவியாசரூபத்தினால் ஜலநிதிஷயனன் அவதரித்தான். ஹரியின் அவதாரம் என்று சொல்லும் அனைத்து ரூபங்களும் ஞானானந்தமய சரீர - அப்ராக்ருத தேகம் உள்ளவை ஆகும்.

**[ஸ்லோகம் 37]**

அஸ்தவ்யஸ்தம் சமஸ்த ஷ்ருதிகதமதமை ரத்னபூகம் யதாந்தை
ரர்த்தம் லோகோபக்ருத்யை குணகண நிலய: சூத்ரயாமாஸ க்ருத்ஸ்னம் |
யோऽஸௌ வ்யாஸாபிதான ஸ்தமஹ மஹரஹர் பக்தித: த்வத் ப்ரஸாதாத் |
ஸத்யோ வித்யோபலப்த்யை குருதமமகுரும் தேவதேவம் நமாமி ||37

**குருட$^3$ரெத$^3$ரிகெ$^3$ மாணிகத$^3$ ரா**
**ஷிரிஸித$^3$ரெ தோர்த$^3$ந்தெ அத$^4$மரு**
**ஸருவ வேதா$^3$ர்த்த$^2$வனு திளியதெ$^3$ அன்யதா$^2$ர்த்த$^2$வனு |**
**விரசிஸித$^3$ரெ கு$^3$ணக$^3$ணகெ மனெயா**
**கி$^3$ருவ வேத$^3$வ்யாஸ ஹெஸரின**
**ஹரியு ஞானிக$^3$ளிகெ$^3$ல்லரிகெ$^3$ உபகார கோ$^3$ஸ்கரவு ||77**

**ஸ்ருதிய அர்த்த$^2$வ ஸூத்ரதி$^3$ந்த$^3$லி**
**ப்ரதிபாதி$^3$ஸந்த$^2$ வியாஸன**
**அதி அனுக்$^3$ரஹதி$^3$ந்த$^3$ வித்$^4$யெய ப்ராப்திகோ$^3$ஸுக$^3$வு |**
**ப்ரதிதி$^3$ன கு$^3$ருரஹித கு$^3$ருதம**
**அதுள ஸுக்ஞானரஸத$^3$ ஸத்ய**
**வதிய குவரகெ$^3$ ஆனு ப$^4$க்திலி நமன மாடு$^3$வெனு ||78**

ஸ்ரீஹரி, ஸ்ரீவேதவியாஸ ரிஷிகளாக அவதரித்தார். வேதங்களின் தொகுப்பினை பிரித்து, ரிக்வேத, யஜுர்வேத, ஸாமவேத, அதர்வ வேதங்களாக, நான்கு பிரிவுகளாக பிரித்து, இவற்றின் விளக்கங்களாக 18 புராணங்களை, மகாபாரதத்தை மற்றும் இவற்றிற்கு முகுடமாக பிரம்மசூத்ரங்களை இயற்றினார். பிரம்ம சூத்ரங்களின் ஆதாரத்தினால் வேதங்களின் சரியான அர்த்தத்தை அறியலாம். வேதவியாஸர் அனைத்து ஞானிகளுக்கும் ஞானப்ரதர். ஸ்ரீபிராணதேவருக்கு வேதவியாசர் குருவாக இருக்கிறார். விலைமதிப்பற்ற மற்றும் மாணிக்க ரத்னங்களைப் போலவும், வேதார்த்தங்களின் மாலை போலவும் இருக்கும், மிகப்பெரிய பரிசான, பிரம்ம சூத்ரங்களைக் கொடுத்து, வேதவியாசர் மிகச்சிறந்த உதவியை செய்திருக்கிறார். ஸ்ரீமத்வாந்தர்கத வேதவியாச தேவருக்கு அனந்தானந்த நமஸ்காரங்கள்.

**[ஸ்லோகம் 38]**

ஆஞ்ஞாமன்யைரதார்யாம் ஷிரஸி பரிஸரத்
ரஷ்மிகோடிரகோடௌ
க்ருஷ்ணஸ்யாக்லிஷ்ட கர்மா தத தனுஸரணா தர்த்திதோ
தேவஸங்கை: |
பூமாவாகத்ய பூமன்னஸுகர மகரோத் பிரம்மஸூத்ரஸ்ய
பாஷ்யம்
துர்பாஷ்யம் வ்யஸ்ய தஸ்யோர் மணிமத உதிதம் வேதஸத்
யுக்திபி ஸ்த்வம் ||38

**ஞான ஆனந்தா$^{3}$தி$^{3}$ ஸம்பத$^{3}$**
**மானி ஶ்ரீ மத்$^{4}$வார்ய எல்லரி**
**கே$^{3}$னு த$^{4}$ரிஸலஷக்தவாகி$^{3}$ஹ வ்யாஸராக்$^{3}$ஞெயனு |**
**நீனு தாளுவ நால்கு தி$^{3}$க்கிகெ$^{3}$**
**காணிஸுவ ப்ரபெ$^{4}$ கிரீடத$^{3}$ஞ்சின**
**மாணிகவ ஷிரதி$^{3}$ட்டு க்லேஷக$^{3}$ளில்லதி$^{3}$ஹ கர்மா ||79**

**உள்ளவனெ ஸுரஸமூஹ ப்ரார்த்த$^{2}$னெ**
**ஸொல்லிக$^{3}$சலதி$^{3}$ ப$^{3}$ந்த$^{3}$ ராக்ஷஸ**

**கள்ள மணிமந்தனிந்த3 உத3ஸித3 து3ஷ்டவாக்யவனு |**
**எல்ல வேத3க3ளிந்த3 நிர்மல**
**ப3ல்லத்3யுக்திலில ஞ்ஞானிக3ள ஷ**
**க்யல்லத3ந்தா2 பி3ரம்ம ஸூத்ரத3 பா4ஷ்யரசிஸிதி3யோ ||80**

வேதவியாசரால் இயற்றப்பட்ட பிரம்ம சூத்ரங்களுக்கு பாஷ்யம் இயற்றிய மணிமந்த முதலான குவாதிகள், ஹரிசர்வோத்தமத்வத்திற்கு, வேதங்களுக்கு அபசாரம் செய்தனர். அப்போது ஸ்ரீஹரியின் ஆணைப்படி நீங்கள் அவதரித்து, ஹரியின் சங்கல்பத்தைப் போல பிரம்மசூத்ரங்களுக்கு உண்மையான அர்த்தம், வேதங்களுக்கு, சஜ்ஜனர்களுக்கு சரியாக புரியுமாறு, சந்தேகங்களை தீர்ப்பதற்கும், பாஷ்யங்களை ஸ்ரீமன் மத்வாசார்யர் இயற்றினீர்கள். ஸ்ரீஹரியின் ஆணைக்கேற்ப நீங்கள் தலை வணங்கியபோது, நீங்கள் தரித்த ரத்ன மணிமுகுடத்தின் ஒளி அனைத்து உலகங்களையும் ஒளிர்விக்கிறது. இத்தகைய ஜீவோத்தமருக்கு அனந்த நமஸ்காரங்கள்.

**[ஸ்லோகம் 39]**
பூத்வா க்ஷேத்ரே விஷுத்தே த்விஜகண நிலயே
ரௌப்யபீடாபிதானே
தத்ராபி பிரம்மஜாதி ஸ்த்ரிபுவன விஷதே மத்யகேஹாக்ய
கேஹே |
பாரிவ்ராஜ்யாதிராஜ: புனரபி பதரீம் ப்ராப்ய க்ருஷ்ணம் ச
நத்வா
க்ருத்வா பாஷ்யாணி சம்யக் வ்யதனுத ச பவான் பாரதார்த்த
ப்ரகாஷம் ||39

**பூர்ணப்ரக்ஞார்யனே நீ**
**தா4ருணிகெ3 ஷுத்3தா4த3 த்3விஜரிகெ3**
**ஜாரு ஆலய ரஜதபீட2புரவு வெம்ப3ஹெஸரா |**
**மூரு லோககெ க்2யாதவாகி3ஹ**
**ஊரொளாத3ரு நடுமன்யாக்2யா**
**கா3ரத3லி பி3ராமணனாக3(கு3)த்யா அதி4பத்யரிகெ3 ||81**

**ஒடெய நாகு3த புனஹ பத3ரிகெ3**
**நடெ3து3 வேத3வ்யாஸதே3வர**
**அடி3கெ3 நமனவ மாடி3 பா4ஷ்யாதி3க3ள ரசிஸுதலி |**
**பொட3வியொளு பா4ரதத3 அர்த்த2கெ1**
**கடு3 தேஜ தாத்பரிய நிரணய**
**பி3ட3தெ3 யாவத்3ரஸப4ரித சென்னாகி நீ மாட்3தீ3 ||82**

பரிசுத்தமான பாஜக க்ஷேத்திரத்தில், மத்யகேஹரின் இல்லத்தில் ஸ்ரீமத்வாசார்யர் அவதாரம் செய்தீர்கள். ஏழாம் வயதில் இவருக்கு உபனயனம் ஆயிற்று. ஸ்ரீஅச்யுத ப்ரேக்ஷாசார்யரிடமிருந்து சன்யாசம் ஏற்றீர்கள். பிறகு பதரி க்ஷேத்திரத்திற்குச் சென்று, ஸ்ரீவேதவியாசரிடம் வித்யாபியாசம் செய்து, அவரின் ஆணையைப் பெற்று, பிரம்மசூத்ரங்களுக்கு பாஷ்யம், அணுபாஷ்ய, நியாயவிவரண, 10 உபநிஷத்களுக்கு பாஷ்யம், கீதா தாத்பர்ய நிர்ணய, மகாபாரத தாத்பர்ய நிர்ணய, த்வாதஷ ஸ்தோத்திர, யதி பிரணவகல்ப, ஜயந்தி நிர்ணய, க்ருஷ்ணாம்ருத மஹார்ணவ, யமக பாரத, ஸதாசார ஸ்ம்ருதி, தந்த்ரசார சங்க்ரஹ, நரசிம்ம நகஸ்துதி என 37 சர்வமூல கிரந்தங்களை இயற்றினார். இத்தகைய கிரந்தகாரருக்கு, பூர்ணப்ரக்ஞாசார்யருக்கு என் அனந்தானந்த நமஸ்காரங்கள்.

**[ஸ்லோகம் 40]**

வந்தே தம் த்வா ஸுபூர்ண ப்ரமதி மனுதினா ஸேவிதம் தேவ வ்ருந்தை
ர்வந்தே வந்தாருமீஷே ஸ்ரீய உத நியதம் ஸ்ரீமதானந்த தீர்த்தம் |
வந்தே மந்தாகினி ஸத்ஸரித மலஜலா ஸேக ஸாதிக்ய ஸங்கம்
வந்தேஹம் தேவ பக்த்யா பவபயதஹனம் ஸஜ்ஜனான் மோதயந்தம் ||40

**எலோ பூர்ணப்ரக்ஞ ப்ரஸித்த4னெ**
**சலுவ நின்னனு நானு வந்தி3பெ**
**ப3லு தி3விஜரிந்தெ3ல்ல கடெ3யலி ப்ரதிதி3னதி3 ஸேவெ**

**கொ3ளுவ பரிபூர்ண ப்ரக்ருஷ்டத3**
**ஹொளெவ ஞானத3 தோ1ஷதீர்த்த2னெ**
**கொ1ளுவதெ3ன்னய நமன பர மாது மன விஷயத3லி ||83**

**தருவாய ஷிரியல்லி நமனவ**
**நிருத மாள்பானந்த3தீரத2**
**கு3ருவெ நிமகொ3ந்தி3ஸுவெ பா4கீ3ரதி2 அமல ஜலதி3**
**ஷரீர தொளெத3 த3க1தி4க1 ஸங்க3தி**
**மருத ப4வ ப4ய ஸுடு3வி ஸம**
**க்ஞாரன மோதி3ப தே3வ நின்னனு ப4க்திலொந்தி3ஸுவெ ||84**

ஸ்ரீபிராணதேவரை 14 உலகங்களில் இருக்கும் அனைத்து தேவதைகள் மற்றும் பக்தர்கள் அத்யந்த பக்தியுடன் வணங்குகின்றனர். ருஜுகணத்தைச் சேர்ந்த ப்ராணபதியை, தஷப்ரமதி, பூர்ணப்ரக்ஞர் என்று புகழ்கின்றனர். பளித்தா ஸூக்த மற்றும் ரிக்வேதத்தில் பிராணதேவர் மத்வ என்னும் பெயரால் அழைக்கப்படுகிறார். மத்வ சாஸ்திரத்தை படித்தவர்களுக்கு இஹலோகத்தில் சுகம், பர லோகத்தில் முக்தி கிடைக்கிறது. கங்கா ஸ்னானம் செய்வதைவிட அதிக பலன், மத்வ சாஸ்திரத்தை படித்தபோது கிடைக்கிறது. ஆனந்ததீர்த்தரின் அதாவது, ஸ்ரீகுரு வாயுதேவரின் சாஸ்திர மகிமைகளை மனனம் செய்தபோது, அனைத்து பாவங்களும் களைந்து பவித்ரம் ஆகிறோம். ஆகவே, ஸ்ரீஹரியில், ஸ்ரீமன் மத்வாசார்யரில் பக்தி செய்தபோது, த்யானம் செய்தபோது, சுக-ஆனந்த, ஞான-முக்தி கிடைக்கிறது. ஆகவே, ஸ்ரீஹரி வாயு குருகளை நிரந்தரமான தியானிக்கும் / வணங்கும் ப்ரேரணை கொடுக்கட்டும் என்று வணங்கியவாறு அனந்தானந்த நமஸ்காரங்களை சமர்ப்பிக்கிறேன்.

**[ஸ்லோகம் 41]**

சுப்ரமண்யாக்ய ஸூரே:ஸுத இதி சுப்ருஷம் கேஷவானந்த தீர்த்த
ஸ்ரீமத் பாதாப்ஜ பக்த: ஸ்துதிமக்ருத ஹரேர் வாயுதேவஸ்ய சாஸ்ய |

தத் பாதார்ச்சாதரேண க்ரதித பத லஸன் மாலயா த்வேதயா யே
ஸம்ராத்யா மூ நமந்தி ப்ரததமதிகுணா முக்தி மேதே வ்ரஜந்தி ||41

இதி ஸ்ரீமத் கவிகுல திலக த்ரிவிக்ரம பண்டிதாசார்ய விரசித வாயுஸ்துதிః ஸமாப்தః ||

**த4ரிகெ3 ஸுப்ரமண்ய வித்3வாம்**
**ஸரிகெ3 ஸுத அத்யந்த சதுர்முக2**
**ஹரி நியாமக மோத3தீர்த்த2ர ஸம்பத்தினா பத3**
**ஸரிஸிஜகெ அதி ப4க்தனாகி3ஹ**
**வர த்ரிவிக்ரம பண்டி3தாசார்யரு**
**து3ரிதஹர ஸ்ரீஹரிகெ3 மாதகெ3 பூர்வரீதி ஸ்துதி**
**மாடி3தெ3னு ஞானிக3ள நன்னிம் ||85**

ஸ்ரீமத் ஜகன்னாத தாசார்யரின் பரமப்ரிய சிஷ்யரான லிங்கசுகூரின் அபரோக்ஷ ஞானிகளுமான ஸ்ரீபிராணேஷ விட்டலர் இயற்றிய பாமினி ஷட்பதி - ஸ்ரீஹரி வாயுஸ்துதி இங்கு முடிவுற்றது. ஸ்ரீஹரி ருத்ரதேவரின் அருளால், ஸ்ரீசுப்ரமண்ய பண்டிதாசார்யருக்கு மகனாக, த்ரிவிக்ரம பண்டிதாசார்யர் பிறந்தார். அத்வைத மதத்தின் முக்கிய பண்டிதராக இருந்தார். ஆனால் அவரில் அந்த சித்தாந்தத்தைப் பற்றி சந்தேகமும் குழப்பங்களும் இருந்தன. ஸ்ரீமதாசார்யர் கேரளத்தின் விஷ்ணுமங்கல ஆலயத்திற்கு சஞ்சாரத்தில் வந்தபோது, த்ரிவிக்ரம பண்டிதாசார்யர் தம் சந்தேகங்களுக்கு ஆசார்யரிடமிருந்து தீர்வினை கேட்டுக் கொண்டு; மத்வருக்கு சிஷ்யராக ஸ்ரீஹரி வாயுஸ்துதி இயற்றி தம் குருபக்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். மத்வாசார்யர் பதரி நாராயணனின் பூஜை செய்யும்போது மூன்று அவதாரங்களால் நாராயணனின் அர்ச்சனை செய்வதைக் கண்டு, மெய்மறந்து அவரின் மகாத்மயத்தை வாயுஸ்துதியில் விவரித்திருக்கிறார். சம்ஸ்கிருத ஸ்லோகங்களுக்கு ஸ்ரீபிராணேஷ தாசர் கன்னட

பாமினியில் அனுவாதம் செய்திருக்கிறார். இரு கவிகளுக்கும் மனப்பூர்வகமான அனந்தானந்த நமஸ்காரங்கள்.

**மாடி3தே3னு க்ஞானிக3ளு நன்னிந்தா3டி3தா3 ஹரி**
**ஹருஷ தீர்த்த2ர ஜோடு3 பாத3க்கெ ஆத3ரதி3 மாலிகெய**
**ஏஸெவந்தெ நோடி3 சென்னாக3ர்சிஸிப்பர நீடி3 நமன**
**க்ஞானிக3ளு**
**நலிதா3டி3 ப3லு அபரோக்ஷத3லி மோக்ஷவனு ஐது3வரு || 86**

என்னிடமிருந்து வந்த இந்த ஸ்துதி மாலிகையை, ஞானிகள், ஹரிவாயுகளின் பாதங்களில் மிகவும் பக்தி மரியாதையுடன் சமர்ப்பிக்குமாறு செய்து, இந்த ஸ்துதியைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடி, மோட்சத்திற்கான ஸாதனமான அபரோக்ஷ ஞானத்தின் ஸாதனைகளை அடைவார்கள்.

**வரத்ரிவிக்ரம பண்டி3தாசார்யரு பத3ரிகாஷ்ரமதி3**
**மோதா3ர்யர ஸரீரதி3 ஹனுமதா3கார கண்டி3தாக்ஷணதி3**
**மருதஸ்ருதி மாடி3ரலு கன்னட3 விரசிஸதெனித்துத3னெ**
**ஸுஜனரெ கருணதி3ந்த3லி தந்தெ3 பிராணேஷவிட்டல**
**நுடி3ஸிஹனு ||87**

ஸ்ரேஷ்டரான த்ரிவிக்ரம பண்டிதாசார்யர், பதரியில் ஸ்ரீமத்வரின் ஷரீரத்தில், ஹனும பீமர்களைக் கண்டவுடன் செய்த இந்த சம்ஸ்கிருத வாயுஸ்துதியை, ப்ராணேஷ விட்டலன், மிகவும் கருணையுடன் கன்னடத்தில் இயற்றச் செய்திருக்கிறான்.

***

**ஹரி: ஓம் ஸ்ரீலட்சுமி நரசிம்மாய நம:**
**ஸ்ரீ ஹரி வாயு ஸ்துதி:**

பாந்த்வஸ்மான் புருஷூத வைரி பலவன் மாதங்க மாத்யத் கடா
கும்போச்சாத்ரி விபாடனாதிகபடு ப்ரத்யேக வஜ்ராயிதா: |
ஸ்ரீமத் கண்டீரவாஸ்ய ப்ரதத ஸுனகரா தாரிதாராதி தூர
ப்ரத்வஸ்த த்வாந்த ஷாந்த ப்ரவிதத மனஸா பாவிதானாகி வ்ருந்தை: ||1

லட்சுமிகாந்த: ஸமந்ததோsவி கலயன் நைவேஷிதுஸ்தே ஸமம்
பஷ்யாம்யுத்தம வஸ்தூதூர தரதோsபாஸ்தம் ரஸோ யோsஷ்டம: |
யத் ரோஷோத்கர தக்ஷ நேத்ர குடில ப்ராந்தோத்திதாக்னி ஸ்புரத்
கத்யோதோபம விஸ்புலிங்க பஸிதா: பிரம்மேஷ ஷக்ரோத்கரா:

இதி ஸ்ரீமதானந்த தீர்த்த பகவத்பாதாசார்யர் விரசித நரசிம்ம நகஸ்துதி சமேத ஸ்ரீகவிகுலதிலக த்ரிவிக்ரம பண்டிதாசார்ய விரசித ஹரிவாயுஸ்துதி: ஸம்பூர்ண: ||
||ஸ்ரீமத்வாந்தர்கத ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||

ஸ்ரீஸீதாபதி ஸ்ரீராமசந்திர் ப்ரஸன்ன
ஸ்ரீ ஹனுமத்பீம மத்வாந்தர்கத ராமகிருஷ்ண
வேதவியாஸாத்மக ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவாய நம:
ஸ்ரீமத்வராஜ குருப்யோ நம:
ஸ்ரீராகவேந்திர தீர்த்த குருப்யோ நம:
ஸ்ரீலட்சுமி நரசிம்ம நகஸ்துதி:

ஸ்ரீஹரி தேஷ கால ப்ரக்ருதி குணங்களில் பரிபூர்ணனாகி, சர்வத்ர வ்யாப்தனாக இருக்கிறான். தோஷங்கள் அற்றவனாக ஞானானந்தமய அப்ராக்ருத ஷரீரனாக இருக்கிறான். அனந்த நாம, அனந்தரூப, அனந்த வியாபாரங்களை செய்யும்

மங்களாத்மகனாக இருக்கிறான். 'ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்' (தன் பக்தனுக்கு கொடுத்த வசனத்தை உண்மையாக்குவதற்காக) ந ம்ருகம் ந மானுஷம் - ஸ்ரீமத் கண்டீரவாஸ்ய - ஸ்ரீலட்சுமி ஸமேதனாகி, கம்பத்தை உடைத்து, வெளிப்படுகிறான். கர்விஷ்டனான ஹிரண்யகசிபுவைக் கொன்று, பிரகலாதனை காப்பதற்கு கோடி சூரியனைப் போல உதித்திருக்கிறான்.

யானையின் மதத்தைப் போல துர்-அஹங்காரத்தின் மலையைப் போல இருக்கும் தைத்யனின் வதைக்காக, நரசிம்மனின் ரூபத்தை எடுத்து, வஜ்ர ஆயுதங்களைப் போல இருக்கும் நகங்களால் தைத்யனின் உடலைக் கிழித்தான். அனைத்து பக்தர்களின் கஷ்ட துக்கங்களை, பரிகரிக்கும், பரிபூர்ண இச்சா ஷக்தி உள்ள ஸ்ரீ நரசிம்மதேவரின் வஜ்ர நகங்கள் அனைத்து பக்தர்களின் அனைத்து கஷ்டங்களையும் பரிகரிக்கின்றன.

இத்தகைய நரஹரியின் நகங்கள் என்னையும் காப்பாற்றட்டும் என்று வேண்டுகிறேன். பிரளய காலத்தில் ஸ்ரீ நரசிம்மதேவரின் மூன்று கண்கள் கோபம்கொண்டு கங்குகளைப் போல தெரிகிறது. அந்த கண்களின் கோபப் பார்வையில், பிரம்மாதி தேவதைகளின் சமூகமே சுட்டுப் பொசுங்கியது. இத்தகைய அபாரமான சக்தி உள்ள உலகத்தை படைப்பவனும், காப்பவனும், அழிப்பவனும் ஸ்ரீஹரியே ஆனதால், ஸ்ரீநரஹரியே சர்வோத்தமன் என்பது தெரிகிறது. இதைப் போல ஹரி கருணைக்கடலாக தன் பக்தர்களுக்கு கைவல்ய சத்கதிகளையும், தாமஸ ஜீவிகளுக்கு அதோகதியையும் கொடுக்கும் சக்தியாக இருக்கிறான். இவனே சர்வோத்தமன், புருஷோத்தமன் என்று வேதங்கள் போற்றுகின்றன. இத்தகைய ஸ்ரீஹரி வாயு தேவர், குருகள் எனக்கு பக்தியை ஞானத்தை அருளட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**|| ஸ்ரீமத்வாந்தர்கத ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||**

***